

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | அக்டோபர் 07, 2010 | புரட்சி 9 | முழக்கம் 39 | விலை: ரூ.2.50


# திருச்சியில் போர்க்கோலம்!





படம்: திண்டுக்கல் பீட்டர்

சாதி தீண்டாமைக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காகவே தமிழக அரசு காவல்துறையில் 'மனித உரிமைப் பிரிவு' என்ற தனிப் பிரிவை உருவாக்கியுள்ளது. தீண்டாமைக் குற்றங்களைத் தடுத்து நிறுத்த வேண்டியது இப்பிரிவுக்குரிய பொறுப்பு. ஆனால், தமிழக கிராமங்களில் தீண்டாமை பல்வேறு வடிவங்களில் பின்பற்றப்பட்டு வருவதை தொண்டு நிறுவனங்கள் கள ஆய்வு செய்து, விவரங்களுடன் அறிக்கைகளாக வெளியிட்டுள்ளன. பெரியார் திராவிடர் கழகமும் பல்வேறு பகுதிகளில் பின்பற்றப்படும் தீண்டாமையின் வடிவங்களை ஊர், பெயர் விவரங்களுடன் பட்டியலிட்டது. நடவடிக்கை எதையும் காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு எடுக்கவில்லை. எனவே செயல்படாத காவல்துறைப் பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தை பெரியார் திராவிடர் கழகம் அறிவித்தது. கடந்த ஏப்ரல் 14 ஆம் தேதி அம்பேத்கர் பிறந்த நாளன்று போடியில் கழகம் பரப்புரை இயக்கத்தைத் தொடங்கியது. 28 நாட்கள் பரப்புரை நடந்து, புதுவையில் நிறைவடைந்தது. இரண்டாவது கட்டமாக செங்கை

(4 ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## திருச்சியில் திரண்டோம்!

‘பெரியார் தொடங்கினார்; நாங்கள் முடிப்போம்’ என்ற முழக்கத்தோடு, பெரியாரின் இளைஞர் படை திருச்சி மாநகரிலே போர்க்கோலம் பூண்டு நின்றது.

இளைஞர்களும், மாணவர்களும், சாதி தீண்டாமைக்கு எதிராக ஆவேசமாகப் புறப்பட்டு வந்தார்கள். இந்த இளைஞர்கள் ‘இலாப வேட்டை’ நடத்தும் அரசியல் வலைக்குள் சிக்கிக் கொள்ள விரும்பாதவர்கள்; அதிசய மானவர்கள். பொது வாழ்க்கையை பிழைப்புக்கான முதலீடாக மாற்றும் வாழ்க்கையை வெறுத்து ஒதுக்கியவர்கள்; வாழ்வியலுக்கு கொள்கையை அடையாளமாக்கிக் கொள்ளத் துடிப்பவர்கள்; பெரியாரைப் பார்க்காதவர்கள்; பெரியாரை லட்சியமாகவும், உணர்வாகவும் ஏற்றவர்கள்; இவர்கள் பெரியார் பரம்பரையின் மூன்றாவது, நான்காவது தலைமுறை!

1957 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் நாள் அரசியல் சட்டத்தை எரித்து, மாதங்களாகவும், ஆண்டுகளாகவும், சிறையில் வாடிய – மாண்ட கொள்கை வீரர்களின் வாரிசுகளாக தங்களை வரித்துக் கொண்டவர்கள். அவர்கள் பதித்த தடத்தில் நடைபோட வந்தவர்கள். நாட்டில் எத்தனையோ சாதிக் கட்சிகள் இருக்கின்றன. சாதித் தலைவர்கள் அழைத்தால், சாதி உணர்வோடு, அதே சாதியில் பிறந்தவர்கள், எளிதில் திரண்டு விடுவார்கள். அவர்களின் மக்கள் தொகை எண்ணிக்கையை அங்கே கணக்கிட்டு விடலாம். கூட்டம் பெரிதாகத்தான் இருக்கும். போக்குவரத்துகள் நிலைகுலைந்து நிற்கும். ஆனால், அவர்கள் சாதி வட்டத்துக்குள் தங்களை புதைத்துக் கொண்டவர்கள். சமூக நலனை புறந்தள்ளிவிட்டு சாதிக்காகக் கொடி பிடிப்பவர்கள்.

நாட்டில் பல அரசியல் கட்சிகள் இருக்கின்றன. சட்டமன்ற உறுப்பினர்களாகவும், நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் கட்சி மட்டத்தின் நிர்வாகிகளாகவும், அதிகாரக் கனவுகளில் மிதக்கக் கூடியவர்கள். இருப்பதை தக்க வைத்துக் கொள்ள துடிப்பவர்கள். இவையெல்லாம் அவர்களின் வாழ்க்கைக்கான பொருளீட்டல்; மூலதனம்; கொள்கை லட்சியம் என்பதற்காகவே அரசியல் கட்சிகளை இறுக்கிப் பிடித்து நிற்பவர்கள் என்பவர்கள் எல்லாம் இப்போது வெகு அபூர்வம். இந்தக் கட்சிகளுக்கு ஆயிரமாயிரமாய், ஏன் லட்சக்கணக்கில் கூட்டம் கூடுவதில் வியப்பு ஏதும் இல்லை. ஆளும் கட்சி என்றால், அரசு பேருந்துகள், அவர்களை இலவசமாக அழைத்து வரக் காத்திருக்கும். போய் வந்தால் கை நிறைய பணம். கேளிக்கை வசதிகள் அத்தனையும் உண்டு. எதிர்க்கட்சி என்றாலும் ஆளும் கட்சியாக அமர வேண்டும் என்ற துடிப்பு அவர்களை இயக்குகிறது. ‘சொந்த நலன்’ என்ற பார்வையோடு கூடுகிற கூட்டங்கள் இவை.

இவை எல்லாவற்றுக்கும் மாறாக சொந்த நலன் ஏதுமின்றி சமூகத்துக்காக சாதிகளைக் கடந்து, சாதி ஒழிப்பு முழக்கத்தோடு ஒரு கூட்டம் கொள்கைக்காக போராட வருகிறது என்றால், அவர்களை அதிசயமானவர்கள் என்று கூறுவதா? அபூர்வமானவர்கள் என்று கூறுவதா? எப்படி இது சாத்தியம் என்று வியப்பதா? இந்த வியப்புகளுக்கான விடை – பெரியாரியத்தில் அடங்கியிருக்கிறது. அந்த லட்சியத்தில் அடங்கியுள்ள உண்மையான மானுட விடியல்தான் – இந்த இளைஞர்களை இப்படிக் கட்டிப்போட்டிருக்கிறது. பெரியாரியல் என்ற இலட்சியத்தை நோக்கி ஓடி வருகிற போராளிகள், இளைஞர்கள் எண்ணிக்கையில் சில ஆயிரம் பேர்தான். ஆனால், லட்சங்களில் கூடிக் கலைகிறவர்களை விட இவர்கள் வலிமையானவர்கள்; சாதிக்கக் கூடியவர்கள்; சமூகப் போக்கை நிர்ணயிக்கக் கூடியவர்கள். இத்தகைய மதிப்பு மிக்க வலிமை வாய்ந்த கொள்கையாளர்களின் பாசறையாக பெரியார் திராவிடர் கழகம் திகழ்கிறது என்பதை மீண்டும் நிரூபித்திருக்கிறது, கழகத்தின் திருச்சிப் போராட்டம்.

போராட்டத்தின் வழியாக கிடைத்த உற்சாகத்தை ஊக்கத்தை அடுத்த கட்டத்தின் செயல்பாடுகளுக்கு அடித்தளமாக்குவோம்.

இயக்கத்தின் வலிமையை மேலும் கூட்டுவதற்கு உரமாக்குவோம்.

பெரியார் விட்டுச் சென்ற லட்சியங்களுக்காக, இதோ, இளைஞர் படை ஒன்று, புயலாய் புறப்பட்டு வரும் சேதியை நாட்டுக்கே கூறுவோம்.

வாழ்க்கையை கொள்கையாக்கி, கொள்கையை வாழ்க்கையாக்குவோம்.

தனி மனித துதிகள் இல்லாத தத்துவ முகாம் ஒன்று இங்கே தனித்துவமாக பெரியாரியலை உயர்த்திப் பிடிக்கும் உண்மையை நான்கு திசைகளுக்கும் எடுத்துச் செல்வோம்.

திருச்சியை திணற வைத்த கொள்கைச் சுடர்களே! நீங்கள், புதிய திருப்பத்தைத் தந்து விட்டீர்கள்!

# 2 மணி நேரம் தொடர்ந்த கைது

**திருச்சிப் போராட்டக் களத்திலிருந்து....**

- கைதாக முன் வந்த தோழர்களை ஏற்றிச் செல்ல போதுமான வாகனங்கள் இல்லாமல் காவல் துறை திணறியது. 12.30 மணிக்கு கழகத் தோழர்களை கைது செய்யத் தொடங்கிய காவல்துறை, பகல் 2.25 மணி வரை வரிசையாக வாகனங்களில் ஏற்றிக் கொண்டே இருந்தனர்.
- தோழர்களை வைப்பதற்கு இடமின்றி மண்டபங்கள் நிரம்பி வழிந்தன. 5 திருமண மண்டபங்களில் தோழர்களை காவல்துறை இறக்கி விட்டது. மண்டபங்களுக்குள்ளே நகர முடியாத அளவுக்கு நெருக்கடி. மண்டபத்துக்கு வெளியிலும், வீதியிலும் தோழர்கள் நிற்க வேண்டியதாகி விட்டது.
- மிக அதிகமாக 300 பேர் மட்டுமே இருக்க கூடிய மீனாட்சி திருமண மண்டபத்தில் 800க்கு மேற்பட்ட தோழர்களை காவல்துறை கொண்டு போய் குவித்தது. வேறு வழியின்றி, வீதியில் நிற்க வேண்டியிருந்த தோழர்களிடம், வடநாட்டு காவல்துறை அதிகாரி ஒருவர் கடுமையாகப் பேசவே, தோழர்கள் சாலைகளில் அமர்ந்து, “தங்குவதற்கு இடம் ஏற்பாடு செய்; அல்லது உடனே சிறைக்கு அனுப்பு” என்று சாலை மறியிலில் ஈடுபட்டனர். கெடுபிடி செய்த வடநாட்டு அதிகாரி, வாயை மூடிக் கொண்டார்.
- கைதானவர்களில் 200 பேர் பெண்கள்; பலர் குழந்தைகளுடன் கைதானார்கள்.
- கருப்புச் சட்டையுடனும், பெரியார் உருவம் பொறித்த சட்டைகளுடனும், இளைஞர்களும், மாணவர்களுமே போராட்டத்தில் நிறைந்திருந்த காட்சி உணர்ச்சிகரமாக திகழ்ந்தது.
- இழுத்துப் பூட்டும் போராட்ட அறிவிப்பு அச்சடிக்கப்பட்ட கருப்பு பனியன்களையும் ஏராளமான தோழர்கள் அணிந்திருந்தனர்.
- கைதான தோழர்களுக்கு முழுமையாக அனைவருக்கும் மதிய உணவு வழங்காத காவல்துறை, பேரளவுக்கு சில நூறு பொட்டலங்களை மட்டும், அதுவும், ஓரிரண்டு மண்டபங்களில் மட்டும் வழங்கியது. கழக சார்பில் அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்து வழங்கப்பட்டது.
- திண்டுக்கல் மாவட்டக் கழகத் தலைவர் துரை. சம்பத், அவரது பொறுப்பில் 2500 உணவுப் பொட்டலங்களை தயாரித்து தனி வாகனத்தில் திண்டுக்கல்லிருந்து கொண்டு வந்து வழங்கினார். திருச்சியில் 1500 உணவுப் பொட்டலங்களை ஏற்பாடு செய்து வழங்கினார் மாவட்ட செயலாளர் மனோகரன்.
- “டாஸ்மாக்கில் ஒற்றைக் குவளை;
  தேனீர்க் கடைகளில் இரட்டைக் குவளையா ?”

  “செந்தமிழ் நாடெனும் போதினிலே - துன்பத்
  தீண்டாமை பாயுது காதினிலே.”

  “பறையன் பட்டம் ஒழியாமல்;
  சூத்திரன் பட்டம் ஒழியாது.

  “பெரியார் தொடங்கினார்;
  நாங்கள் முடிப்போம்.”

  “பார்ப்பனரைத் தவிர கருவறையில் சூத்திரர், பஞ்சமரும் தீண்டப்படாதவர்களே”

  “தீண்டாமை ஒழிப்புப் பிரிவு.... கொர்.... கொர்.... குறட்டை”

  - போன்ற வாசகங்கள் அடங்கிய தட்டிகளை தோழர்கள் கரங்களில் ஏந்தியிருந்தனர்.
- திருப்பூர் இராவணன், சண்முகம், கோபி அர்ஜுன், துரை, பழனி இளங்கோ, சுப்ரமணியன், சென்னை நாத்திகன், கொடுமுடி பாண்டியன், மேட்டூர் முத்துராசு, அரியலூர் வில்பர்ட், பெரம்பலூர் சுதாகர் ஆகிய தோழர்கள் திருச்சியில் 10 நாட்கள் முகாமிட்டுப் போராட்டத்துக்கான களப் பணிகளைச் செய்தனர்.
- போராட்டத்தை ஏராளமான பொதுமக்கள் பார்த்தனர். பெரியார் இயக்கத்தில் இவ்வளவு இளைஞர்களா ? என்ற வியப்பைத் தெரிவித்தனர். தோழர்கள் அணி வகுத்து நின்ற பகுதியில் கதர் தள்ளுபடி விற்பனையைத் தொடங்கி வைக்க வந்திருந்த தமிழக போக்குவரத்துத் துறை அமைச்சர் நேருவும், அணிதிரண்டிருந்த கழகத்தினரைப் பார்த்தார்.
- திருச்சியில் தீண்டாமைச் சுவர் உள்ள கல்லறைப் பகுதியைச் சார்ந்த பொது மக்கள் 75 பேரும் இந்தப் போராட்டத்தில் பங் கேற்றனர். புதுவையில் ‘அம்பேத்கர் தொண்டர் படை’ அமைப்பைச் சார்ந்த தோழர்கள், தோழர் மூர்த்தி தலைமையிலும், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணியைச் சார்ந்த தோழர்கள் வழக்கறிஞர் ரஜினிகாந்த் தலைமையிலும், மதுரை, திருப்பூரிலிருந்து தனிப் பேருந்துகளிலிருந்து வந்து கலந்து கொண்டனர். கரூர் தமிழர் முன்னணி அமைப்பினரும், ஆதித் தமிழர் பேரவைத் தோழர்களும் போராட்டத்தில் பங்கேற்றனர். மே 17 இயக்கத் தோழர்கள் திருமுருகன் தலைமையில் கலந்து கொண்டனர்.

  சேலம், தாரமங்கலம் பகுதியைச் சார்ந்த 3 பெண்கள் (ஆசிரியைகள்), நாலுரோடு பகுதியைச் சார்ந்த சில இளைஞர்கள், இணையதளம், சுவரெழுத்து வழியாக போராட்டம் பற்றி அறிந்து, தாங்களாகவே பங்கேற்று கைதானார்கள். மண்டபங்களில் தாங்களாகவே தோழர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு இதைக் கூறினர்.
- போராட்டம் கழகத் தோழர்களிடையே மிகுந்த எழுச்சியையும், நம்பிக்கையையும் ஏற்படுத்தியது. புறக்கணிக்கப்பட்ட ஒரு சமுதாயப் பிரச்சினைக்குப் போராடிய மனநிறைவோடும், அடுத்த கட்ட களப்பணிகளுக்கு தயாராகும் வேகத்தோடும் தோழர்கள் விடை பெற்றுச் சென்றனர்.

**– நமது செய்தியாளர்**

# அண்ணா நினைவு நாள் வரை அரசுக்குக் கெடு!

“தமிழ் நாட்டில் தீண்டாமைக் கொடுமைகள் தொடருகின்றன; நடவடிக்கை எடுக்க வேண்டிய காவல்துறையின் கவனத்தை ஈர்க்கவே இந்த இழுத்துப் பூட்டும் போராட்டத்தை அறிவித்தோம். நாங்கள் நினைத்திருந்தால் போராட்டத்தை அறிவிக்காமலே பல இடங்களில் இந்தப் பிரிவை இழுத்துப் பூட்டியிருக்க முடியும். ஆனால், அதை போராட்டமாக அறிவித்து நடத்துவதன் நோக்கம் - காவல்துறை, தீண்டாமைக் குற்றங்களை வேடிக்கைப் பார்க்காமல் செயல்படவேண்டும் என்று வற்புறுத்துவதற்குத் தான். இதற்கு அரசியல் நோக்கம் எதுவும் எங்களுக்கு கிடையாது. சமுதாயக் கவலையோடுதான், இந்தப் போராட்டத்தில் இறங்கியிருக்கிறோம். எந்த கட்சி அதிகாரத்தில் இருந்தாலும், இந்தப் போராட்டத்தை நாங்கள் நடத்துவோம்” என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி கூடியிருந்த தோழர்களிடம் பேசுகையில் குறிப்பிட்டார்.

“தீண்டாமைக் குற்றங்களைத் தடுக்கும் நடவடிக்கைகளில் இனியாவது காவல்துறை திருப்தியடைகிற அளவுக்கு செயல்பட வேண்டும். அண்ணா நினைவு நாளான பிப்ரவரி 3 ஆம் தேதிக்குள் காவல்துறை தீண்டாமையை அமுல்படுத்தும் தேனீர் கடைகள், முடித்திருத்தகங்கள் போன்ற அமைப்புகள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த 40 நாள் இடைவெளியில் திருப்தித் தரும் நடவடிக்கைகளை எடுக்காவிட்டால், நாங்களே தீண்டாமைக்கு எதிராக நேரடி நடவடிக்கைகளில் இறங்குவதைத் தவிர வேறு வழியில்லை” என்று பலத்த கரவொலிக்கிடையே கொளத்தூர் மணி அறிவித்தார்.

“அரசு திட்டங்களான அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்; நமக்கு நாமே திட்டம் போன்ற திட்டங்களிலேயே தீண்டாமையைப் பின்பற்றி, தனித்தனி சுடுகாடுகள் அமைக்கப்படுவது, தீண்டாமைத் தடுப்புச் சட்டங்களுக்கு எதிராக அரசே செயல்படுவதாகும். அத்தகைய தீண்டாமைகள் அகற்றப்பட வேண்டும். இல்லையேல் சட்டத்தை அமுல்படுத்தும் கடமையை நாங்களே ஏற்று, தீண்டாமைச் சுவர்களை அகற்றுவோம்” என்றும் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அறிவித்தார்.

# போராட்டக் காட்சிகள்

























படங்கள்: பீட்டர், கோகுலகண்ணன்

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# கைதானோர் 2471

கோவை மாவட்டத்திலிருந்து 7 பேருந்துகள், ஒரு வேன்களில் வந்து கைதான தோழர்கள் **513**. வடவள்ளி, கணபதி, அன்னூர் பொள்ளாச்சி, உடுமலை, சூலூர், மேட்டுப்பாளையம் பகுதியிலிருந்து தோழர்கள் வந்திருந்தனர். இதில் 22 பேர் பெண்கள்.

சேலம் மாவட்டத்தில் மேட்டூர், கொளத்தூர், காவலாண்டியூர், இளம்பிள்ளை, சேலம் நகரம், மேட்டூர், ஆர்.எஸ்., மேச்சேரி, சிந்தாமணியூர், ஆத்தூர் பகுதிகளிலிருந்து 5 பேருந்து 4 வேன்களில் வந்து பங்கேற்ற தோழர்கள் **378**. இதில் 15 பேர் பெண்கள்.

தென்சென்னை மாவட்டத்திலிருந்து 3 பேருந்துகளிலும், வடசென்னை மாவட்டத்திலிருந்து ஒரு பேருந்திலும், ஆக 4 பேருந்துகளில் வந்து பங்கேற்ற தோழர்கள் **260**. இதில் 22 பேர் பெண்கள்.

புதுவையிலிருந்து 5 பேருந்துகளில் வந்து பங்கேற்ற தோழர்கள் எண்ணிக்கை **255.**

திருப்பூர், பல்லடம் பகுதியிலிருந்து 2 பேருந்து, 2 வேன்களில் வந்து பங்கேற்ற தோழர்கள் **170** பேர். இதில் பெண்கள் 10 பேர்.

ஈரோடு, கோபி, குருவாரெட்டியூர், பவானி பகுதியிலிருந்து 2 பேருந்து, ஒரு வேனில் வந்து கலந்து கொண்ட தோழர்கள் **121** பேர். இதில் பெண்கள் 5 பேர்.

திண்டுக்கல் மாவட்டத்திலிருந்து பங்கேற்ற தோழர்கள் **121** பேர்.

திருச்சியில் தீண்டாமைச் சுவர் உள்ள கல்லறைப் பகுதியிலிருந்து 50 பொது மக்களும், 20 கழகத்தினரும் ஆக **70** பேர் போராட்டத்தில் பங்கேற்றனர்.

நாகை மாவட்டம் மயிலாடுதுறையிலிருந்து ஒரு பேருந்தில் **60** தோழர்களும், சீர்காழி நகரிலிருந்து 2 வேன்களில் 30 தோழர்களுமாக **90** பேர் பங்கேற்றனர்.

மதுரை புறநகரிலிருந்து 35 தோழர்களும், மாநகரத்திலிருந்து 40 தோழர்களுமாக **75** பேர் தனி வேன்களில் வந்து கலந்து கொண்டனர். இதில் 10 பேர் பெண்கள்.

விழுப்புரம் - கடுவனூர், சின்ன சேலம், கள்ளக்குறிச்சி பகுதியிலிருந்து ஒரு வேனில் **30** தோழர்கள் கலந்து கொண்டனர்.

பெரம்பலூரிலிருந்து **25** தோழர்களும், கிருஷ்ணகிரி மாவட்டத்திலிருந்து (காவேரிப் பட்டினம், நாமக்கல் பகுதி) **30**தோழர்களும், கரூரிலிருந்து **30** தோழர்களும், தர்மபுரியிலிருந்து **15** தோழர்களும், தூத்துக்குடி, நெல்லையிலிருந்து **20** தோழர்களும், நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம், திருச்செங்கோடு பகுதியிலிருந்து 18 தோழர்களும், அரியலூரிலிருந்து **10** தோழர்களும், காஞ்சி மாவட்டம் நெமிலியிலிருந்து **8** தோழர்களும், தஞ்சை, நாச்சியார் கோயில், மன்னார்குடி, பட்டுக்கோட்டையிலிருந்து **12** தோழர்களும், தனி வேன்களில் வந்து கலந்து கொண்டனர். சாதி ஒழிப்பு விடுதலை முன்னணியைச் சார்ந்த தோழர்கள், தனிப் பேருந்துகள் வழியாக 50 பெண்கள் உட்பட 250 தோழர்கள் பங்கேற்றனர்.

போராட்டத்தில் மொத்தம் கைதான தோழர்கள் **2471.**

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் கூடுவாஞ்சேரியில் பரப்புரைப் பயணம் தொடங்கி 11 நாட்கள் பரப்புரை நடத்தி காஞ்சியில் முடிவடைந்தது. மூன்றாவது கட்டமாக குடந்தையில் பரப்புரைப் பயணம் தொடங்கி, 13 நாட்கள் பரப்புரை நடத்தி, மன்னையில் முடிவடைந்தது.

'தமிழகத்தில் தீண்டாமை ஒரு கள ஆய்வு' என்ற நூலையும், 'எவிடென்ஸ்' நிறுவனம் வெளியிட்டிருந்த ஆய்வுகளின் அடிப்படையில் பெரியார் திராவிடர் கழகம் வெளியிட்டு, மக்களிடையே கொண்டு சென்றது. முதலில் ஆகஸ்டு 15 ஆம் தேதி அறிவிக்கப்பட்ட போராட்டம், மேலும் பரப்புரையை விரிவாக நடத்துவதற்காக அக்டோபர் 2 ஆம் தேதி தள்ளி வைக்கப்பட்டது. பரப்புரை இயக்கத்தைத் தொடர்ந்து சுவரெழுத்து இயக்கம் தொடங்கியது. 'தீண்டாமைக் கொடுமைகளை கண்டு கொள்ளாத காவல்துறை பிரிவை இழுத்து மூடும் போராட்டம்' என்ற சுவரெழுத்துகள், தமிழகம் முழுதும் முழு வீச்சில் சுவர்களில் எழுதப் பட்டன. போராட்ட செய்தி ஊடகங்களின் இருட்டடிப்பை மீறி மக்களிடையே சென்றடைந்தது.

அடுத்த கட்டமாக, சென்னை, திருச்சி போன்ற நகரங்களில், தோழர்கள் மக்கள் சந்திப்பு இயக்கங்களை நடத்தி துண்டறிக்கைகளை மக்களிடம் வழங்கிட போராட்டத்தின் நோக்கங்களைப் பரப்பினர். போராட்டம் பற்றிய செய்திகள் மக்களிடையே வேகமாகப் பரவியது. தனிப் பேருந்துகள், வாகனங்களில் சென்று தோழர்கள் போராட்டத்தில் பங்கேற்க தயாரானார்கள்.

அக்டோபர் 2 ஆம் தேதி விடியற்காலையிலிருந்து தோழர்கள் திருச்சியில் குவியத் தொடங்கினர். பேருந்துகளும், வேன்களும், கார்களும் வரிசையாக கழகக் கொடிகளுடன் கருஞ்சட்டைத் தோழர்களை ஏற்றிக் கொண்டு வரத் தொடங்கின. திருச்சி ரயில் நிலையம் அருகே தோழர்கள் திரண்டனர். இழுத்துப் பூட்டும் போராட்டத்துக்காக புறப்பட அணிவகுத்து நின்றார்கள். திருச்சி காதி விற்பனையகத்துக்கு எதிராக கொளுத்தும் வெய்யிலில் கழகத்தோழர்கள் ஆண்களும், பெண்களுமாய் திரண்டு நின்ற காட்சி, கருங்கடல் திருச்சியில் நுழைந்தது போல காட்சியளித்தது. 11.45 மணியளவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர்கள் கோவை இராமகிருட்டிணன், விடுதலை இராசேந்திரன் ஆகியோர் வந்து சேர்ந்தனர்.

உணர்ச்சிகரமான அக்கூட்டத்தில் போராட்டத்துக்கு தலைமை ஏற்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசினார். பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், சாதி ஒழிப்பு விடுதலை முன்னணியைச் சார்ந்த வழக்கறிஞர் ரஜினிகாந்த் ஆகியோர் சிறிது நேரம் பேசியதைத் தொடர்ந்து, கழகத் தோழர்கள் உணர்ச்சி முழக்கங்களுடன் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டபோது ஏராளமாக குவிக்கப்பட்டிருந்த போலீசார், தோழர்களை தடுத்து நிறுத்தி கைது செய்தனர். 2471 தோழர்கள் கைதானார்கள். காவல்துறையினர் திணறிப் போனார்கள். வாகனங்களை பெருமளவில் ஏற்பாடு செய்ய முடியாது தடுமாறினர். 2 மணி நேரம் கழகத் தோழர்கள் வரிசையாக வாகனங்களில் ஏற்றப்பட்டுக் கொண்டே இருந்தார்கள். 5 மண்டபங்களில் தோழர்கள் 'திணித்து' அடைக்கப்பட்டனர். திருச்சி நகரமே பரபரப்பானது. மாலை 5 மணியளவில் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

சாதி - தீண்டாமை அவலத்தை மக்கள் மன்றத்தின் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளதோடு, அரசுக்கு கடும் அழுத்தத்தை இப்போராட்டம் உருவாக்கியுள்ளது என்றே கூற வேண்டும்!

**– நமது செய்தியாளர்**

**அயோத்தித் தீர்ப்பு அடுத்த இதழில்**

## 'ரிவோல்ட்' பக்கங்களிலிருந்து.... (2)

# சைவர்களுடன் நடந்த மோதல்

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

சுயமரியாதை இயக்கம், சைவர்களோடு கடும் போராட்டங்களை நடத்தியிருப்பதை 'ரிவோர்ட்'டில் வெளியான கட்டுரைகளிலிருந்து அறிய முடியும். சுமார் 40 பக்கங்கள் சைவத்துக்கு எதிராக சுயமரியாதை இயக்கம் நடத்திய கருத்துப் போராட்டங்கள் ரிவோட்டில் இடம் பெற்றுள்ளன. சைவ சித்தாந்தங்களை ஆழமாக ஊன்றிப் படித்த நாகர்கோயில் வழக்கறிஞர் பி.சி. சிதம்பரம் பிள்ளை, தமிழ்நாட்டு சைவர்கள் பார்ப்பனியத்தை உயர்த்திப் பிடிப்பதைக் கண்டித்து எழுதிய ஆழமான கட்டுரைகள் இதில் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சுயமரியாதை இயக்கமே பார்ப்பனரல்லாத வேளாளர்கள் சிலரால் (சைவப் பிரிவு) ஏற்படுத்தப்பட்டது என்றும், எனவே பார்ப்பனரல்லாத உயர்சாதியினருக்கான இயக்கம் தான் சுயமரியாதை இயக்கம் என்றும் - சில ஆய்வாளர்கள் உண்மைக்கு மாறான கருத்துகளை முன் வைத்தனர். அதையே பொதுவுடைமை இயக்கத்தைச் சார்ந்த சில ஆய்வாளர்களும் கூறி வந்தனர். ஆனால் சுயமரியாதை இயக்கம் சைவர்களுடனும் அவர்களது பார்ப்பனிய கொள்கைகளோடும் கடுமையாக போரிட்டதை 'ரிவோல்ட்' வரலாற்றுப் பக்கங்கள் தெளிவாக படம் பிடிக்கின்றன.

பெரியார் செங்கல்பட்டில் முதல் சுயமரியாதை மாநாட்டை நடத்துவதற்கு ஓராண்டுக்கு முன்னால், 1928 ஆம் ஆண்டு ஒரு நிகழ்வு நடந்தது. ஜூலை 28 ஆம் நாள் சென்னை இராயப்பேட்டையில் 'பாலசுப்பிரமணிய பக்த ஜனசபை' என்ற அமைப்பின் ஆண்டு விழாக் கூட்டத்தில் சைவ மதப் பிரிவின் தீவிரவாதியும், தனித் தமிழ் இயக்கத்தை நடத்தியவருமான வேதாச்சலம் என்ற மறைமலையடிகள் அந்த நிகழ்ச்சியில் பேசும்போது, பெரியாரையும், சுயமரியாதைக் கொள்கைகளையும் கடுமையாகக் கண்டித்தார். அதே நிகழ்ச்சியில் பார்வையாளர்களாக பங்கேற்ற சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்த என். தண்டபாணிப் பிள்ளை 'திராவிடன்' ஆசிரியர் குழு உறுப்பினர் ஜனகசங்கர கண்ணப்பர் (இவர்கள் இருவரும் பிறப்பால் சைவப் பிரிவைச் சார்ந்த சாதியினர்) ஆகியோர் கூட்டத்தில் மறைமலை அடிகளாரைப் பார்த்து கேள்விகள் எழுப்பினர். சைவ மதத்தைப் பரப்பிய ஞானசம்பந்தன் சூழ்ச்சியால் சமணர்களை கழுவில் ஏற்றிக் கொலை செய்த கொடுஞ் செயல்களை எல்லாம் சுட்டிக் காட்டினர். கூட்டத்தில் குழப்பம் ஏற்பட்டு, கலவரத்தில் முடிந்தது.

இது பற்றி சுயமரியாதை இயக்க ஆதரவு ஏடுகளான 'குடிஅரசு', 'திராவிடன்' இதழ்களில் விரிவான செய்திகள் வெளி வந்தன. பெரியார் ஈ.வெ.ராவைக் கொல்ல வேண்டும் என்று சைவர்களை மறைமலை அடிகள் தூண்டியதாகவும், அப்போது, தண்டபாணிப் பிள்ளை அவர்களும், கண்ணப்பரும் தொடுத்த வினாக்களுக்கு பதில் கூற முடியாமல், மறைமலை அடிகள் கூட்டத்தில் கண்ணீர் வடிக்கத் தொடங்கி விட்டார் என்றும் அச்செய்திகள் கூறின.

மறைமலை அடிகளோ, தமது நாட்குறிப்பில் இதற்கு நேர்மாறாக எழுதினார். கேட்கப்பட்ட கேள்விகளுக்கு தாம் சரியான விடை அளித்ததாக அவர் எழுதி வைத்துள்ளார். 'குடிஅரசு' இதழில் மறைமலை அடிகளைக் கண்டித்து தலையங்கங்கள், கட்டுரைகள் வெளி வந்தன. பின்னர் பெரியாருக்கும், மறைமலையடிகளுக்கும் இடையே சமரசம் ஏற்படுத்தும் முயற்சிகளை தமிழ் அறிஞரும், சைவரும், பெரியாரின் உற்ற நண்பருமான திரு.வி.கல்யாணசுந்தரம் (திரு.வி.க.), தமிழ் அறிஞரும், சுயமரியாதை இயக்கத்தைச் சேர்ந்தவரும், பிறப்பால் சைவருமான கி.ஆ.விசுவநாதமும் சமரசம் மேற்கொண்டனர். சமரசத் திட்டத்தின்படி பெரியாருக்கு நட்பு ரீதியாக மறைமலை அடிகள் கடிதம் ஒன்றை எழுதினார். அதில்

''கடவுளைப் பற்றியும், அடியார்களைப் பற்றியும் தாங்கள் கொண்டுள்ள கோட்பாடுகளில் மட்டும் யான் கருத்து உடன்பாடுடையேனல்லேன்; (உடன்படாதவன்) பத்திரிகைகளில் வெளிவந்த சிலவற்றைப் பார்த்து தாங்கள் வருந்தியிருந்தால், அவ்வருத்தத்தை தாங்கள் அன்புகூர்ந்து நீக்கிவிடல் வேண்டும்'' என்று எழுதியிருந்தார். இக்கடிதத்தை 'திராவிடன்' ஏடு ஆசிரியர் குழு பெரியாரைக் கலந்து ஆலோசிக்காமலே மறைமலை அடிகளின் ''மன்னிப்புக் கடிதம்'' என்று தலைப்பிட்டு வெளியிட்டு விட்டது. பெரியார் கோபமடைந்தார். பெரியாரின் பெருந்தன்மையை இங்கே புரிந்து கொள்ள முடியும். திராவிடன், இப்படி தவறான தலைப்பில் வெளியிட்டதற்கு மறைமலை அடிகளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்வதாக பெரியார் 'குடிஅரசு' ஏட்டில் எழுதினார்.

அதே கட்டுரையில் - ''நாம் நம் கொள்கையிலோ அபிப்பிராயத்திலோ, ஒரு சிறிதளவுகூட விட்டுக் கொடுக்கவோ, திரு. வேதாசலத்தினுடையவோ (மறைமலை அடிகளாரின் உண்மைப் பெயர்) அல்லது வேறுபாடுடையவோ நட்பைக் கருதியானாலும், கடுகளவு மாற்றிக் கொள்ளவோ சிறிதும் தயாராக இல்லை'' என்று தமது கொள்கை உறுதியையும் பெரியார் வெளிப்படுத்தினார்.

**1929** ஆம் ஆண்டு செங்கல்பட்டில் நடந்த முதலாவது சுயமரியாதை மாநாட்டு புரட்சிகர தீர்மானங்கள் வைதீகக் கோட்டையை கலங்கடித்தன. தீண்டாமை, சாதி ஒழிப்பு, புரோகிதரை நீக்கி வைத்தல், பெண்ணுரிமை ஆகிய தீர்மானங்களோடு, பெயருக்குப் பின்னால் போடும் சாதிப் பட்டங்களை நீக்க வேண்டும். மதச் சின்னங்களை அணியக் கூடாது என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. நெற்றியில் விபூதியும் கழுத்தில் உருத்திராட்சக் கொட்டையுமாக காட்சி அளித்த சைவர்கள். இத் தீர்மானங்களைக் கண்டு வெகுண்டனர். தனியாக ஆலோசனை கூட்டங்களையும், மாநாடுகளையும் நடத்தத் தொடங்கினர். திருநெல்வேலியிலும், திருப்பாதிரிப்புலியூரிலும் (கடலூரில் ஒரு பகுதி) சைவர்கள் மாநாடு நடத்தினர். சைவர்கள் நடத்திய மாநாடுகளில், சைவர்களிலேயே அனைவருக்கும் அனுமதி வழங்கப்படுவதில்லை. சைவ மதம் பற்றிய கேள்விகள் கேட்கப்பட்டு, அதற்கு விடை தெரிந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். இந்த மாநாடுகளைப் பற்றிய விமர்சனங்களையும், பிற்போக்கான தீர்மானங்களுக்கு உரிய விடைகளையும் வழங்கி, 'ரிவோல்ட்' ஆழமான கட்டுரைகளையும் தலையங்கங்களையும் தீட்டியது.


அவை பற்றி அடுத்து எழுதுவோம்!

**– இரா.**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 7th October 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | அக்டோபர் 14, 2010 | புரட்சி 9 | முழக்கம் 40 | விலை: ரூ.2.50


# நீதிமன்றம் 'இராம இராச்சியம்' நடத்துகிறதா?

இந்தியாவில் நடப்பது இந்திய அரசியல் அமைப்புக்கு உட்பட்ட மக்கள் நாயக ஆட்சி அல்ல. இங்கே தொடருவது 'இராம இராஜ்யம்' தான் என்று அலகாபாத் உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழியாக உணர்த்தியிருக்கிறது. கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி, அயோத்தி வழக்கில் நீதிபதிகள், அரசியல் சட்டப் புத்தகங்களை புரட்டவில்லை. மாறாக 'இராமராஜ்ய'த்தில் இராமன் பின்பற்றிய 'வர்ணாஸ்ரம' விதிகளைத்தான் தீர்ப்புக்கான ஆதாரங்களாக எடுத்துக் கொண்டுள்ளனர். 'இராமராஜ்யத்தில்' இராமனிடம் பார்ப்பனர்கள் ஒரு வழக்கைக் கொண்டு வந்தார்கள். சம்பூகன் என்ற சூத்திரன், "பிராமண" தர்மத்துக்கு எதிராக நேரடியாக கடவுளை நோக்கி தவம் செய்ததால் "பிராமணர்" களுக்கு ஆபத்து வந்துவிட்டது என்பது வழக்கு. இராமன் 'பிராமண' தர்மப்படியே நீதி வழங்கினான். நேராக தவம் செய்த சம்பூகனிடம் போனான். சம்பூகன் தரப்பு நியாயங்களை அவன் கேட்கத் தயாராக இல்லை. உறையிலிருந்து வாளை உருவினான். சம்பூகன் தலையை வெட்டி வீழ்த்தினான். பார்ப்பனர்கள் மலர் தூவி, வெற்றிக் கொண்டாட்டம் போட்டனர். 'வான் உலகத்தின்' தேவர்கள் பூமாரி பொழிந்து வாழ்த்தினர். இது வால்மீகி இராமாயணம் கூறும் 'இராம இராஜ்ய நீதி'.

அலகாபாத் உயர்நீதிமன்றத்தில் நிலம் தொடர்பான ஒரு வழக்கு வந்தது. அது 1528 ஆம் ஆண்டு கட்டப்பட்ட 'பாபர் மசூதி தொடர்பானது. மசூதி கட்டப்பட்டு 480 ஆண்டுகளாக நிலத்துக்கு உரிமை உள்ளவர்கள். தங்கள் நிலத்தின் மீது அமைந்துள்ள வழிபாட்டு தலத்தில் நிகழ்ந்த ஒரு ஆக்கிரமிப்புக்கு எதிராக நீதிமன்றம் வந்தார்கள்; அது என்ன ஆக்கிரமிப்பு ?

1949 ஆம் ஆண்டு டிசம்பர் 22 ஆம் தேதி நள்ளிரவில் மசூதிக்குள் உள்ள மூன்று கும்பங்களில் மத்தியிலுள்ள கும்பத்தின் கீழே 'ராமன்', 'சீதை' சிலைகள் திடீரென வந்தன. அப்போது ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள், "அது தான் இராமன் பிறந்த இடம்", எனவே ராமனும் சீதையும் அதிசயமாக சுயம்புவாக அங்கே தோன்றியிருக் கிறார்கள் என்று கூறினார்கள். மீண்டும் அதை தங்கள் பத்திரிகையிலும் எழுதினார்கள். ('ஆர்கனைசர்' ஏடு 29.3.1987) அத்வானியும், பா.ஜ.க.வும்கூட "பகவான்" பிறந்த இடத்தில் தாமாகவே தோன்றினார் என்றே அடித்துக் கூறினார்கள். ஆனால், உண்மை என்ன ? சில வன்முறை மதவெறி சக்திகள், நள்ளிரவில் ராமன், சீதை சிலையை மசூதிக்குள் சட்ட விரோதமாக நுழைந்து உள்ளே போட்டார்கள். அத்துமீறி நுழைந்ததற்கான வழக்கும் அப்போதே காவல்நிலையத்தில் பதிவு செய்யப் பட்டது. அந்த மாவட்டத்தின் ஆட்சித் தலைவராக இருந்த கே.கே.நய்யார் என்பவர், "நள்ளிரவில் சில இந்துக்கள் மசூதிக்குள் நுழைந்து மசூதியை சேதப்படுத்தியதோடு, சில இந்துக் கடவுள் சிலைகளையும் உள்ளே வைத்தனர்" என்று வானொலி வழியாக, மாநில முதல்வருக்கும் தலைமைச் செயலாளருக்கும் தகவல் தந்தார்.

இப்படி நள்ளிரவில் முறைகேடாக நிறுவப்பட்ட ராமன் சிலைக்கு பூஜைகளைத் தொடங்கினார்கள். இதை எதிர்த்து அப்போதே தொடரப்பட்ட வழக்குகளில் அப்போதும் நீதிமன்றங்கள் சட்ட மீறல்களைக் கண்டிக்க வில்லை; உள்ளே திணிக்கப்பட்ட சிலைகளை அகற்ற உத்தரவிடவில்லை. மாறாக, பிரச்சினைக்குரிய அந்த இடம் நீதிமன்றக் கட்டுப்பாட்டுக்குள்தான் கொண்டு வரப்பட்டது. இந்த இடத்துக்கு உரிமை கோரி, 3 பிரிவினர் தாக்கல் செய்த மனுக்கள் மீதுதான் அலகாபாத் உயர்நீதிமன்றம் 60 ஆண்டுகளுக்குப் பிறகு கடந்த செப்டம்பர் 30 ஆம் தேதி தீர்ப்பு வழங்கியுள்ளது. தீர்ப்பு வழங்கிய நீதிபதிகள் தரம்வீர் சர்மா (பார்ப்பனர்), சுகிர் அகர்வால் (மார்வாடி), எஸ்.யு.கான் (முஸ்லீம்). தனித்தனியாக தீர்ப்புகளை எழுதினாலும், ஒரு கருத்தில் இணைந்துள்ளார்கள். நிலத்தின் உரிமை கோரி தொடரப்பட்ட வழக்கை, அது குறித்த சட்டங்கள் பற்றி பரிசீலிக்கலாமல், 'இந்துக்களின் நம்பிக்கை' என்ற அடிப்படையில் நின்று தங்கள் "கதாகாலட்சேபத்துக்கு" தீர்ப்பு என்ற சட்ட வடிவம் தந்திருக்கிறார்கள்.

வழக்கு தொடர்ந்த அமைப்புகள் மூன்று. இதில் இரு பிரிவினர் இந்துக்கள், ஒரு பிரிவு முஸ்லீம்களின் சன்னி வக்பு வாரியம். மூன்று பிரிவினருமே பிரச்சினைக்குரிய இடத்தைப் பங்கீட்டுத்தர வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைக்கவில்லை. முன் வைக்கப்படாத கோரிக்கையை நீதிமன்றம் தீர்ப்பாக்கியிருக்கிறது. பிரச்சினைக்குரிய இடத்தை மூன்றாக பங்கிட்டு, இரண்டு பகுதியை இந்துக்களுக்கும், ஒரு பகுதியை முஸ்லீம்களுக்கும் பரிசாக வழங்கியிருக்கிறது. குரங்கு அப்பம் பங்கிட்ட கதை - எவருக்காவது நினைவுக்கு வந்தால், அதற்கு நாம் பொறுப்பல்ல.

இதே போன்றே ராமராஜ்யத்தில் ராமனிடம் முறையிட வந்த பார்ப்பனர்கள் சம்பூகனுக்கு மரண தண்டனையைக் கோராமலேயே ராமன், சம்பூகன் தலையை வெட்டினான். அதே நீதி முறைதான் இந்த வழக்கிலும் பின்பற்றப்பட்டிருக்கிறது. எனவேதான் இதை 'ராமராஜ்ய நீதி' என்று கூறுகிறோம்.

1949 ஆம் ஆண்டு நள்ளிரவில் பாபர் மசூதிக்குள் கள்ளத்தனமாக வைக்கப்பட்ட 'ராமன் - சீதை' சிலைகள் பிரச்சினைக்கு வருவோம். நல்ல வாய்ப்பாக அத்வானியும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் கூறியதுபோல், ராமன் சுயம்புவாக, சீதையுடன் தோன்றினார் என்பதை நீதிபதிகள் ஏற்கவில்லை. சிலை - சில நபர்களால் உள்ளே வைக்கப்பட்டது தான் என்பதை எப்படியோ ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், நள்ளிரவில் கள்ளத்தனமாக சிலைகள் வைக்கப்பட்ட இடம் தான் ராமன் பிறந்த இடம் என்ற மூட நம்பிக்கைக்கு சட்டப்பூர்வமான ஒப்புதலை வழங்கியிருக்கிறார்கள்.

இந்துக்களின் எந்த புனித நூலும் 'ராமன்' பிறந்த இடம் - இதுதான் என்று திட்டவட்டமாகக் கூறவில்லை. இராமனின் அதிகாரபூர்வ கதையாக பக்தர்கள் கருதி போற்றும் 'இராம் சரித மணாசு'ம், ராமன் பிறந்த இடத்தை குறிப்பிட்டு சுட்டிக்காட்டவில்லை. ஆனால், அலகாபாத் நீதிபதிகள் இந்த அபூர்வமான கண்டுபிடிப்பை இராம பக்தர்களுக்கு பரிசாக்கி இருக்கிறார்கள்.

பாபர் மசூதிக்கும், இஸ்லாம் மதத்துக்கும் சான்றுகள் இருக்கின்றன. ஆனால், இந்து மதத்துக்கோ இராமனுக்கோ வரலாறுகள் இல்லை. நம்பிக்கைகள் மட்டுமே இருக்கின்றன. இந்த வழக்கில் சான்றுகள் சட்டங்கள் முன் மண்டியிட்டு விட்டன. நம்பிக்கைகளே வெற்றி பெற்றுள்ளன.

இந்த வழக்கில் நேரடியாக தான் பிறந்த இடத்துக்கு உரிமை கோரி நீதிமன்றத்தில் வழக்காட வந்தவன் 'சாட்சாத்' இராமன் தான் என்பது பலருக்கும் வியப்பைத் தரலாம். மசூதிக்குள் வைக்கப்பட்ட 'ராமன்' சிலைதான் மனுதாரர். இந்துக்கள் கடவுளாக வணங்கும் உருவங்கள் எல்லாம் இந்திய சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர உரிமை உண்டு என்கிறார், பாரதிய ஜனதா கட்சியின் பொதுச் செயலாளரும், 'இந்து மகாசபை'யின் வழக்கறிஞருமான இரவிசங்கர் பிரசாத். வழக்கைத் தொடர்ந்த இராமன், வழக்கு மனுவில் கையெழுத்திட்டானா? நீதி மன்றத்துக்கு வழக்கைப் பார்வையிடவாவது வந்தானா ? 'திரேதாயுகத்திலே' பல லட்சம் ஆண்டுகளுக்கு முன்பு பிறந்ததாகக் கூறப்படும் இராமன், இந்தியாவின் 'குடிமகனாக' ஏற்றுக் கொள்ளப்பட்டானா ? பொதுத் தேர்தலில் வாக்களிக்க வந்து, கையில் மை குத்திக் கொண்டானா ? என்ற கேள்விகளுக்கு எல்லாம் இடமில்லை. பார்ப்பனர்கள் தங்கள் சமூக ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்கு இராமனை சட்டக் கூண்டிலும் நிற்க வைப்பார்கள். இதுதான் இந்த வழக்கில் நடந்தது.

பாபர் மசூதி இடிக்கப்படாமல் அப்படியே இருந்திருந்தால் இப்படி மூன்று பகுதிகளாக இடத்தைப் பங்கீட்டிருக்க முடியாது. எனவே நீதிபதிகள் இப்படி ஒரு முடிவுக்கு வருவதற்கு பாபர் மசூதி இடித்து தரைமட்டமாக்கப்பட்ட நிகழ்வு பேருதவி செய்துள்ளது. அதற்காக மசூதியை இடித்தவர்களை நீதிபதிகள் பாராட்டாமல் இருந்தது வியப்புக்குரியதுதான். ஒரு மகன் தந்தையைக் கொலை செய்து விட்டால், தந்தையின் சொத்துக்கு அவன் உரிமை கோர முடியாது என்றுதான் சட்டம் கூறுகிறது. ஆனால், பாபர் மசூதியை அழித்தவர்கள், அதிலே தங்களுக்கும் பங்கு உண்டு என்று இடத்தை வாங்கிக் கொண்டு விட்டார்கள். இதுதான் 'ராமராஜ்ய நீதி' !

1993 ஆம்ஆண்டில் மசூதி இருந்த இடத்தில் அதற்கு முன் கோயில் அங்கே இருந்ததா என்பது குறித்து உச்சநீதிமன்றம் கருத்துகளைத் தெரிவிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் வழியாக அன்று நடந்த காங்கிரஸ் ஆட்சி, கருத்து கேட்டபோது, இது உச்சநீதி மன்றத்தின் வேலையல்ல என்று நீதிமன்றம் உறுதியாக மறுத்துவிட்டது.

உச்சநீதிமன்றம் கருத்துக்கூற மறுத்தாலும், அலகாபாத் உயர்நீதிமன்றம் - "ஆம்; மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்திருக்கிறது என்பதற்கான சான்றுகள் இருக்கின்றன" என்று கருத்து கூற முன் வந்து, உச்சநீதிமன்றத்தின் கருத்தையே உதறித் தள்ளிவிட்டது. இதில் பார்ப்பன நீதிபதி சர்மா மட்டும், கோயிலை இடித்து விட்டுத்தான் மசூதி கட்டப்பட்டது என்று தமது தீர்ப்பில் கூறுகிறார். மற்ற இரு நீதிபதிகளும் மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்ததற்கான தடயங்கள் இருக்கின்றன என்று கூறியதோடு நிறுத்திக் கொண்டார்கள். கோயிலை இடித்துவிட்டு மசூதி கட்டப்படவில்லை என்று நீதிபதி யு.எஸ்.கான், நீதிபதி சர்மாவின் கருத்திலிருந்து மாறுபடுகிறார். ஆனாலும், இதற்குச் சான்றாக தொல்பொருள் துறையின் அறிக்கையை மூன்று நீதிபதிகளும் ஏற்றுள்ளனர்.

மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்ததற்கான தடயங்கள் கிடைத்ததாக தொல்பொருள் துறையின் அறிக்கை கூறுகிறது. தொல்பொருள் துறையின் இந்த ஆய்வை மேற்கொள்வதற்கு தனியார் நிறுவனம் ஒன்றுக்கு பா.ஜ.க. அரசு அனுமதித்தது. அதன் அறிக்கை வெளிவந்தபோதே, அந்த ஆய்வு முறையானதல்ல என்று கூறி அதன் முறைகேடுகளை தொல்பொருள் ஆய்வாளர்கள் டிமண்டல் மற்றும் ஷெரீன் இரத்னாகர் ஆகியோர் அம்பலப்படுத்தி, நூலாகவே வெளி யிட்டனர்.

மசூதி இருந்த இடத்தில் கோயில் இருந்ததா என்பது குறித்து, குடியரசுத் தலைவர் கருத்து கேட்டபோது அதை மறுத்து உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் நீதிபதி பரூச்சா இவ்வாறு கூறியிருந்தார்:

"தொல்பொருள் துறை மற்றும் வரலாற்று ஆவணங் களில் உச்சநீதிமன்றம் கருத்துக் கூறவோ, அதை ஆய்வு செய்யவோ இயலாது. அதற்கு நீதிமன்றங்கள் தங்களை தயார்படுத்திக் கொள்ளவும் இல்லை. வேண்டுமானால் அப்படிப்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் ஆணையிடலாம். அந்த ஆய்வுகளும், மதிப்பீடுகளும் எதிர்ப்புகளே இல்லாமல், எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். அப்படி ஒருமித்து ஏற்கப்படாத நிலையில், நீதிமன்றம் அதில் தலையிட்டு, தனது

(4 ஆம் பக்கம்)

# நவராத்திரி சண்டை

*நவராத்திரி கொலுவில் சரசுவதி, லட்சுமி, கிருஷ்ணன், இராமன், சீதை, பிள்ளையார் உள்ளிட்ட கடவுள் பொம்மைகள் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ளன. தனது வீட்டுக்கு வந்த நவராத்திரி விருந்தினருக்கு சுண்டல், தயிர் சாதம் வழங்கினார், கோபால அய்யர். இரவு தொலைக்காட்சியில், நடிகர்கள், கடவுள் வேடமிட்டு நடித்த பக்திப் படம் ஒன்றைப் பார்த்து உறங்கச் சென்றார். கனவில் கொலுவில் இருந்த கடவுள் பொம்மைகளும், உருவங்களாகப் பேசத் தொடங்கின....*

*கிருஷ்ணன் கீழே இறங்கி வந்து அய்யர் 'ஆத்து' சமைய லறைக்குப் போகிறான். பாத்திரங்களை உருட்டுகிறான். சத்தம் கேட்ட விநாயகன், கிருஷ்ணனை பின் தொடருகிறான்.*

**கிருஷ்ணன் :** *டேய், யானைத் தலையா! இங்கே, ஏண்டா வந்தே?*

**விநாயகன் :** *நிறுத்துடா, வெண்ணெய் திருடா; நீ எதையெதை எல்லாம் உருட்டப் போகிறாய், திருடப் போகிறாய் என்பதை பார்க்கத்தான் வந்தேன்.*

**கிருஷ்ணன் :** *நான் திருடினாலும் சரி; குளிக்கும் பெண்களின் ஆடைகளை உருவி மரத்தில் போய் உட்கார்ந்து கொண்டாலும்; நான் எப்போதுமே பக்தர்களுக்கு அன்பான விளையாட்டுப் பிள்ளைதான் தெரியுமா?*

**விநாயகன் :** *டேய்! இப்போதெல்லாம் 'ஈவ்டீசிங்' சட்டம் வந்து விட்டது. உள்ளே பிடித்து போட்டு விடுவார்கள், சும்மா துள்ளாதே!*

**கிருஷ்ணன் :** *அடேய், அழுக்குருண்டைப் பிண்டமே! வரம்பு மீறிப் பேசாதே; ஒவ்வொரு ஆண்டும் உன்னை அடித்து துவைத்து கடலில் போட்டு, உனது பக்தர்கள் மூழ்கடித்தும் புத்தி வர வில்லையே!*

**விநாயகன் :** *போதும் நிறுத்துடா! இப்போ அரசியலையே நான் தான் கலக்குறேன் தெரியுமா? எனது பிறந்த நாள் வந்துட்டா, நாடே அமளி துமளிப் படுது. போலீஸ்காரன் வீதிக்கு வீதி துப்பாக்கியோடு திரியறான், தெரியுமா? உன்னை எல்லாம் சீந்துவாரில்லை.*

*(விநாயகனும், கிருஷ்ணனும் கூச்சல் போடுகிற சத்தத்தைக் கேட்டு, கொலுவிலிருந்த இராமன், இறங்கி ஓடி வருகிறான்.)*

**இராமன் :** *என்னப்பா, என்ன பிரச்சினை: இப்படி நமக்குள்ளே சண்டை போட்டுக் கொண்டால் பக்தர்கள் நம்மை மதிப்பார்களா? கடவுள்களாக வந்துவிட்ட பிறகு, ஒழுங்கு வேண்டாமா?*

**விநாயகன் ஆத்திரத்துடன் :** *அடேய், ராமா! பொண்டாட்டியையே சந்தேகித்தவனே! நீயா, ஒழுங்கு பற்றிப் பேசுகிறாய்.*

**இராமன் :** *வீணா, என் வம்புக்கு வராதே; எனக்குள்ள செல்வாக்கு உனக்குத் தெரியாது!*

**விநாயகன் :** *என்னைவிட உனக்கு செல்வாக்கு அதிகமோ? பேத்தாதே!*

**இராமன் :** *அடேய், நான் தான்டா, இந்த நாட்டுல நீதிமன்றங்களையே ஆட்டிப் படைக்கிறவன். அலகாபாத் நீதிபதிகளையே என் காலடியில் விழச் செய்து விட்டேனே தெரியுமா?*

**விநாயகன் :** *இதைச் சொல்ல உனக்கு வெட்கமாக இல்லை. வானுலகின் தெய்வமாக இருக்க வேண்டியவன். பூலோகத்துல நீதிமன்றத்துல வந்து வழக்குப் போட்டுகிட்டு நிற்கிறியே; நீ எல்லாம், ஒரு கடவுளா? நீதிமன்றத்திலே உன் பெயரிலேயே மனு போடுகிறானே, உனக்கு அவமானமாக இல்லை?*

**இராமன் :** *இதிலே என்னடா அவமானம்; நான் எடுத்த எத்தனையோ அவதாரங்களில் இதுவும் ஒன்று.!*

**விநாயகன் :** *என்ன புடலங்காய் அவதாரம்; உனக்கு சக்தி இருந்தால் உன் பிறந்த இடத்தை நீயே நேரில் வந்து சொல்லியிருக்கலாமே! பிரசவம் பார்த்த மருத்துவர்கள், மருத்துவச்சிகள் பெயரைக் கூறி இருக்கலாமே! இதற்காக 60 ஆண்டுகள் நீதிமன்றத்தில் வழக்கு நடக்க வேண்டுமா?*

**இராமன் :** *டேய், பிஸ்கோத்து! தேசத்தையே மீண்டும் ராமராஜ்ய மாக்கியிருக்கிறேன். மனுதர்மத்தை மீண்டும் நீதிமன்ற சட்டமாக்கி விட்டேன்; பாவம்! இந்த முட்டாள் 'சூத்திரர்' கள்; அவர்கள் நாட்டில் மக்களாட்சி நடப்பதாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். இதெல்லாம் உனக்கு எங்கே புரியப் போகுது!*

**கிருஷ்ணன் :** *(குறுக்கிட்டு) போதும்; போதும்; நிறுத்துங்கள்! நமக்குள்ளே ஏன் வீண் சண்டை? நமக்குள் ஒற்றுமைதான் மிகவும் முக்கியம். நாம் ஒற்றுமையாக எந்த சண்டையும் போடாமல், 'கல்லாக' நின்றால் தான் இந்த மக்களை காலம் முழுதும் ஏமாற்றிக் கொண்டிருக்க முடியும். மக்கள் சிந்திக்கத் தொடங்கிவிட்டால், நம்ம கதை அம்போ தான். இப்போதே பிளாட்பாரத்தில்கூட இடம் கிடைக்காத நிலை வந்து விடும் போலிருக்கிறது. இப்படி சண்டை போட்டுக் கொண்டால் நாட்டிலேயே இடமில்லாது போய்விடும். ஒற்றுமை யாக பக்தியைப் பரப்பி மக்களை மடையர்களாக்கி மொட்டை அடிப்போம்; சரிதானா?*

*('கடவுள்' கள் சமரசம் செய்து கொண்டனர். உறக்கம் கலைந்த கோபால அய்யர், மனைவியிடம், கெட்டக் கெட்ட கனவாக வருதுடி, ஏதோ, ஆபத்து வரும் போலிருக்கே என்று புலம்புகிறார்.)*

**– கோடங்குடி மாரிமுத்து**

# கழகப் போராட்டம்: தமிழ் நாளேடு தரும் படப்பிடிப்பு

*'தினமலர்' நாளேட்டின் நெல்லை பதிப்பு – அதன் 'செய்தி மலர்' தொகுப்பில் கழகம் திருச்சியில் நடத்திய சாதி தீண்டாமை ஒழிப்புப் போராட்டம் பற்றி வெளியிட்ட விரிவான கட்டுரை.*

குளுகுளு நடிகைகள், 'கொஞ்சும் தமிழில்' பேசும் பேட்டி என்ன, புதிய திரைப் படங்கள் குறித்த வசீகர விமர்சனங்கள் என்ன, இந்தியத் தொலைக்காட்சி வரலாற்றின் சில மாதங்களுக்கு முன்னரே வந்த திரைப்படங்கள் என்ன ! என இப்படிப் பல என்ன என்னக்களோடு, கோவணமும், கைத்தடியுமாய் அலைந்த காந்தியின் பிறந்த நாளை டிஜிட்டல் குவாலிட்டியில் கொண் டாடித் தீர்த்துவிட்டோம்.

இவ்வளவு குதூகல கொண்டாட்ட களேபரங்களுக்கு இடையே, பெரியார் திராவிடர் கழகம் என்ற அமைப்பு திருச்சியில் நடத்திய தீண்டாமை ஒழிப்புப் பிரிவை இழுத்து மூடும் போராட்டம், நம் கவனத்தை ஈர்த்ததுடன், அழுத்தமான கவலைகளையும் ஏற்படுத்தியது.

ஏன் ! காமன்வெல்த் ஊழல்களைவிட மோசமாக நம்மை வெட்கித் தலைகுனிய வைத்தது என்றுகூடச் சொல்லலாம். காந்தி அடிகள் தன் கடைசி மூச்சு வரை உச்சரித்துக் கொண்டிருந்த லட்சியச் சொல், தீண்டாமை ஒழிப்பு. நமது கெடு வாய்ப்பு, அது இன்று வரை லட்சியமாக மட்டுமே இருந்து வருவது தான்.

தீண்டாமை எனும் தேசிய அவமானம், இன்னும் நீடிக்கிறது என்று உயர்நீதிமன்ற நீதிபதிகளே குமுறுகிறார்கள்.

"மாநிலத்தின் அதிகாரத்திலுள்ள தீண்டாமை தடுப்புச் சட்டங்கள் முழுமையாக அமல்படுத்தப்பட வேண்டும். தலித் மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை காமன்வெல்த் விளையாட்டுகளுக்கு திருப்பிவிட்டது தவறு" என்று, உள்துறை அமைச்சர் ப. சிதம்பரமும் கொந்தளிக்கிறார்.

ஆனாலும் என்ன ? தமிழகம் முழுவதும் இரட்டைக் குவளை முறை நடைமுறையில் உள்ள கிராமங்கள் இன்னும் இருக்கத்தான் செய்கின்றன. சிற்றூராட்சிகளில், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவர், தேர்தலில் ஊராட்சித் தலைவராகத் தேர்ந் தெடுக்கப்பட்டால், அவர் அந்தப் பதவியில் அமர முடிவதில்லை. இவையெல்லாம் ஆண் டாண்டு காலமாக தொடர்ந்து கொண்டு இருப்பவைதானே ! என்று கேட்கலாம். அப்படித் தொடர்வது தான் வேதனைக் குரியது.

ஆனால், அண்மையில் வெளிவந்துள்ள மற்றொரு தகவல் தீண்டாமையின் மற் றொரு கோர முகத்தை நமக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

திருச்சியில், 'வேர்அவுஸ் கல்லறை' என்று அழைக்கப்படும், கத்தோலிக்கர் களின் கல்லறையில், தீண்டப்படாத மக்களின் பிணங்களை அடக்கம் செய்ய தனி இடம் அமைக்கப்பட்டு, அதனைத் தனியே பிரித்துக் காட்டுவதற்காக குறுக்குச் சுவர் ஒன்றும் எழுப்பப்பட்டுள்ளது, வெளி உலகின் கவனத்திற்கு வந்துள்ளது. பாலக் கரை என்று அழைக்கப்படும் பகுதியில் மேலப்புதூர் பாலம் அருகே இந்தக் கல்லறை அமைந்துள்ளது. திருச்சி மாநகரின் மையப் பகுதியில் அமைந்துள்ள இந்தக் கல்லறை, பழைய கோயில் என்று அழைக்கப்படும் திருச்சபையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மறைந்த திருச்சி லூர்துசாமி என்பவர் நன்கொடையாக வழங்கிய இடத்தில் அமைந்துள்ள இந்தக் கல்லறைதான், தீண்டாமையை குறுக்குச் சுவர் வடிவத்தில் உலகிற்கு பறைசாற்றிக் கொண்டிருக்கிறது.

உப்புப் பாறை, செங்குளம் தாழ்த்தப்பட் டோர் குடியிருப்பு, மல்லிகைபுரம், ஜெம்ஸ் டவுன், கூனி பசார், காஜாபேட்டை பகுதி களில வாழும், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த மக்களின் பிணங்கள், குறுக்குச் சுவர் அமைக்கப்பட்ட ஒரு பகுதி கல்லறை யிலும், மறுபுறத்தில் உள்ள கல்லறையில், "பழைய கோயில்" பகுதி இருதயபுரம், எடத்தெரு வாழும் பகுதிகளில் உயர்சாதி யினர் என்று கூறிக் கொள்ளும், கிறிஸ் தவர்களின் பிணங்களும் புதைக்கப் படுவது வழக்கமாக இருந்து வருகிறது. இரண்டு கல்லறைகளிலும் யேசுவின் 'புனித சிலுவை'ச் சின்னம்தான் பொறிக் கப்பட்டுள்ளது. இரண்டு பிரிவினரும், ரோமன் கத்தோலிக்க பிரிவைச் சார்ந்த வர்கள்தான். மதமும், கடவுளும் ஒன்றாக இருந்தாலும், சாதியை வேறுபடுத்தும் குரூரம், கிறிஸ்தவர்கள் மத்தியிலும் தொடங்கி இருப்பதுதான் நமக்கு அதிர்ச்சி அளிக்கிறது.

இது குறித்து விழிப்புணர்வுப் பிரச் சாரங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்திய பெரியார் திராவிடர் கழகத்தினர், மாவட்டக் காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவான 'மனித உரிமைப் பாதுகாப்பு' பிரிவு அதிகாரியை, கடந்த மார்ச் 14 ஆம் தேதி நேரில் சந்தித்து, புகாரும் அளித்துள்ளனர். ஆனால், இது தொடர்பாக காவல்துறையின் தீண்டாமை ஒழிப்புப் பிரிவு எந்த நடவடிக்கையும் எடுக்காததால், அப்பிரிவை இழுத்து மூடும் போராட்டத்தில் அந்த அமைப்பினர் ஈடுபட்டுள்ளனர்.

"காவல்துறை நடவடிக்கை ஒரு பக்கம் இருந்தாலும், கிறிஸ்தவ மதக் கோட் பாட்டுக்கு எதிரானதும், சட்ட விரோத மானதுமான இந்தத் தீண்டாமைச் சுவரை அகற்ற நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி, ரோமன் கத்தோலிக்க மதப் பிரிவுத் தலைவர்களுக்கும் அவர்கள் கடிதம் எழுதி உள்ளனர். இந்த தகவலை அறிந்த பின்னர், திருச்சியிலும் ஓர் உத்தபுரமா ? அதுவும் கிறிஸ்தவர்களின் கல்லறைத் தோட்டத்தில் ! என்ற அதிர்ச்சி நம்மை உறைய வைக்கிறது.

காந்தி ஒரு பக்கம் ராமராஜ்ஜியத்தைக் கனவு கண்டாலும், தீண்டாமை ஒழிப்பு என்பது அவரது முக்கிய வேலைத் திட்டங்களில் ஒன்றாக இருந்தது என்பதை மறுக்க முடியாது. அவரது பெயரைச் சொல்லி ஆட்சி நடத்தி வரும் காங்கிரஸ் கட்சியினரும், ப. சிதம்பரம் போன்ற அதன் தற்போதைய தலைவர்களும்கூட, தவிர்க்க முடியாமல் அதனை அவ்வப்போது உச்சரித்து வருவதைப் பார்க்க முடிகிறது. ஆனால், தமிழகத்தில், காமராஜர் ( ?) ஆட்சி அமைக்கத் துடிக்கும் காங்கிரஸ் காரர்களும் சரி, 40 ஆண்டுகளுக்கும் மேலாக ஆட்சி நடத்தி வரும் திராவிட இயக்கத்தினரும் சரி, தீண்டாமைக் குறித்து பெரிய அளவில் கவலை கொண் டதாகத் தெரியவில்லை. பாட்டாளி வர்க்க சர்வதேசியம் தமிழகத்தில் கைகொடுக்கத் தவறிய நிலையில், இடதுசாரிகள் அண்மைக்காலமாக தீண்டாமை ஒழிப்பு முழக்கங்களை முன்னெடுத்து வரு கிறார்கள்.

பெரியார் திராவிடர் கழகம் போன்ற அமைப்புகள் எப்போதும் போல, தீண் டாமைக்கு எதிரான தங்களது போராட் டங்களை தீவிரமாக முன்னெடுத்து வருகின்றன.

யார் முன்னெடுத்தாலும் சரிதான். தீண்டாமை எனும் சமூகப் பேரிழிவு ஒழிந்தால் போதும் என்பதுதான், சமூக ஆர்வலர்களின் பெருவிருப்பமும், நிறைவேறாத நெடுங்கனவும் ஆகும் ! ●

# சைவக் கோட்டையில் வெடிகுண்டு

## ‘ரிவோல்ட்’ பக்கங்களிலிருந்து....(3)

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய ‘ரிவோல்ட்’ ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

சுயமரியாதை இயக்கம், அதன் மதமறுப்புக் கொள்கை வழி நின்று சைவத்தையும், சைவ அடியார்களையும், சைவ மதக் கோட்பாடுகளையும், ‘குடிஅரசு’, ‘திராவிடன்’ இதழ்கள் வழியாக கேள்விக்குட்படுத்தி வந்ததை சைவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. பார்ப்பனியத்தையும், பார்ப்பனர்களையும், வைணவ மதப்பிரிவையும், வைணவர் களையும் சுயமரியாதை இயக்கம் கண்டித்தபோது, ஆனந்தக் கூத்தாடி, ஆதரித்து வந்த சைவர்கள், சைவத்தை கை வைத்தபோது பதறிப் போனார்கள். சைவத்தை அரசு மதமாக்கி, தீண்டாமை யையும் சேரியையும் நிறுவன மாக்கியவன்தான் இராஜ ராஜசோழன். அதே சுயமரியாதை இயக்கப் பார்வையில் இப்போதும் பெரியார் திராவிடர் கழகம், இந்த சைவ அரசர்களை விமர்சித்தால், “பொதுவுடைமை புரட்சியாளர்கள்” மன்னராட்சிக்கு முட்டுக் கொடுக்க ஓடி வருவதுதான் வேடிக்கை.

**1930** ஆம் ஆண்டு கருந்திட்டைக்குடி எனும் ஊரில் அன்று சுயமரியாதை இயக்கத்தின் முன்னணி தலைவர் களில் ஒருவராக இருந்த கி.ஆ.பெ. விசுவநாதம், சுயமரியாதைக்காரர்கள் புராணங்களைப் பொய் என்று பேசு கிறார்கள் என்ற குற்றச்சாட்டுக்கு இவ்வாறு பதிலளித்தார்:

“அது பச்சையான பொய்யாகும். சைவ புராணங்கள் எல்லாம் பொய் என்பதை வைணவப் பண்டிதர்கள்தான் கண்டுபிடித்துக் கூறினார்கள். வைணவப் புராணங்கள் எல்லாம் பொய் என்பதை சைவப் பண்டிதர்கள்தான் கண்டுபிடித்துக் கூறினார்கள். எல்லாப் புராணங்களும் பொய் என்பதை சுயமரியாதைக்காரன் ஒரு வேளை கூறியிருக்கலாம்” என்று கிண்டலாகக் கூறினார்.

சுயமரியாதை இயக்கத்தின் கேள்விகளால் திணறிப் போன சைவர்கள் அதை எதிர்கொள்ளத் தீவிர செயல் திட்டங்களை உருவாக்கி, நாடு முழுதும் சைவப் பரப் புரையாளர்களை அனுப்பி, சுயமரியாதை இயக்கத்தைச் சாடத் தொடங்கினர். இதற்காக திட்டங்களை உருவாக்க தென்னிந்திய சைவ சித்தாந்த சங்கம், சென்னையில் கூடி விவாதித்து, பிறகு திருநெல்வேலியில் மாநாடு ஒன்றைக் கூட்டியது. **1929** ஆம் ஆண்டு மார்ச் **29, 30, 31** தேதிகளில் அந்த மாநாடு நடந்தது. சுயமரியாதை இயக்கத்தின் பரப்புரைத் தாக்கத்தால் சைவ மதத் தலைவர்களிடையே கடும் குழப்பங்களும் முரண்பாடு களும் தலைதூக்கி நின்றன. மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும், மாநாட்டையும் ஆழமாக, விமர்சிக் கும் கட்டுரைகளை ‘ரிவோல்ட்’ வெளியிட்டது. “எல்லா காலத்துக்கும் எந்த சமூகத்துக்கும் பொருத்தமான உலக முழுமைக்குமான அன்பை வலியுறுத்துவதே சைவம்” என்று மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை ‘ரிவோல்ட்’ கேள்விக்கு உட்படுத்தியது.

உலகத்துக்கே அன்பை போதிக்கும் சைவம், சமணத் தையும், புத்தத்தையும் அழிப்பதில், முனைப்புக் காட்டியது ஏன் ? புராணங்கள் இதைத் தானே கூறுகின்றன.

இப்படி அழித்ததைக் கொண்டாடுவதற்காகவே சைவ கோயில்களில் திருவிழாக்களையும் கொண்டாடு கிறார்களே ! இப்படி சைவத்தைப் போற்றுகிற கூட்டம், உலக மதங்களை வெறுப்பதில் முன்னணியில் நிற்பது தெரியாதா ? சைவத்தின் எல்லை, சைவ சாப்பாடு என்பதோடு நின்று போய் விடுகிறது. சைவ மதத்துக்கு மாறி, பிறகு சைவ உணவுக்கு மாறியவர்களுடன் பரம்பரை சைவர்கள் ஒன்றாக அமர்ந்து உணவருந்துவதில்லையே ! சமபந்தியில் உட்கார மறுக்கிறார்களே. சைவத்தின் ஒரு அடையாளம் சாப்பாடு என்றால், மற்ற அடையாளங்களாக நெற்றியில் விபூதி, தலையில் பின் கொண்டை, கழுத்தில் ருத்திராட்சக் கொட்டை என்பது தானே ! இவைதான் சர்வதேச மதத்துக்கான அடையாளங்களா ?” என்று கேட்டது ‘ரிவோல்ட்’ !

நெல்லை மாநாட்டில் எல்லோருக்கும் கோயில் நுழைவு வேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி யவர்கள் அதே நேரத்தில் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும் என்றும் ஒரு நிபந்தனையைப் போட்டு மறைமுகமாகத் தீண்டாமையை நியாயப்படுத்தியதை ‘ரிவோல்ட்’ கண்டித்தது. **63** நாயன்மார்களில் ஒருவராக தீண்டப்படாத சாதியைச் சார்ந்த நந்தன் அங்கீகரிக்கப்பட்டதை சைவர்கள் பெருமை பேசு கிறார்கள். நந்தனார் நாயன்மார் ஆனது இருக்கட்டும்; இப்போது வாழும் நந்தனார்கள், விலங்குகளைவிட மோசமாக நடத்தப்படுகின்றார்களே, அவர்களுக்கு சமத்துவத்தை வழங்க சைவம் முன் வருமா ? கடவுள் முன்னால் பாகுபாடு காட்டக் கூடாது என்ற ‘நந்தன் தத்துவத்தை’ நடைமுறையில் செயல் படுத்த, சைவர்கள் மேற்கொண்ட முயற்சிகள் என்ன ? என்று ‘ரிவோல்ட்’ அறைகூவல் விடுத்தது. **(10.4.1929)**

சைவத்தில் ஆழமான புலமை பெற்றவரும், சுய மரியாதைக்காரருமான நாகர்கோயில் வழக்கறிஞர் பி.சி. சிதம்பரம்பிள்ளை, சைவம், பார்ப்பனியத்திடம் மண்டி யிட்டுக் கிடப்பதை அடுக்கடுக்கான சான்றுகளுடன் விளக்கி, நீண்ட ஆராய்ச்சிக் கட்டுரைகளை ‘ரிவோல்ட்’டில் எழுதினார்.

தன்னுடைய வாதங்களுக்கு சான்றாக, சைவ சித்தாந் தத்தில் ஆழமான புலமை கொண்டவரும், நீதிபதியாக இருந்தவருமான கே.சுப்பிரமணியபிள்ளை, முன் வைத்த கருத்துகளைப் பயன்படுத்தினார். கோயில்களை அரசு கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வருவதற்காக அறநிலையத் துறை என்ற அமைப்பு உருவாக்குவதற்கான சட்டம் வந்த போது, நீதிபதி சுப்ரமணிய பிள்ளை தெரிவித்த கருத்து களை சிதம்பரம் பிள்ளை மேற்கொள் காட்டி எழுதினார்.

சைவக் கோயில்களில் பார்ப்பனர்கள் அர்ச்சகர் களாக முடியாது என்றுதான் சைவ நெறிகள் கூறு கின்றன. ஆனால், “ஸ்மார்த்தர்கள்” (பார்ப்பனர்கள் - ஸ்மார்த்தர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்) அர்ச்ச கர்களாக அனுமதிக்கப்பட்டுள்ளது சைவ நெறிகளுக்கே விரோத மானது. கோயிலுக்கு சென்று வழிபடும் சராசரி சைவரும், வைணவரும் வழிபாட்டின் நோக்கமே புரியாதவர்களாக இருக்கிறார்கள்.

ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள், கோயில் கர்ப்பகிரகத் துக்குள் நுழைவதே அரசனுக்கும் நாட்டு மக்களுக்கும் ஆபத்தை உருவாக்கிவிடும் என்பதால், அவர்கள் கரு வறைக்குள் நுழைவதையே கோயில் வழிபாட்டு முறை களைக் கூறும் ஆகமங்கள் தடை செய்துள்ளன. வெள் ளாளர்களின் உட்சாதிப் பிரிவான ஆதி சைவர்களுக்கு மட்டுமே சைவ கோயில் கருவறைக்குள் பூசை செய்யும் உரிமை உண்டு. ஆனால், பார்ப்பனர்களிடம் ஆதி சைவர்கள் தங்களது உரிமையை அறிவீனத்தின் காரணமாக விட்டுக் கொடுத்து விட்டார்கள் என்று நீதிபதி சுப்ரமணிய பிள்ளை, ஆகமங்களையே ஆதாரமாகக் காட்டி கூறியிருப்பதை பி.சி. சிதம்பரம் பிள்ளை ‘ரிவோல்ட்’டில் எடுத்துக் காட்டினார்.

சைவக் கோயில்களில் சைவ நெறிமுறைகளுக்கு எதிராக பார்ப்பனர்கள், சமஸ்கிருத வழிபாட்டைப் புகுத்தியதையும், திருச்செந்தூர், ராமேசுவரம் போன்ற சைவக் கோயில்களில் பார்ப்பனர்கள், தங்களுடைய அதிகாரத்தை நிலைநிறுத்த மேற்கொண்ட சூழ்ச்சியான நடைமுறைகளையும், ராமேசுவரம் கோயில் நிதியிலிருந்து சைவ நெறிக்கு எதிராக சமஸ்கிருதக் கல்லூரியையே பார்ப்பனர்கள் நிறுவிக் கொண்டதையும், ‘ரிவோல்ட்’ கட்டுரை விளக்குகியது.

ஸ்மார்த்த பார்ப்பனர்கள், சைவக் கோயில்களைக் கைப்பற்றிக் கொண்டு, சைவ நெறிமுறைகளுக்கு மாறாக வழிபாட்டு முறைகளை தலைகீழாக மாற்றிக் கொண்டதை எதிர்த்துப் போராட வேண்டிய சைவர்கள். சுயமரியாதை இயக்கத்தை எதிர்ப்பதில், முனைப்புக்காட்டுவது ஏன் என்ற கேள்வியை ‘ரிவோல்ட்’ எழுப்பியது. இதில் முக்கிய கவனத்துக்குரியது, பார்ப்பன - **சைவ முரண்பாடுகளை சுயமரியாதை இயக்கம் எப்படி கையாண்டது என்பதுதான்.** ‘ரிவோல்ட்’டின் கட்டுரைகள் சைவ பார்ப்பனக் கோட்டை களில் வெடிகுண்டுகளாகவே வெடித்திருக் கின்றன. ஒரு பக்கம் சைவக் கருத்தியல் என்ற ஆயுதத்தை பார்ப்பனருக்கு எதிராக பயன்படுத்திய சுயமரியாதை இயக்கம், அத்துடன் நிற்காமல், சுய மரியாதை சைவர்களின் மாநாட்டையும் கூட்டி, மற்றொரு நெருக்கடியை உருவாக்கியது. அது பற்றி அடுத்து எழுதுவோம்.

**– இரா**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 14.10.2010**

## *‘தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டத்துக்கு’ ஒரு விளக்கம்*

## பார்ப்பனரைக் கொழுக்க வைத்த ‘தமிழரும்’, அடக்கி வைத்த ‘திராவிடரும்’

*இராஜராஜ சோழன், பார்ப்பனர்களைக் கட்டுக்குள் வைத்திருந்தான் என்றும், களப்பிரர்கள், பல்லவர்கள் எனும் திராவிடர்கள்தான் பார்ப்பனியத்தை வளர்த்தார்கள் என்றும், ‘தமிழ்த் தேசிய தமிழர் கண்ணோட்டம்’, ‘புரட்சிப் பெரியார் முழக்கத்துக்கு’ பதில் என்று ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. பார்ப்பன நிலவுடைமை பிரபுவத்தின் தூண்களாக விளங்கிய மாமன்னர்களை பொதுவுடைமைப் புரட்சிக்காரர்கள் புகழ் மாலை சூட்டிப் பாராட்டிக் கொள்ளட்டும். நமக்கு கவலை இல்லை. ஆனால் ‘திராவிடர்’ என்று இவர்கள் கூறும் களப்பிரர் ஆட்சிதான் பார்ப்பனர்களை எதிர்த்து நின்றது என்பதற்கு ஒரே ஒரு சான்றை முன் வைக்கிறோம். ஒரு வேளை அந்த பார்ப்பன எதிர்ப்பைத்தான் இவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லையோ?*

கி.பி. **768** ஆம் ஆண்டில் ஒரு நாள் மாட மாமதில்கள் நிறைந்த கூடல் மாநகரில் சிரிவரன், சிரி மனோகரன், வீரபுரோகன் என்றெல்லாம் புகழ் பெற்ற பாண்டிய மாமன்னன் நேரியன் கோன் நெடுஞ்சடையன் வீதி உலா வந்து கொண்டிருந்த வேளையில் “கொற்றவனே” என விளித்து வீதியில் விழுந்தான் ஒரு பார்ப்பனன். சிண்டும் பூணூலும் மண்ணில் புரள விழுந்தெழுந்து கையேந்தி நின்ற அப்பார்ப்பனனின் பெயர் கொற்கை கிழான் நற்சிங்கன். “என்ன உன் குறை” எனப் பாண்டியன் கேட்ட பொழுது பார்ப்பனன் கீழ்க்கண்டவாறு விடையிறுத்தான். “முன்னாளில் உமது முன்னோரால் பாகனூர் கூற்றத்தைச் சேர்ந்த விண்ணளாவிய சோலைகள் சூழ்ந்த வேள்விக்குடி என்னும் ஊரை உனது மூதாதையர் எனது மூதாதையர்க்கு வேள்வி நடத்திக் கொடுத்ததற்காகத் தாரை வார்த்துத் தந்திருந்தனர். ஆனால் அந்தத் தானம் **களப்பிரர் என்னும் கலியரசரால் நீக்கப்பட்டது.** எனக்கு நீ அதை மீட்டுத் தர வேண்டும்.” இதைக் கேட்ட அரசன் அவன் கூறியதை ஏற்றுத் தம் முன்னோர்களால் தரப்பட்டது எனப் பெருமை கொண்டு அந்த வேள்விக்குடியை மீண்டும் அப்பார்ப்பனனுக்கு நீரோட்டித் தானம் வார்த்தான்.

இச்செய்தி வேள்விக்குடி சாசனம் என்று அழைக்கப்படக் கூடிய புகழ் பெற்ற செப்பேட்டில் விரிவாகச் சொல்லப்படு கின்றது. தமிழக வரலாற்று ஆதாரங்களில் மிக முக்கியமானவை எனக் கருதப்படுவனவற்றுள் ஒன்று. இது சங்க காலத்தைச் சேர்ந்தவனும் புறநானூற்றில் பாடப் பெற்றவனுமான “பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி” என்னும் பாண்டிய மன்னனுக்கு சுருதி மார்க்கம் பிழையாத கொற்கை கிழான் நற்கொற்றன் என்கிற பார்ப்பனன் வேள்வி முற்றுவித்துக் கொடுத்ததற்காக வேள்விச் சாலை முன்பு நின்று வேள்விக்குடி என்னும் அவ்வூரைத் தாரை வார்த்துக் கொடுத்த செய்தியும் பின்னர் இத்தகைய தானங்கள் எல்லாம் களப்பிரர் என்னும் கலியரசரின் ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்டதும் பின்னர் களப்பிரர்கள் வீழ்த்தப்பட்டுப் பாண்டியர்கள் மீண்டும் ஆட்சிக்கு வந்த பின் மீண்டும் அத்தானங்கள் அந்தப் பார்ப்பனர்களின் சந்ததியினர்க்கு மீண்டும் தானம் வழங்கியதையும் இச்செப்பேட்டிலிருந்து விரிவாய் அறிகின்றோம். இதிலிருந்து நாம் பெறும் உண்மைகளைக் கீழ்க்கண்டவாறு தொகுத்துக் கொள்ளலாம்.

1. சங்க காலத்தின் நடுப்பகுதியிலிருந்து பார்ப்பனர்களுக்கு வேள்வி செய்தமைக்காகத் தானங்கள் வழங்கப்படுகின்றன.
2. கி.பி. 3 லிருந்து கி.பி. 6 வரை தமிழகத்தில் ஆட்சி அதிகாரம் பெற்ற களப்பிரர்கள் இத்தகைய வேள்விகளையும் பார்ப்பனர்க்கான தானங்களையும் ஒழிக்கின்றனர்.
3. மீண்டும் கி.பி. ஆறாம் நூற்றாண்டில் களப்பிரரை அழித்து ஆட்சிக்கு வருகிற பாண்டிய மன்னர்கள் வேள்விகளையும் தானங்களையும் நிலமான்யங்களையும் ஊக்குவிக்கின்றனர்.

— — — — — — — — — — — — — —

களப்பிரரை அழித்தொழித்த பாண்டிய மன்னர்களைப் பற்றிச் சொல்ல வரும் வேள்விக்குடி சாசனம் அவர்களது பெருமைகளாகக் கீழ்க்கண்டவற்றைச் சொல்லும்.

அ) பிரவரைப் பாழ்படுத்தி, குறுநாட்டவர் குலங்கெடுத்து செந்நிலங்களைச் செறுவென்றது.

ஆ) இரணிய கர்ப்பம், துலாபாரம் முதலியன தரணிமிசை பல செய்து அந்தணர்க்கு ஈன்றளித்தது.

இ) மகீதலம் **பொது நீக்கி** தானமளித்து அரசாண்டது.

இதில் “பொது நீக்கி” என்ற தொடரின் உட்பொருளைக் கவனமாக ஆராய்தல் அவசியம். இனக் குழு மக்களிடம் பொதுவாக இருந்த நில உரிமையை அழித்து பார்ப்பன, வேளாள அதிகாரத்துவத்திற்குத் தனிவுடமையாக மாற்றியதையே இது குறிக்கின்றது. ஆம், ஒடுக்கப்பட்ட மக்களிடம் பொதுவாக இருந்த நிலவுரிமை அழித்தொழிக்கப்பட்ட காலம் இவர்களுக்குப் பொற்காலம். பார்ப்பன, வேளாளர்களுக்குக் கேடு வந்த களப்பிரர் காலம் இருண்ட காலம். நமக்கு எதிராக இப்படி ஒரு வரலாற்றை எழுதித் தமிழ் வரலாறு எனவும் தமிழ்ப் பண்பாடு எனவும் தமிழ்ப் பாரம்பரியம் எனவும் தமிழ் மதம் எனவும் நம் மீது திணிப்பதை எத்தனை காலத்திற்கு நாம் சகித்திருப்பது ?

**– பொ. வேல்சாமி எழுதிய “பொற்காலங்களும், இருண்ட காலங்களும்” நூலிலிருந்து**

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# நாத்திகம் இராமசாமி நினைவு மண்டபம் திறப்பு

24.9.2010 அன்று சாதி மறுப்பு போராளி நாத்திகம் பி. ராமசாமி நினைவு மணி மண்டபம், ஆழ்வார்தோப்பில் அவர் உடல் அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. மணி மண்டபத்தை பெரியார் திராவிடர் கழக தலைமை செயற்குழு உறுப்பினர் பால். பிரபாகரன் திறந்து வைத்தார். நிகழ்வில் கழகத் தோழர்களும், நாத்திகம் ராமசாமியின் குடும்பத்தினரும், ஆழ்வார் தோப்பு ஊர் மக்களும் கலந்து கொண்டனர். அன்று காலை மற்றும் மதிய உணவை ஊர் மக்கள் அனைவருக்கும் நாத்திகம் ராமசாமியின் குடும்பத்தினர் அளித்தனர்.

தொடர்ந்து அன்று மாலை 6 மணியளவில் ஆழ்வார் திருநகரி சீரணி அரங்கத்தில் தூத்துக்குடி மாவட்ட கழக சார்பில் அக்.2 போராட்ட விளக்கக் கூட்டம் நடைபெற்றது. ஆழ்வை ஒன்றிய செயலாளர் இரா. உதயகுமார் தலைமை வகித்தார். மாவட்ட துணைத் தலைவர் வே. பால்ராசு, மாவட்ட செயலாளர் கோ.அ. குமார், மாவட்டத் தலைவர் பொறிஞர் சி. அம்புரோசு, ஆதித் தமிழர் பேரவையின் இரா. வே. மனோகர் உரையாற்றினர். தொடர்ந்து, நாத்திகம் இராமசாமியின் செயல்பாடுகளை அவரது மகன் பன்னீர்செல்வம் எடுத்துரைத்தார். இறுதியில் ஆழ்வை ஒன்றிய தலைவர் நாத்திகம் பா. முருகேசனார் நன்றியுரை சொன்னார்.

நிகழ்வில் மாவட்ட துணை செயலாளர் க. மதன், தூத்துக்குடி மாநகர செயலாளர் பால். அறிவழகன், மாநகர இணை செயலாளர் ச. ரவிசங்கர், மாநகர பொருளாளர் வ. அகரன், அமிர்தரசு மற்றும் நெல்லை மாவட்ட செயலாளர் சி.ஆ.காசிராசன், நெல்லை மாயா, ஆதித் தமிழர் பேரவையின் முருகன் மற்றும் உணர்வாளர்கள் பலரும் கலந்து கொண்டனர். ●

## குடுமிகளின் பின் போனான் இராஜஇராஜன்

*பண்டரசர் தமிழ்ப் பெயரே*
*கொண்டிருந்தார்!*
*பாண்டியன் சேரன் சோழன்*
*என்றே வாழ்ந்தார்!*
*வண்டமிழில் பெயர் கொண்டார்*
*புலவரெல்லாம்!*
*வள்ளுவனாய் இளங்கோவாய்*
*வாழ்வு கண்டார்!*

*கொண்டபெயர் வடமொழியாய்*
*ராஜராஜன்*
*குடுமிகளின் பின் போனான்...*
*அந்நாள் தொட்டு*
*கண்டமொழிப் பெயர்களெலாம்*
*தமிழன் ஏற்றான்!*
*கழுதையிலும் இழிவுற்றான்!*
*அழிவுற்றானே!*

**– உணர்ச்சிக் கவிஞர் காசி ஆனந்தன்.**

(கோபிப்பாளையம் நல்லாசிரியர் புலவர் மா. அரசு, 10 ஆம் ஆண்டு நினைவாக வெளிவந்த "தமிழ்ப் பெயர்கள் நூலு"க்கு எழுதிய கவிதை.)

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கருத்தைக் கூறுவது, இரு தரப்பிலிருந்தும் வீண் சர்ச்சைகளுக்கே வழி வகுக்கும்."

1994 ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் ஒருமித்து வழங்கிய தீர்ப்பு இது. அதற்குப் பிறகு 2003 ஆம் ஆண்டில் அலகாபாத் உயர்நீதிமன்றம் தொல்பொருள் ஆய்வு மேற் கொள்வதற்கான அனுமதியை உ.பி. மாநில அரசுக்கு வழங்கியது. அப்போதுகூட உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை மீறாமல், ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டது. அதாவது, கோயிலை இடித்துத்தான் மசூதி கட்டப்பட்டது என்பது போன்ற முடிவுகளுக்கு இந்த ஆய்வைப் பயன்படுத்தக் கூடாது என்பதே அதன் பொருள். வரலாறுகளையும், தொல்பொருள் ஆய்வுகளையும் பரிசீலிப்பது, நீதிமன்றங்களின் வேலையல்ல என்று உச்சநீதிமன்றம் தெளிவாக தீர்ப்பளித்த பிறகும், அலகாபாத் உயர்நீதிமன்ற நீதிபதிகள் உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பை குப்பைத் தொட்டியில் வீசிவிட்டனர்.

நில உரிமைக் கோரி தொடரப்படும் வழக்குகள் 12 ஆண்டுகாலத்துக்குள் தொடரப்பட வேண்டும் என்று, அதற்கான காலவரம்பு சட்டம் கூறுகிறது. (Limitation Act) இந்த வழக்கில் சன்னி வக்புவாரியம், அந்தக் காலவரம்புக்குள் வழக்கை தாக்கல் செய்யவில்லை என்று கூறி, வாரியத்தின் மனுவை நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

உண்மையில் பாபர் மசூதி 480 ஆண்டுகளாக முஸ்லீம்களுக்கு சொந்தமானது. அவர்களின் இந்த உரிமை மீது எந்த வழக்கும் இல்லை. இப்போது வழக்கு அவர்களுக்கு உரிமையுள்ள மசூதியில் 1949 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட ராமன் சிலை வைக்கப்பட்டுள்ள பகுதிக்கு மட்டும்தான். இதை எதிர்த்து 12 ஆண்டுகாலத்துக்குள் அதாவது, 1961 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் தேதி மனு தாக்கல் செய்து விட்டார்கள். பாபர் மசூதி நிறுவப்பட்ட காலத்தைக் கணக்கிடுவது இந்த வழக்குக்குப் பொருந்தாது. ஆனால், நீதிமன்றம் இந்த நியாயங்களை ஏற்கத் தயாராக இல்லை. வக்பு வாரிய மனுவைத் தள்ளுபடி செய்து விட்டது.

5000 பக்கங்களில் தீர்ப்பை எழுதிய நீதிபதி அகர்வால், ரிக்வேதத்தை எடுத்துக் காட்டியிருக்கிறார். "மனிதர்கள் எப்போது படைக்கப்பட்டார்கள் என்பது யாருக்கு தெரியும் ? ஞானிகளும், முனிவர்களும் பிரபஞ்சம் படைக்கப்பட்ட பிறகு வந்தவர்கள் தானே. இந்த பிரபஞ்சம் அழியும்போது யார் மிஞ்சப் போகிறார்கள் ?" என்றெல்லாம் தீர்ப்பில் எழுதுகிறார். தீர்ப்புகளில் சட்டப் பிரிவுகளும், முன்னுதாரணங்களாக வழங்கப்பட்ட தீர்ப்புகளும் இடம் பெறும் நிலை மாறி, "ரிக்வேதங்கள்" இடம் பிடிக்கத் தொடங்கிவிட்டன.

'இராமனே' நீதிமன்றத்தில் மனுதாரராகிவிட்டபோது, நீதிபதிகள் மனுதர்மத்தைத் தானே தீர்ப்பாக வழங்குவார்கள் ? அதுதான் அலகாபாத்தில் நடந்து முடிந்திருக்கிறது. ஒரு குலத்துக்கு ஒரு நீதி பேசும் மனுதர்மங்கள் தீர்ப்புகளாக வந்த பிறகும், நாட்டில் மதக் கலவரங்கள் இல்லை என்பதும் மதத்தின் பெயரால், ரத்தம் சிந்தப்படவில்லை என்பதும் ஆறுதல் தருகிறது. இந்தப் பெருமைக்கும், புகழுக்கும் உரியவர்கள் இஸ்லாமிய சமூகத்தினர்தான். நீதி வெல்லும் என்ற நம்பிக்கையோடு அவர்கள் காட்டிய சகிப்புத் தன்மையும், பொறுமையும், வரலாற்றில் இடம் பெறக்கூடிய சிறப்புகளாகும் !

அதே நேரத்தில், அலகாபாத் நீதிபதிகளின் தீர்ப்பு நீதித்துறை வரலாற்றின் கரும்புள்ளி என்று கூரை மீது ஏறி கூவலாம். ●

# உடுமலை, மடத்துக்குளம் ஒன்றியத்தில் வாகனப் பேரணி



தந்தை பெரியாரின் 132 ஆவது பிறந்த நாள் விழா உடுமலை மடத்துக்குளம் ஒன்றியங்களில் 19.9.2010 ஞாயிறு அன்று கொண்டாடப்பட்டது. உடுமலை மத்திய பேருந்து நிலையத்தில் கழக நகர துணைச் செயலாளர் சு.சிவசங்கர் கழகக் கொடியை ஏற்றி வைத்து இரு சக்கர வாகனப் பயணத்தை தொடங்கி வைத்தார். உடுமலையில் தொடங்கிய பயணம் சின்னவீரன்பட்டியை சென்றடைந்தது. அங்கு கிளைச் செயலாளர் சு.தமிழ்வேந்தன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அடுத்து பயணம் இந்திரா நகர் பகுதியை சென்றடைந்தது. அங்கு உடுமலை ஒன்றிய செயலாளர் கோ.விசு கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அங்கிருந்து தாந்தோணி, துங்காவி, பாறையுர், சீலநாயக்கன்பட்டி, வழியாக காரத்தொழுவை சென்றடைந்தது. அனைத்து கிராமங்களிலும் பெரியார் சிந்தனைகள் மற்றும் திருச்சியில் அக்டோபர் 2 இல் நடைபெற உள்ள போராட்டம் குறித்து அச்சடிக்கப்பட்ட துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. காரத்தொழுவில் கிளை அமைப்பாளர் கு. மயில்சாமி கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அங்கு தந்தை பெரியாரின் பிறந்த நாள் சிந்தனைகளுடன் கூடிய பதாகைகள் மக்களை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. அடுத்து பயணம் கணியூர் பகுதியை சென்றடைந்தது. அங்கு மடத்துக்குளம் ஒன்றிய துணைச் செயலாளர் மா. மோகன்குமார் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். கணியூர் மற்றும் வஞ்சிபுரம் பகுதிகளில் துண்டறிக்கைகள் பொது மக்களுக்கு விநியோகிக்கப்பட்டன.

கணியூரிலிருந்து புறப்பட்ட இரு சக்கர வாகனப் பயணம் கடத்தூர் பகுதியை சென்றடைந்தது. அங்கு கடத்தூர் கிளைச் செயலாளர் அய்யப்பன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். அடுத்து கடத்தூர் புதூர் பகுதிக்கு வாகனப் பயணம் சென்றடைந்தது. சரவணன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார். பயணத்தில் பங்கேற்ற தோழர்கள் அனைவருக்கும் கடத்தூர் பகுதித் தோழர்கள் மதிய உணவை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர். கடத்தூரிலிருந்து புறப்பட்ட பயணம் மடத்துக்குளம், குமரலிங்கம், கொழுமம் வழியாக ருத்ராபாளையத்தை சென்றடைந்தது. ருத்ராபாளையத்தில் மடத்துக்குளம் ஒன்றய அமைப்பாளர் துரை. இராசேந்திரன் கழகக் கொடியை ஏற்றி வைத்தார்.

நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்த உடுமலை நகரத் தலைவர் யாழ். நடராசன், உடுமலை நகரச் செயலாளர் இரா. பாக்கியநாதன், உடுமலை க. இரமேசு, கடத்தூர் கதிரவன், கிருஷ்ணன், மணிகண்டன், காரத்தொழுவு சு. சிவானந்தம், கொழுமம் பாலு உள்பட பல தோழர்கள் கலந்துகொண்டனர். ●

## புதுக்கோட்டை பூபாளம் குழுவினரின் பகுத்தறிவுக் கலை நிகழ்ச்சி

17.9.2010 மாலை சித்தாபுதூர் மின் மயானம் அருகில் தந்தை பெரியாரின் 122 ஆவது பிறந்த நாள் விழா பொதுக் கூட்டத்திற்கு மாநகர தலைவர் தலைமை வகித்தார். பகுதி கழகத் தோழர்கள் கிருட்டிணமூர்த்தி, குமணன், அர. இராசன், மு. பாண்டியன் முன்னிலை வகித்தனர். மாநகர அமைப்பாளர் பழையூர் செல்வம் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தில் மாநகர செயலாளர் இ.மு.சாஜித், துணைத் தலைவர் ந. தண்டாணி, செயலாளர் இளங்கோ, செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி உரை நிகழ்த்தினர். பின்னர் கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் சிறப்புரையாற்றினார். முடிவில் இரவு 8 மணிக்கு புதுக்கோட்டை பூபாளம் குழுவினரின் 'பகுத்தறிவு கலை நிகழ்ச்சி' எழுச்சியுடன் நடந்தது. ஏராளமான பொது மக்கள் நிகழ்ச்சியை கண்டுகளித்ததோடு, நன்கொடைகளையும் வழங்கினர். கூட்டத்தில் கோவை இரத்தினபுரியை சார்ந்த கவுதமன் என்ற 13 வயது சிறுவன் பெரியாரைப் பற்றி 20 நிமிடம் ஆற்றிய உரையைக் கேட்டு பொது மக்கள் சிந்தித்ததுடன், ஏராளமான நூலகளை வாங்கிச் சென்றனர். முடிவில் சா. கதிரவன் நன்றி கூறினார். ●

### திருத்தம்


பிப்.2 ஆம் தேதி அண்ணா நினைவு நாள் : "நான்கு மாதத்திற்குள் அரசு தீண்டாமைக் குற்றங்களைத் தடுத்திட திருப்தி தரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்" என்று வெளி வந்திருக்க வேண்டிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி உரை - 40 நாட்கள் இடைவெளியில் என்று தவறுதலாக கடந்த இதழில் வெளிவந்துள்ளது. தவறுக்கு வருந்துகிறோம். (ஆர்.)

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்:
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 14th October 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.



# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | அக்டோபர் 21, 2010 | புரட்சி 9 | முழக்கம் 41 | விலை: ரூ.2.50

## அரசு ஆணைகளை மதிக்காது, ஆயுத பூசை போடும் காவல்நிலையங்கள்

# கழகம் நேரடி நடவடிக்கை





*காவல் நிலையங்களில் ஆயுதபூசை நடத்துவதை எதிர்த்து திருச்சியில் கூடிய கழக மாநில செயற்குழுக் கூட்டத்தில் நிறைவேற்றிய தீர்மானத்துக்கு செயல் வடிவம் தந்து, கழகத் தோழர்கள் சென்னை, மேட்டூரில் களப்பணியில் இறங்கினர். கோவையில் ஆயுத பூசை நடத்துவதை எதிர்த்து, கழக சார்பில் ஆர்ப்பாட்டம் நடந்தது.*


ஆயுத பூசை வந்து விட்டால் அரசு அலுவலகங்கள், குறிப்பாக காவல் நிலையங்கள், இந்து மடங்களாக மாறி விடுவது வழக்கமாகி விடுகிறது. காவல் நிலையங்களில் மதச்சார்புள்ள வழிபாடுகள் மற்றும் ஆயுத பூசைகளைக் கொண்டாடக் கூடாது என அரசு ஆணை இருந்தும், காவல்துறை அதை மதிப்பது இல்லை. இதைத் திருச்சி தீர்மானப்படி தடுத்து நிறுத்திட சென்னை மாவட்ட பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் களமிறங்கினர். சென்னை மாநகரக் காவல்துறை ஆணையரின் கவனத்துக்கு இப் பிரச்சினையை சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் கொண்டு சென்றனர்.

கழகத்தின் துணைத் தலைவர் ஆனூர் ஜெகதீசன், கழகத் தோழர்களுடன் ஆணையாளரை சந்திக்க நேரம் கேட்டபோது, 'இது குறித்து அனைத்து காவல் நிலையங்களுக்கும், ஆயுத பூசை நடத்தக் கூடாது என்று அறிவுறுத்தி, சுற்றறிக்கை அனுப்பப்பட்டு விட்டது' என்று ஆணையாளர் சார்பாக தெரிவிக்கப்பட்டது. சென்னை மாவட்ட கழக சார்பில், நகரிலுள்ள சுமார் 70 காவல் நிலையங்களுக்கு தென் சென்னை மாவட்டத் தலைவர் தபசி. குமரன், கையெழுத்திட்டு, ஆயுதப் பூசைகளை நிறுத்துமாறும், மீறி கொண்டாடினால், மக்களை திரட்டி, ஆர்ப்பாட்டம் நடத்துவோம் என்றும் அறிவித்து, கடிதங்கள் அனுப்பப் பட்டன. ஒரு சில காவல் நிலையத்தில் மட்டும் கடிதத்தை வாங்க மறுத்து, திருப்பி அனுப்பினர். ஆயுத பூசை போடும் நாளில், ஒவ்வொரு பகுதியிலும், கழகத் தோழர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டனர். காவல் நிலையங்களுக்கு நேரில் சென்று, அரசு ஆணைக்கு எதிராக ஆயுத பூசைகள் கொண்டாட வேண்டாம் என்று நேரிலும் வேண்டுகோள் விடுத்தனர்.

இதன் காரணமாக வெளிப்படையாக வாழைமரம், தோரணம் கட்டி, ஆயுதப் பூசை கொண்டாடுவது பல காவல் நிலையங்களில் நிறுத்தப்பட்டது. கடந்த சனிக்கிழமை (அக்.16) பேசின் பிரிட்ஜ் காவல்நிலையத்தில் வாழை மரம் கட்டி, தடபுடலாக, பூசைகள் நடத்த ஏற்பாடு நடக்கும் செய்தி, கழகத் தோழர்களுக்கு எட்டியது. தென் சென்னை மாவட்டக் கழகத் தலைவர் தபசி. குமரன், செயலாளர் உமாபதி, வடசென்னை மாவட்டக் கழகத் தலைவர் கேசவன், செயலாளர் அன்பு ஆகியோருடன் 50 தோழர்கள், பேசின் பிரிட்ஜ் காவல் நிலையம் அருகே கூடி, ஆர்ப்பாட்ட முழக்கங்களுடன் ஊர்வலமாகச் சென்று காவல்

(4 ஆம் பக்கம்)

## சுட்டுவிடுவோம்; துப்பாக்கியை நீட்டி கழகத் தலைவரை மிரட்டிய மேட்டூர் காவல்துறை







***காவல் நிலையத்தில் பூசைப் பொருட்கள் சிதறிக் கிடக்கும் காட்சி***

ஆயுத பூசையைக் கொண்டாடுவதை தடை செய்து, அரசு பிறப்பித்த ஆணையையும், வேண்டுகோள் கடிதத்தையும் மேட்டூர் கழகத் தோழர்கள் காவல்நிலையத்துக்கு பதிவு தபாலில் அனுப்பினர். பிறகு, 16 ஆம் தேதி நேரிலும் சென்று கேட்டுக் கொண்டனர். எல்லாவற்றையும் மீறி, காவல்துறை ஆயுத பூசை நடத்த ஏற்பாடுகள் செய்ததை அறிந்து, கழக மாவட்டத் தலைவர் மார்ட்டின், பொருளாளர் கோவிந்தராசு, கழகத்தோழர்கள் முத்துராசு, பாலு ஆகியோர் காவல் நிலையம் சென்று பூசை கொண்டாட்டங்களை அலைபேசியில் படம் எடுத்தபோது, காவல்துறையினர் அலைபேசிகளை பிடுங்கி, கீழே போட்டு உடைத்தனர். அதைத் தொடர்ந்து பதட்டமான சூழல் உருவானது. கழகத் தோழர்களையும் தாக்கியுள்ளனர்.

சேதி அறிந்து கழகத் தலைவர் கொளத்தூர் மணி தோழர்களுடன் காவல்நிலையம் சென்றபோது காவலர்கள் சிலர் துப்பாக்கியைத் தூக்கிக் கொண்டு, 'சுட்டு விடுவோம்' என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணியை மிரட்டினர். 'லஞ்சம் வாங்குகிறவர்களுக்கு, இவ்வளவு துணிவு வந்துவிட்டதா ?' என்று கழகத் தலைவர் கேட்டபோது, 'காலம்காலமாக பூசை நடத்துவதை தடுக்கலாமா ?' என்று கேட்டனர். லஞ்ச ஒழிப்புத் துறையினர் வந்தால் காலம்காலமாக லஞ்சம் வாங்குவதை தடுப்பதா என்று கேட்பீர்களா, என்று கழகத் தலைவர் திருப்பிக் கேட்டார். நிலைமை பதட்டமானது.

காவல்துறை உயர் அதிகாரிகள் விரைந்து வந்தனர். 'அலைபேசி'யில் படம் பிடித்த கழகத் தோழர்கள் நான்கு பேர் மீதும் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 452, 353, 332, 50 பகுதி 2 (2) மற்றும் பொதுச் சொத்துக்கு சேதம் விளைவிக்கும் பிரிவு 3(1) கீழ் வழக்குப் பதிவு செய்து கைது செய்து, சேலம் சிறையில் அடைத்தனர். காவல்துறை அலுவலகத்தில் உள்ள மேசை, நாற்காலி, சாமி படம் ஆகிய பொதுச் சொத்துக்களை சேதப்படுத்தியதாகவும், பொறி, பழங்களுடன் சாமி படத்துக்கு சிறிய பூசை போடும்போது அவற்றை சேதப்படுத்தியதாகவும் வழக்குப் பதிவு செய்துள்ளது காவல்துறை.

**– நமது செய்தியாளர்**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 21.10.2010**

# கோவையில் கழகத்தின் தொடர் போராட்டங்கள்

### அலுவலகத்தில் ஆயுத பூசையா?

அரசு அலுவலகங்களில் ஆயுத பூசை நடத்துதல் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மதவழிபாடு செய்தல் மற்றும் கடவுளர் படங்களை அகற்றக் கோரி கோவையில் 13.10.2010 புதன் கிழமை மாலை 4 மணியளவில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு கழகப் பொதுச்செயலாளர் கு. இராமகிருட்டிணன் தலைமையேற்றார். கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி, மாநகர தலைவர் கோபால், செயலாளர் சாஜித், பொருளாளர் இரஞ்சித், அமைப்பாளர் மு. செல்வம், அலுவலக பொறுப்பாளர் கதிரவன், வடக்கு மாவட்ட தலைவர் இராமசாமி, செயலாளர் நாகராசு, அமைப்பாளர் சண்முக சுந்தரம், பொருளாளர் மதியழகன் உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டம் துவங்கும்முன் பலத்த மழை பெய்தது. கொட்டும் மழையிலும் தோழர்கள் பெருவாரியாக ஆர்ப்பாட்டத்திற்கு வந்து பங்கேற்றனர். மேலும் மாணவரணி அமைப்பாளர் பன்னீர், நேரு, மாநகர துணைச் செயலாளர் தமிழரசன், சூலூர் பன்னீர் செல்வம், கலங்கல் வேலு, வேலாண்டிபாளையம் சம்பத், இராசன், ஈசுவரன், மாணிக்கம், பரத், பார்த்தசாரதி, மாநகர துணைத் தலைவர் தண்டபாணி, அன்னூர் ஈசுவரன், வழக்கறிஞர்கள் பாலசந்தர், பார்த்தசாரதி, வள்ளி உள்ளிட்ட ஏராளமான தோழர்கள் கலந்து கொண்டனர்.



### ராஜபக்சே உருவ பொம்மை எரிப்பு: தோழர்கள் கைது

தமிழின அழிவுக்கு காரணமான இலங்கை அதிபர் இராசபக்சே காமன்வெல்த் போட்டி நிறைவு விழாவிற்கு



வருவதைக் கண்டித்து கோவையில் கழகத் தோழர்கள் தடையை மீறி ஆர்ப்பாட்டம் செய்தனர். 13 ஆம் தேதி இரவு முடிவு செய்யப்பட்டு, நள்ளிரவு தோழர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, 14 ஆம் தேதி காலை 11 மணியளவில் கழக அலுவலகத்திற்கு அருகிலுள்ள திருவள்ளுவர் பேருந்து நிலையத்திலிருந்து ஊர்வலமாக கழக செயற்குழு உறுப்பினர் வெ. ஆறுச்சாமி தலைமையில், தோழர்கள் சென்றனர். ஊர்வலமாக கிளம்பிய தோழர்களை காவல் துறையினர் தடுத்து, கைது செய்தனர். தோழர்கள் இராச பக்சேவின் படங்களையும், இலங்கை கொடியினையும் எரித்தனர். எரிந்த மற்றும் எரிக்க முயன்ற மற்ற படங்களை காவல் துறையினர் பாய்ந்து பிடுங்க முயன்றனர். கழகத் தோழர்கள் விடாப் பிடியாக எரிக்க முயன்றதால் அந்தப் பகுதி யில் போக்கு வரத்து நிறுத்தப்பட்டு, பரபரப்பாக காணப்பட்டது. போராட்டத்தில் மாநகர செயலாளர் சாஜித், பொறுப்பாளர் இரஞ்சித், அமைப் பாளர் செல்வம், அலுவலக பொறுப்பாளர் கதிரவன், வடக்கு மாவட்ட தலைவர் இராமசாமி, செயலாளர் நாகராசு, பரத், சதீசு, பார்த்தசாரதி, பெரியார் மணி, சம்பத், சிங்கை மனோகரன், நேருதாசு உள்ளிட்ட பல தோழர்கள் பங்கேற்று கைதாகினர்.

### அசீனுக்கு கருப்புக்கொடி: பொய்ச்செய்திக்கு கழகம் மறுப்பு

கடந்த 3 ஆம் தேதி படப்பிடிப்பிற்காக மேட்டுப்பாளையம் வந்த நடிகை அசினிற்கு கழக சார்பில் கருப்புக்கொடி காட்டப்பட்டது. சமீபத்தில் படப்பிடிப்பிற்காக இலங்கை சென் றதுடன், அதற்காக வருத்தம் தெரிவிக்காமல் பேட்டி அளித்ததற்காக கழகத் தோழர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர். எழுச்சியோடு நடைபெற்ற திருச்சி போராட்டத்திற்கு அடுத்த நாள் அசின் தொடர்வண்டி மூலம் மேட்டுப் பாளையத்துக்கு வருகின்ற தகவல் அறிந்து, உடனடியாக கழகப் பொறுப்பாளர்கள் சந்திரசேகர், பிரசன்னா இருவரும் தொடர்வண்டி நிலையம் சென்று, அங்கு வந்த நடிகை அசினிற்கு கருப்பு கொடி காண்பித்தும், முழக்கமிட்டும், தங்களின் கண்டனத்தை பதிவு செய்தனர். நீண்ட நேரம் தோழர்கள் முழக்கமிட்ட பின், தொடர் வண்டி காவல் நிலையத்தில் கைது செய்யப்பட்டு, அங்கு மாலை வரை வைக்கப்பட்டு, பின் இரவு சுமார் 7 மணியளவில் மாநில காவல்துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

காவல்துறையினர் தோழர்கள் மீது வழக்கு பதிவு செய்து பின் பிணையில் விடுவித்தனர்.

உண்மை நிலை இவ்வாறு இருக்க, அடுத்த நாள் 'தினத்தந்தி' நாளேட்டில் கருப்பு கொடி காண்பித்த தோழர்களிடம் படப்பிடிப்பு குழுவினர் வாக்குவாதம் செய்ததாகவும், பின் காவல்துறையினர் வரும்போது, தோழர்கள் ஓடி விட்டதாகவும், காவல்றையினர் துரத்தி பிடித்து, கைது செய்ததாக பெய்யான செய்தியை வெளியிட்டுள்ளது.

கழகத் தோழர்கள் ஒரு போராட்டத்தை அறிவித்து நடத்தினால், அது காவல்துறை அனுமதி இல்லாத போராட்டமாக இருந்தாலும், அவர்கள் வந்து கைது செய்யும் வரை எதற்கும் அஞ்சாமல், அங்கேயே இருந்ததுதான் கடந்த கால வரலாறு.

எனவே நடக்காத ஒன்றை நடந்ததுபோல் செய்தி வெளியிட்டு, கழகத்தின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்த முயலும் 'தினத்தந்தி' நாளேட்டுக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கைகளை கழகப் பொதுச்செயலாளர் கு.இராம கிருட்டிணன் எடுத்து வருகிறார் என்று கோவை நகர கழகச் செயலாளர் சாஜித் தெரிவித்துள்ளார்.

## 'இராவணனை' எரித்து மகிழ்கிறார்கள்!



இராவணனை வழிபடக்கூடிய பழங்குடி மக்கள் இந்தியாவில் இருக் கிறார்கள். இராமாயணம் - ஆரிய திராவிடப் போராட்டத்தையே குறிக் கிறது என்றார், மறைந்த ஜவகர்லால் நேரு. நேரு குடும்பத்தில் வந்ததாகக் கூறிக் கொள்ளும் சோனியாவும், பிரதமர் மன்மோகன் சிங்கும், குடியரசுத் தலைவரும் டெல்லியில் இராவணன் உருவத்தை எரிக்கும் 'ராமலீலா' ஆரியத் திருவிழாவில் பங்கேற்று, தென்னாட்டு மக்களை திராவிடர்களை இழிவுபடுத்தி இருக் கிறார்கள்.

மாவீரர் இராவணன் பூமியில் வாழ்ந்த ஈழத் தமிழர்களை அழித் தொழித்தக் கூட்டம், மீண்டும் ஆர்ப்பரிக்கிறது. 'இராமன் பிறந்த இடத்தை' உயர்நீதி மன்றங்கள் தீர்மானிக்கின்றன.

'இராவணன்' அழிவில் சோனியா குடும்பம் மகிழ்ச்சி கூத்தாடுகிறது.

அன்று ராஜாஜியின் 'சக்கரவர்த்தி திருமகன்' என்ற இராமாயணத் தொடருக்கு கலைஞர் கருணாநிதி 'மூக்காஜி' என்ற பெயரில் பதிலடி தந்து இவ்வாறு எழுதினார்:

டெல்லியில் ராமலீலா என்ற பெயரில் ராவணன் உருவங்களை எரிப்பது தொடர்ந்தால், "தென்னாட்டிலும் ராமனை எரிக்கும் ராவண லீலாக்கள் நடத்தும் காலம் வந்தே தீரும்" ('முரசொலி' 8.10.1954) என்று போர்ச்சங்கு ஊதினார்.

இன்ற சொக்கத் தங்கம் சோனியாவே இராவணன் எரிப்பில் பங்கேற்கிறார். கலைஞர் மவுனம் சாதிக்கிறார்.

இந்தியா இத்தாலியப் பிடிக்குள் வந்தாலும், ஆரியத்துக்குத்தான் துணை போகிறது ! அய்யகோ; தமிழா, இதுவா உன் நிலை ?

## பெரியார், பிரபாகரன் நாட்காட்டி சட்ட விரோதமா?

பெரியார் திராவிடர் கழகம், தந்தை பெரியார், பிரபாகரன் படத்தோடு வெளியிட்ட நாட்காட்டியை விற்பனை செய்ததாக, கழகத் தோழர் பல்லடம், சங்கேதி பாளை யத்தைச் சேர்ந்த சுப்ரமணியன் மீது காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. இதை எதிர்த்து சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடரப் பட்டுள்ளது. கழக மூத்த வழக்கறிஞர் எஸ். துரைசாமி, இளங்கோ ஆகியோர் வழக்கு மனுவை தாக்கல் செய்துள்ளனர். தடை செய்யப்பட்ட இயக்கத்தின் தலைவர் படத்தை விற்பனை செய்வது, பயங்கரவாத நடவடிக்கை அல்ல. ஒரு கருத்துக்கு ஆதரவு தெரிவித்து பேசுவதே பயங்கரவாத நடவடிக்கை அல்ல.

1967 ஆம் ஆண்டு சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம், அவ்வப்போது மாறுதலுக்கு உள்ளாக்கப்பட்டு வருகிறது. 2004 ஆம் ஆண்டு மேலும் திருத்தப்பட்டு, தடை செய்யப்பட்ட அமைப்புக்கு ஆதரவாக கூட்டமே நடத்தத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது கருத்துரிமை பறிப்பு ஆகும். அத்துடன் அரசியல் சட்டம் 19வது பிரிவு வழங்கும் அடிப்படை உரிமையும் பறிக்கப்பட்டுள்ளது. எனவே 39(1)(பி)(1)-வது பிரிவு அடிப்படை உரிமைக்கு முரணானது என்பதால், அப் பிரிவை நீதிமன்றம் ரத்து செய்ய வேண்டும் என்று மனுவில் கூறப்பட்டுள்ளது.

# தூக்கு கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடல்


19 வயதில் கைது செய்யப்பட்ட அந்த இளைஞனுக்கு இப்போது வயது 38. தூக்குத் தண்டனைக்கு உள்ளாகி 19 ஆண்டுகள் சிறைவாசத்துக்குப் பிறகு அந்த இளைஞன் நியாயம் கேட்கிறான். 'தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடலை' படிக்கும் ஒவ்வொரு மனித உரிமையை நேசிக்கும் நெஞ்சமும், இந்த நியாயங்களை உணராமல் இருக்க முடியாது. இராஜீவ் மரண வழக்கில் சிக்க வைக்கப்பட்ட இந்த இளைஞன் செய்த 'குற்றம்' பெரியார் கொள்கைக் குடும்பத்தில் பிறந்ததுதான். பெரியார் கொள்கை உணர்வுகளே இந்த இளைஞனை தமிழினத்தின் விடுதலைக்காக போராடும், இயக்கங்களுக்கு பங்களிப்பு வழங்கும் உணர்வுக்கு உந்தியது. ஆனால், சட்டத்தின் நியாயங்கள், ஏன், இந்த இளைஞர்களுக்காக வாய் திறக்க மறுக்கின்றன ? பேரறிவாளன் எனும் இந்த இளைஞன் எழுப்புகிற, இந்த நியாய வாதங்களுக்கு நீதியும், சட்டங்களும், மனிதமும், ஏன், கண்களை மூடிக் கொள் கின்றன ? தூக்குக் கொட்டடியிலிருந்து கேட்கும் இந்த முறையீட்டு மடலை படித்தபோது, இந்தக் கேள்விகள் தான் நெஞ்சத்தை இரணமாக்குகின்றன. பேரறிவாளன் எழுப்புகிற நியாயங்களை தமிழினத்தின் மனசாட்சி முன் நிறுத்துகிறோம்.

1. ராஜீவ் காந்தியை வெடிக்கச் செய்த குண்டுக்கு தேவையான 9 வோல்ட் 'பேட்டரி செல்'லை (மின்கலம்), பேரறிவாளன்தான் சிவராசனுக்கு வாங்கிக் கொடுத்தார் என்பது சி.பி.அய். தரப்பு குற்றச்சாட்டு. இந்தக் குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறதா ?

பேரறிவாளன் - இந்த 'பேட்டரி செல்'லை மொய்தீன் என்பவர் கடையில் வாங்கியதாக குற்றம்சாட்டப்பட்டு, மொய்தீன் என்பவர் அரசு சாட்சியாக கொண்டு வரப்பட்டார். மொய்தீன் என்பவர் கடையில் அதை வாங்கியதாக பேரறிவாளன் ஒப்புதல் வாக்கு மூலம் தந்து விட்டார் என்பது அரசு தரப்பு குற்றச்சாட்டு. வழக்கோ 'தடா' சட்டத்தில் விசாரிக்கப்படுகிறது. விசாரணையில் குற்றம்சாட்டப்பட்டவர் தரும் ஒப்புதல் வாக்குமூலத்தை நீதிமன்றம் அப்படியே ஏற்றுக் கொண்டு விடலாம் என்கிறது 'தடா' சட்டம். ஒப்புதல் வாக்கு மூலம் தரவேண்டும் என்ற அவசியம்கூட இல்லை. அப்படி ஒரு வாக்குமூலம் தந்ததாக விசாரணை நடத்தும் காவல்துறை அதிகாரிகளே எழுதிக் கொண்டு விடலாம். உண்மையாகவே ஒப்புதல் வாக்கு மூலம் தந்து அதைப் பதிவு செய்திருந்தால், அதில் தடுமாற்றம் இருக்காது. பொய்யாக எழுதிக் கொண்டால், குழப்பம் தடுமாற்றம் வரத்தானே செய்யும் ? பேரறிவாளன் அப்படி ஒரு ஒப்புதல் வாக்கு மூலத்தை எந்தத் தேதியில் தந்தார் ? காவல்துறை ஆய்வாளர் சமர்ப்பித்த ஆவணத்தில் குழப்பம். குறுக்கு விசாரணையில் ஆய்வாளர் மூன்று முறை மாற்றி மாற்றி வேறு வேறு தேதிகளில் ஒப்புதல் வாக்குமூலம் தந்ததாகக் கூறுகிறார். அப்போதே பொய்யாக சோடனை செய்யப்பட்ட வாக்கு மூலம் என்ற முடிவுக்கு வர வேண்டிய நீதிமன்றம் ஏனோ வர மறுத்துவிட்டது.

2. ராஜீவ் கொலையில் குற்றம்சாட்டப்பட்டவர்கள் அனை வருக்கும் அப்படி ஒரு சம்பவம் நிகழ இருக்கிறது என்பதைத் தெரிந்துதான் அதில் தங்களை இணைத்துக் கொண்டார்களா ? இதற்கு, உச்சநீதி மன்றம் தந்த தீர்ப்பு 'இல்லை' என்பதுதான். உச்சநீதி மன்றம், இப்படி ஒரு முடிவுக்கு வருவதற்கான ஆதாரம் எது ? சிவராசன், 'ஒயர்லஸ்' மூலம் நிகழ்த்திய உரை யாடல்கள்தான், சிவராசன், பொட்டு அம்மானுடன் நிகழ்த்தியதாகக் கூறப்படும் அந்த 'ஒயர்லஸ்' உரையாடல்களிலிருந்து அறியப்படும் உண்மை இதுதான். அதாவது, ராஜீவை கொலை செய்ய சதித் திட்டம் தீட்டியுள்ள சேதி, சிவராசன், சுபா, தணு ஆகிய மூவருக்கு மட்டுமே தெரியும். வேறு எவருக்குமே தெரியாது. மே மாதம் 21 ஆம் தேதி ராஜீவ் மரணம் நிகழ்கிறது. மே மாதம் முதல் வாரம் வரை மூவரைத் தவிர வேறு யாருக்கும் இதுபற்றி தெரியாது. மே 7 ஆம் தேதிக்குப் பிறகு நளினிக்கு ஏதோ சதி நடப்பதாக சந்தேகம் வருகிறது. 19 ஆம் தேதி தான் உறுதியாக நளினிக்கு தெரிகிறது. எனவே நளினி குற்றவாளியாகி விடுகிறார் என்கிறது, நீதியரசர் வாத்வா தந்த தீர்ப்பு. இதே வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட இரவிச்சந்திர னுக்கு கொலை சதி பற்றி மே முதல் வாரம் வரை எதுவுமே தெரியாது என்பதால் அவரை சதிக் குற்றத்திலிருந்து நீதிமன்றம் விடுவித்து விடுகிறது. இப்போது பேரறிவாளன் பிரச்சினைக்கு வருவோம். பேரறிவாளன், சிவராசனுக்கு பேட்டரி செல் வாங்கிக் கொடுத்ததும், மே முதல் வாரத்தில்தான்.

"1991 மே முதல் வாரத்தில் இரண்டு கோல்டன் பேட்டரிகளை வாங்கியதாகவே" நீதிபதி தமது தீர்ப்பில் குறிப்பிடு கிறார். ஆக ரவிச்சந்தி ரனைப் போலவே ராஜீவ் கொலைக்கான சதி நடக் கிறது என்பது பேரறி வாளனுக்குத் தெரியாது என்ற முடிவுக்கு நீதி மன்றம் வந்திருக்க வேண் டியதுதானே நியாயம் ? ஆனால் அந்த நியாயத்தை பேரறிவாளனுக்கு மட்டும் நீதிமன்றம் வழங்க மறுத்தது நியாயம் தானா என்ற கேள்வி எழவே செய்கிறது. பேரறிவாள னுக்காக வாதாடிய வழக் கறிஞர் இதைத் தான் குறிப்பிட்டார்.




"அறிவு (பேரறிவாளன்) வெறும் ஓடும் பிள்ளைதான். சிவராசனின் கட்டளைகளை ஏற்றுச் செய்பவர்தான். அவருக்கென்று முனைப்பான பங்கு ஏதும் கிடையாது. சிவராசன் சொன்னபடியே கார் மின்கலத்தையும் 9 வோல்ட் கோல்டன் மின்கலத்தையும் கவேசாக்கி பஜாஜ் மோட்டார் சைக்கிளையும் வாங்கினார். இந்தக் காரணங்களை வைத்தே அறிவு சதிச் செயலை அறிந்திருந்தார் என்று சொல்வதற்கில்லை" என்று வாதிட்டார். ஏனோ நீதிபதி ஏற்கவில்லை.

3. ராஜீவ் கொலை செய்யப்பட இருக்கிறார் என்பது மட்டுமல்ல; எந்த முறையில் கொலை செய்யப்பட இருக்கிறார் என்பது சிவராசன், சுபா, தாணுவைத் தவிர வேறு எவருக்கும் தெரியாது. நளினிக்கே கடைசி நேரத்தில்தான் தெரியும் என்கிறது நீதிமன்ற தீர்ப்பு. தெரிந்திருந்தால் புகைப்படக்காரர் ஹரி பாபு, சிவராசனைப் போல் தொலைவில் நின்று, உயிர் பிழைத்திருப்பார். அருகே இருந்து உயிரிழந்திருக்க மாட்டார். வழக்கில் முக்கிய ஆவணமான 'கேமிரா'வும், புலனாய்வுத் துறைக்கு கிடைத்திருக்காது. இந்தப் பின்னணியில் சாதாரண கடைகளில் கிடைக்கக்கூடிய '9 வோல்ட்' பேட்டரியை பேரறிவாளன் வாங்கியது மனித வெடிகுண்டை வெடிக்கச் செய்வதற்குத்தான் என்பது பேரறிவாளனுக்கு எப்படித் தெரியும் என்ற நியாயமான கேள்வியை நீதிமன்றம் ஏற்க மறுத்து விட்டது.

4. தடா சட்டம், ராஜீவ் கொலை வழக்குக்குப் பொருந்தாது என்று உச்சநீதிமன்றம் கூறிவிட்டாலும், தடா சட்டப்படி விசாரணையில் 'பெறப்பட்ட' ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்றுக் கொண்டு தீர்ப்பு வழங்கியது, நீதிமன்றத்தின் மற்றொரு முரண்பாடு ஆகும்.

5. ராஜீவ் கொலையில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரும் கூட்டாக சதி செய்து, அதை நிறை வேற்றினார்கள் என்ற அரசு தரப்பு வாதத்தை உச்சநீதி மன்றம் ஏற்கவில்லை. இறந்து போனவர்கள் உள்ளிட்ட 'எதிரிகள்' சிலரைப் பொறுத்தவரை, சதிச் செயலில் பங்கு வகித்தார்கள் என்பதற்கு சான்றுகள் இல்லை என்று நீதிபதிகள் கூறினர். ராஜீவ் - ஜெயவர்த்தனா உடன் பாட்டுக்கு முன்னும் பின்னும் இந்தியாவில் விடுதலைப் புலிகள் இயக்கம், அதன் தேவைகளுக்கான பொருள்கள், பரப்புரை தொடர்பாக சில ரகசிய நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது உண்மை தான். ஆனால் அதை சதிச் செயலாகக் கருத முடியாது என்றும் நீதிபதிகள் தீர்ப்பில் கூறி விட்டனர். அதே செயல்பாடுகளுக்குத்தான் பேரறி வாளனும், சிவராசனோடு இணைந்து செயல்பட முன் வந்தார். இதை வாக்குமூலத்தில் பேரறிவாளன் கூறியிருந் தாலும், 'அவை சதிச் செயல் ஆகாது' என்று மற்றவர் களுக்கு கூறிய நீதிமன்றம், பேரறிவாளனை மட்டும் சதிக் குற்றத்தில் கொண்டு போய் நிறுத்தியது, நியாயம் தானா ?

6. வசந்த குமார் என்பவர் அரசு சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் சாட்சியமும், குறுக்கு விசாரணையும் 128 பக்கங்களில் உள்ளன. வசந்தகுமார், தனது சாட்சியத்தில் கூறாத ஒன்றை எந்தப் பக்கத்திலும் இடம் பெறாத ஒரு கருத்தை நீதியரசர் வாத்வா, பேரறிவாளனுக்கு எதிராக தனது தீர்ப்பில் கூறியிருப்பதுதான் வியப்புக்கு உரியது. இலங்கையில் இந்திய அமைதிப்படை செய்த கொடுமைகள் பற்றிப் பேசும்போது பேரறிவாளன் ராஜீவ் மீது வெறுப்புக் காட்டினார் என்று பேரறிவாளன் கூறாத ஒரு கூற்றை, வசந்த்குமார் வாக்குமூலத்தில் இடம் பெற்றதாக நீதிபதி தவறாகக் கூறுகிறார்.

7. குற்றம் சாட்டப்பட்ட எதிரிகளான விஜயன், செல்வன், செல்வ லட்சுமி ஆகியோரை விடுதலை செய்த உச்சநீதிமன்றம், இவ்வாறு கூறியது:

"எப்படிப் பார்த்தாலும் சதி நடைபெறுவதை அறிந்திருப்பது மட்டுமே போதுமானது அல்ல. சதியின் நோக்கத்துக்கு உடன்பட்டால் தான் இந்திய தண்டனைச் சட்டம் எ.120-ன்படி குற்றவாளியாக முடியும்" என்று கூறியது.

ஆனால், சதிச்செயலுக்கு உடன்பட்டதாகவோ, உதவிய தாகவோ, எந்த ஒரு இடத்திலும் வாக்குமூலச் சான்று இல்லாமலே, பேரறிவாளன் மட்டும் தண்டிக்கப்பட்டார்.

8. அந்த வாக்குமூலத்திலும்கூட சதிச் செயல் எனக்குத் தெரியும் என்பதேற்கோ, சிவராசன், தணு, சுபா ஆகியோரில் எவரேனும் கூறினர் என்பதற்கோ எவ்வித ஆதாரமும் இல்லை.

9. பேரறிவாளனை குற்றவாளியாக்குதற்கு நீதியரசர் வாத்வா -அவர் கற்ற மினன்ணுவியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியலில் 'டிப்ளோமா' படிப்பைப் பயன்படுத்துகிறார். இந்தக் கல்வி அறிவு தான் மனித வெடிகுண்டு தயாரிப்பதற்கு பயன்பட்டிருப்பதாகக் கருதுகிறார். தமிழ்நாட்டில் தி.மு.க. ஆட்சிக் கலைக்கப் பட்டதைத் தொடர்ந்து விடுதலைப் புலிகள் இயக்கத்தின் முக்கிய உறுப்பினர் பேபி சுப்ரமணியத்திடமிருந்த பத்திரிகைகள், நூல்களை ஒரு டெம்போ நிறைய ஏற்றி வேறு ஒரு இடத்துக்கு மூன்று பேர்மாற்றுகிறார்கள். பேரறிவாளன், பாக்கியநாதன், ஹரிபாபு ஆகிய மூவரும் இணைந்து இதைச் செய்து முடிக்கிறார்கள். ஒரு டெம்போ நிறைய ஏற்றப்பட்ட ஆவணங்களில் மின்னணு தொடர்பான ஒரு பிளாக் புக் இருந்தது. மனித வெடிகுண்டு தயாரிப்புக்கான செயல் முறைகள் இதில் இருப்பதாக அரசு தரப்பு கூறிய குற்றச்சாட்டை எந்த தடயவியல் சோதனைக் கும் உட்படுத்தாமலே நீதிபதி ஏற்றுக் கொள்கிறார். பேரறிவாளன் பெற்ற கல்வியோடு இணைத்து, குற்றவாளி என்ற முடிவுக்கு நீதிமன்றம் வந்துவிடுகிறது. இது சட்ட வரம்புக்குட்பட்ட நீதி தானா ?

10. ஆக, மனித வெடிகுண்டு தயாரிப்புக்கு பேரறி வாளன் உடந்தை என்று உச்சநீதிமன்றம் தீர்ப்பளித்து விட்டது. ஆனால், இவ்வழக்கின் முதன்மையான புலனாய்வு அதிகாரியாக செயல்பட்ட இரகோத்தமன், ஒரு உண்மையைக் கூறினார். அதிகாரி இரகோத்தமன், 'ஜூனியர் விகடன்' ஏட்டுக்கு (31.7.2005) அளித்த பேட்டி இது:

*"கேள்வி : ராஜீவ் கொலை வழக்கில் கண்டுபிடிக்க முடியாத விஷயம் ஏதாவது உண்டா?*

*பதில்: ஒரே ஒரு விஷயம் இருக்கிறது. தணு தனது இடுப்பில் கட்டியிருந்த வெடிகுண்டு 'பெல்ட்'டைச் செய்து கொடுத்த நபர் யார்.... என்கிற விஷயம் தான்!"*

வெடிகுண்டை வடிவமைத்தது யார் என்பதே தெரியவில்லை; என்கிறது புலனாய்வுத் துறை. ஆனால் அதற்கு பேட்டரி வாங்கிக் கொடுத்ததாக பேரறிவாளன் தூக்கில் நிறுத்தப்பட்டு விட்டார்.

இறுதியாக பேரறிவாளன் என்ற இளமையை சிறைக் கொட்டடிக்குள் இழந்துவரும் அந்த இளைஞர் விடுக்கும் முறையீடு இதுதான்:

1. வழக்கு தடா சட்டப்படி நடந்தது.

2. சாதாரண சட்டங்கள் வழங்கிய அனைத்து உரிமைகளும் பறிக்கப்பட்டன.

3. இறுதியில் இந்த வழக்குக்கு 'தடா' பொருந்தாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

4. அதன் பின்னரும் தடா வாக்குமூலம் எனும் காவல்துறை அதிகாரி பதிவு செய்த ஆவணத்தின் அடிப்படையிலேயே தண்டனை.

இவற்றுக்கெல்லாம் மேலாக 'தடா' எனும் கொடூரச் சட்டத்தால் நீதிமன்ற முறையீட்டு வாய்ப்பு ஒன்று பறிக்கப் பட்டது. மேலும், ஒரு சட்ட வாய்ப்பு எனக்குக் கிட்டிருக்கு மானால்,நான் விடுதலை பெற்றிருப்பேன். இந்நிலையில் அந்த முறையீட்டை உங்கள் முன் நான் வைக்கிறேன். நல்லதொரு தீர்ப்பு நல்குங்கள்.

குற்றமற்ற மனிதனைத் தூக்கிலிடும் கொடுமையி லிருந்து தடுத்தாட்கொள்ள முன் வாருங்கள்.

இதுவே 19 ஆண்டுகளாக வாழ்க்கையின் வசந்தத்தைத் தொலைத்து - புலனாய்வுத் துறை, ஊடகங்களின் பொய்யுரைகளால் உயிர்ப் போராட்டம் நடத்தும் ஒரு இளைஞரின் முறையீடு. தமிழினத்தின் முன் இந்த முறையீட்டை முன் வைக்கிறோம்.

*நூல் வெளியீடு:* திருவள்ளுவர் பெரியார் மானுட ஒன்றியம், 11, கே.கே. தங்கவேல் தெரு, பெரியார் நகர், சோலையார்பேட்டை - 635 851. பேசி : 04179-241503. பக். 156. விலை : ரூ.60.

PURATCHI PERIYAR MUZHAKKAM TAMIL WEEKLY REG.NO.TN/CCN/488/09-11 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/09-11
REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/7776

# மேட்டூரில் கழக உடற்பயிற்சிக் கூடம்



25.09.2010 சனிக்கிழமை அன்று மாலை 6 மணிக்கு, மேட்டூர் ஆர்.எஸ். படிப்பகம் அருகில், தோழர்கள் புதிதாக கட்டியுள்ள பெரியார் உடற்பயிற்சி கூடம், திறப்பு விழாவும், அக்.2 திருச்சியில் நடைபெறும் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு சேலம் மாவட்ட அமைப்பாளர் கி.முல்லைவேந்தன் தலைமை தாங்கினார். கழகத் தலவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர்கள் விடுதலை இராசேந்திரன், கோவை இராமகிருட்டிணன், மேட்டூர் ஜஸ்டின் ராஜ் ஆகியோர் உரையாற்றினர். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவின், இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இரா. இராசா நன்றி கூறினார். மாவட்ட செயலாளர் அ. சக்திவேல் தலைமையில், ஆர்.எஸ். பகுதி தோழர்கள் நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தனர்.

### பல்லடம்

20.09.2010 திங்கள் அன்று மாலை 6 மணிக்கு பல்லடம் கே.என்.புரம், இலட்சுமி ஆலை அருகில், தந்தை பெரியார் பிறந்த நாள் விழா மற்றும் சாதி தீண்டாமை ஒழிப்புப் போராட்ட விளக்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. முதலில் சமர்பா குமரனின் பாடல்களும், சிற்பி இராசனின் மந்திரமா, தந்திரமா ? நிகழ்ச்சியும் நடைபெற்றது. பல்லடம் ஒன்றிய அமைப்பாளர் விசையன் தலைமையில் நடைபெற்ற இப்பொதுக் கூட்டத்தில், திருப்பூர் மாவட்ட தலைவர் துரைசாமி, கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச்செயலாளர் கோவை இராம கிருட்டிணன், ஆதித் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பழ. நீலவேந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றினர். கழகத் தலைவர், பொதுச் செயலாளர் முன்னிலையில் பல புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். இப்பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட பெயர் பலகையை கோவை இராமகிருட்டிணன் திறந்த வைத்தார். கழகத் தலைவர் கொடியேற்றி வைத்தார்.

### அரியலூர்

12.9.2010 அன்று மாலை 5 மணிக்கு அரியலூர், வட்டாட்சியர் அலுவலகம் அருகில் தந்தை பெரியாரின் 132 ஆம் ஆண்டு பிறந்த நாள் விழா தெருமுனை கூட்டம் நடைபெற்றது. சைக்கிள் ரிக்ஷாவை மேடையாக பயன்படுத்தி எளிமையாக ஏற்பாடு செய்யப்பட்டது. இக்கூட்டத்தில் பெரம்பலூர் துரை. தாமோதரன், 'மந்திரமா தந்திரமா ?' நிகழ்ச்சி நடடத்தினார். தொடர்ந்து அரியலூர் மாவட்ட தலைவர் சா. பகுத்தறிவாளன், கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஆகியோர் உரையாற்றினர். தோழர் சேவியர் நன்றி கூறினார்.

**செய்தி: கோகுலகண்ணன்**

## சிங்கள விளையாட்டு வீரர்களுக்கு எதிர்ப்பு

சேலம் மாவட்ட செஸ் விளையாட்டு சங்கம் மற்றும் சென்னை ஜூனியஸ் சங்கம் இணைந்து செஸ் விளையாட்டு போட்டிகளை சேலத்தில் நடத்தினர். போட்டிகளின் நிறைவு நாளான 14.10.2010 வியாழக்கிழமை சிங்கள விளையாட்டு வீரர்க சிலர்சேலம் வந்திருக்கும் செய்தி கிடைத்தவுடன், மாலை 5 மணிக்கு விளையாட்டுப் போட்டி நடைபெற்ற மண்டபத்தின் எதிரே, சிங்களவர்களை வெளியேற்றக் கோரி ஆர்ப்பாட்டம் செய்த சுமார் 25 தோழர்கள் கைது செய்யப்பட்டு, இரவு 8.30 மணிக்கு விடுதலை செய்யப்பட்டனர். கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் சேலம் டேவிட், கோகுலகண்ணன், நங்கவள்ளி கிருஷ்ணன், இளம்பிள்ளை சின்ராசு, சந்திரசேகர், தமிழ் தேச பொதுவுடமை கட்சி தமிழ்ச்செல்வன், பிந்துசாரன், த.ஒ.வி.இ. இளமாறன், காமராசு மற்றும் சட்டக் கல்லூரி மாணவர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழ் நாடு மாணவர் கழகம்

தமிழ்நாடு மாணவர் கழகம் அமைப்புப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன. மாணவர் கழக அமைப்புதொடர்பாக தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: ந. பன்னீர் செல்வம்; பேசி: 98944 53095 / 98774 04315 / 96003 25418 / 97897 95883

### திரையன் – தீங்குழலி சாதி மறுப்பு மணவிழா

17.10.2010 அன்று சென்னை புறநகர் சோழிங்கநல்லூரில் கழகத் தோழர் திரையன் - தீங்குழலி ஆகியோர் சாதி மறுப்பு மணவிழா, கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் நடைபெற்றது. முன்னதாக தேனிசை செல்லப்பா இசை நிகழ்ச்சி நடந்தது. தமிழ் முழக்கம் சாகுல் அமீது, அன்பு தனசேகர், மாலை முரசு செய்தியாளர் ம.சே. இராசதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். மணமக்கள் சார்பாக கழக ஏட்டுக்கு ரூ.1000 நன்கொடை வழங்கப்பட்டது. நன்றி. (ஆர்)

### ரூ.1000 நன்கொடை

தோழர் மாறன் (எ) த.சி. செங்குட்டுவன் - கோ. செயந்தி ஆகியோரது வாழ்க்கை இணை ஏற்பு விழா 10.10.2010 ஞாயிறு காலை 10 மணியளவில், கும்பகோணம் அருகே உள்ள அணைக்கரை பழனி ஆண்டவர் திருமண மண்டபத்தில், பழ. நெடுமாறன் தலைமையில் நடைபெற்றது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, புதுக்கோட்டை பாவாணன், தமிழ் தேச பொதுவுடமைக் கட்சி பெ. மணியரசன், தமிழர் தேசிய விடுதலை இயக்கம் தியாகு, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம் நிலவன், வழக்கறிஞர் ப.பா. மோகன் உட்பட பலர் வாழ்த்துரை வழங்கினர். மணவிழா நிகழ்வாக சில சிற்றிதழ்களுக்கு நன்கொடை வழங்கப் பட்டது. 'புரட்சிப் பெரியார் முழக்கம்' வளர்ச்சிக்காக மணமக்கள் சார்பாக ரூ.1000 வழங்கப் பட்டது.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்தை முற்றுகையிட்டு முழக்கங்கள் எழுப்பினர்.

வெளியில் கட்டப்பட்டிருந்த வாழை மரம், தோரணங்களை அகற்றினர். தங்களுக்கு தகவல் ஏதும் கிடைக்காத காரணத்தால், வழக்கம் போல் பூசை போடுவதாகவும், இனி தவிர்த்து விடுவதாகவும் ஆய்வாளர் கூறினார். தோழர்கள் ஊர்வலமாகச் சென்று, காவல் நிலையத்தை முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் செய்த காட்சியை, சன்தொலைக்காட்சி, மக்கள் தொலைக்காட்சி, ராஜ் டி.வி. ஆகியவை ஒளிபரப்பின.

"சாலைகளில் பூசணிக்காயை உடைக்க வேண்டாம் அதனால் விபத்துகள் நேரிடுகின்றன என்று காவல்துறை எச்சரிக்கை செய்கிறது. ஆனால், காவல்துறையினரே காவல்நிலைய வாயிலில் பூசணிக்காயை உடைக்கிறார்கள். மதச் சார்பற்ற நாட்டில், ஒரு குறிப்பிட்ட மதத்தின் நிறுவனங்களாக, காவல் நிலையமும், அரசு அலுவலகமும் செயல் படுவதும், அரசு ஆணைகளை மீறுவதும் அனுமதிக்க முடியாது. இந்த ஆண்டு, இந்த கண்காணிப்பு நடவடிக்கைகளை தொடங்கியிருக்கிறோம். எதிர்வரும் ஆண்டுகளில் இது தொடர்ந்தால், பெரியார் திராவிடர் கழகம் நேரடியாக போராடும்" என்று மாவட்ட செயலாளர் உமாபதி அளித்த பேட்டியை ஊடகங்கள் ஒளிபரப்பின.

## அகதிகளுக்கு உதவியதாக லோகு. அய்யப்பன் கைது

ஈழத் தமிழ் அகதிகள் அஸ்திரேலியா செல்ல முயற்சித்தாகவும், அதற்கு உதவி செய்ததாகவும் கூறி புதுவை கழக மாநிலத் தலைவலர் லோகு அய்யப்பன், வீரபட்டினம் தி.மு.க. கவுன்சிலர் சக்திவேல், கண்ணன், ஜீவா ஆகிய நான்கு பேரை 8.10.2010 அன்று காவல்துறை கைது செய்து, புதுவை காலபட்டு மத்திய சிறையில் அடைத் துள்ளது.

11.10.2010 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி புதுவை மாநில துணைத் தலைவா வீராசாமி, மாநில செயலாளர் விஜயசங்கர், அமைப்பாளர் தந்தை பிரியன், பொருளாளர் வீர மோகன், பொள்ளாச்சி பிரகாசு, கவுன்சிலரின் சகோதரர் தினகரன் ஆகியோர் தோழர்களை சிறையில் சந்தித்தனர்.

சிறையில் இருக்கும் தோழர்களை சந்தித்துவிட்டு வந்த பின்னர் பத்திரிகை யாளர்களிடம் கழகத் தலைவர் தெரி வித்ததாவது:

ஈழத்தமிழர்களின் நல்வாழ்விற்காக தொடர்ந்து போராடி வருகின்ற இன வுணர்வுள்ள தோழர்கள், தங்கள் மீது பதியப்பட்டுள்ள வழக்கைப் பற்றி கவலைப் படாமல், மனிதநேய உதவிகளை செய்த தற்காக தண்டனை கிடைத்தாலும் கூட அவர்கள் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்ள தயாராக இருக்கிறார்கள்.

அதே நேரத்தில் மனிதநேயப் பணிகளை அவமதித்து களங்கப்படுத்தும் செய்திகளை வெளியிடாமல் இருக்குமாறு செய்தியாளர்களை கேட்டுக் கொண்டார்.

ஈழத் தமிழர்கள் தங்கள் நாட்டின் உரிமைகளை இழந்து, உயிர் இழக்கும் சூழலுக்கு அஞ்சி அங்கிருந்து பதற்றத் தோடு ஓடி வருகிறார்கள்.

அந்நாட்டு கடவுட் சீட்டு இல்லாமல் இந்தியாவிலும் கடவுட் சீட்டு கிடைக்காத நிலையில் தங்களுக்கு பாதுகாப்பான இடமாகக் கருதி செல்ல விரும்புகிற நாடுகளுக்கு அவர்களின் சொந்த செலவில் செல்ல அரசே முன் வந்து அனுப்பினால் இத்தகைய வழக்குகள் கூட தேவையில்லாமல் இருக்க லாம். மேலும் மற்ற நாட்டு அகதிகள்போல ஈழத் தமிழ் அகதிகளும் கவுரவத்தோடும் கண்ணியத் தோடும் நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.


**ரிவோல்ட் பக்கங்களிலிருந்து**
**கட்டுரைத் தொடர்**
**அடுத்த இதழில்**

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
**ஆண்டுக்கட்டணம் ரூ.150/-**
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
**தொடர்புக்கு புதிய எண்:**
✆ 99416 13535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 21st October 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.




# புரட்சிப் பெரியார் முழக்கம்

பெரியார் திராவிடர் கழக வார ஏடு

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | periyardk.org | திருவள்ளுவர் ஆண்டு 2041 | அக்டோபர் 28, 2010 | புரட்சி 9 | முழக்கம் 42 | விலை: ரூ.2.50


## காவல்துறையில் மதப் பிளவுகள்?

*காவல் நிலையங்கள் இந்து மத பூஜை மடங்களாக மாறிவிடக் கூடாது. அது மதச்சார் பின்மையைக் குலைத்துவிடும் என்று பெரியார் திராவிடர் கழகம் சுட்டிக் காட்டியது. அரசு ஆணைகள் மத பூஜைகளை அரசு அலுவலகங்கள் காவல் நிலையங்களில் தடை செய்தாலும், அதையும் மீறி 'ஆயுத பூசை'கள் நடக்கின்றன. இதன் காரணமாக காவல்துறை மதரீதியாக பிளவுபடும் ஆபத்துகள் தோன்றியுள்ளன.*

*'தினமலர்' (அக்.20) நாளேட்டில் 'டீ கடை பெஞ்ச்' பகுதியில் வெளிவந்துள்ள செய்தி இது:*

*"போலீஸ் துறையில் வேலை பார்க்கிற கிறிஸ்தவர்களை ஒன்று சேர்க்கும் வகையில் ஒரு அமைப்பு உருவாகி இருக்குங்க."*

*"காவலர்கள் பரிசுத்த சேனை ஜெபகுழுன்னு இதுக்கு பேர் வெச்சிருக்காங்க... ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும், தனியார் பள்ளிக் கூடத்தில் இந்த அமைப்பின் கூட்டத்தில், மதுரையில் வேலை பார்க்கும் கிறிஸ்தவ மதத்தைச் சார்ந்த போலீசார் கலந்துக்கிறாங்க... கூட்டு ஜெபம் ஆலோசனைன்னு நடத்திட்டு கலைஞ்சிடறாங்க...."*

*– என்கிறது, 'தினமலர்' செய்தி. அடுத்து முஸ்லீம் அதிகாரிகள். தனியாக அமைப்பு தொடங்கினால் வியப்பில்லை. காவல் நிலையங்களில் இந்து மத சடங்குகளை நுழைத்தால், அதன் எதிர்வினைகள் இப்படித்தானே போய் முடியும்? மத–சாதி அடிப் படையில் காவல்துறை பிளவுபட்டால், என்ன வாகும் என்பதை, ஆட்சியாளர்கள் சிந்திக்காமல், எது வேண்டுமானாலும் நடக்கட்டும் என்று வேடிக்கை பார்க்கலாமா?*

## போர்க் குற்றவாளி

*டெல்லி காமன்வெல்த் போட்டிகளின் நிறைவு விழாவின்போது, ராஜபக்சேவின் அருகில் இங்கிலாந்து அரசு குடும்பத்தினர் அமர்ந்து இருந்தனர். 'போர்க் குற்றவாளியான ராஜ பக்சேவுடன், இங்கிலாந்து அரச குடும்பத்தினர் எப்படி அமரலாம்?' என இங்கிலாந்து நாடாளு மன்றத்தில் இப்போது அமளி துமளி. "மனித உரிமை மீறல் குற்றச்சாட்டின் கீழ் விசாரிக்கப்பட்டு வரும் ஒரு குற்றவாளியுடன் எப்படி ராஜ குடும்பத்தினர் அமரலாம்?' என விளக்க அறிக்கை கேட்டு இருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சோப்பி மக்ளஸ். நீங்களாவது நல்லா நாக்கைப் புடுங்கிக்கிற மாதிரி கேளுங்க!*

**நன்றி: 'ஆனந்த விகடன்' அக். 27**

## கழகத் தோழர் கேசவன் கைது

*சென்னை பேசின் பிரிட்ஜ் காவல் நிலையத்தில் அரசு ஆணைக்கு எதிராக ஆயுத பூசை நடத்தியதை எதிர்த்து, கழகத் தோழர்கள் ஆர்ப்பாட்டம் நடத்திய செய்தி கடந்த இதழில் வெளிவந்துள்ளது. அதற்குப் பிறகு, கடந்த அக்டோபர் 19 ஆம் தேதி மாலை 6 மணி யளவில் வடசென்னை மாவட்டக் கழகத் தலைவர் கேசவன், தனது வணிக நிறுவனத்தில் இருக்கும் போது, காவல்துறையினர், பலவந்தமாக கைது செய்து, போலீஸ் ஜீப்பில் ஏற்றி, சென்னை உயர்நீதிமன்ற வளாக காவல் நிலையத்தில் இருந்த துணை ஆணையரிடம் கொண்டு போய் நிறுத்தி, அங்கிருந்து புளியந்தோப்பு காவல்நிலையம் கொண்டு போய் அனுமதி இன்றி ஆர்ப்பாட்டம் நடத்தியதாக வழக்குப் பதிவு செய்து கைது செய்தனர். சேதி அறிந்த ஏராளமான தோழர்கள் திரண்டு காவல்நிலையம் சென்றனர். உடனே ஏராளமான ரிசர்வ் போலீசார் குவிக்கப்பட்டனர்.*

*பலத்த பாதுகாப்புகளோடு சைதை நீதிமன்றம் கொண்டு சென்று, 'ரிமாண்ட்' செய்து புழல் சிறை யில் அடைத்தனர். கழக வழக்கறிஞர் குமார தேவன் தாக்கல் செய்த பிணை மனுவின் கீழ் 22 ஆம் தேதி கேசவன் விடுதலை செய்யப்பட்டார். கைதைக் கண்டித்து சென்னை முழுதும் கழக சார்பில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.*

# 'ஆரூர்சோழனின்' பிரம்மதேயம்



திராவிடம் - அரசியலில் ஆரியத்தோடு சமரசமாகி வருகிறது. திராவிட அரசியல் - ஆரிய அரசியலுக்கு அடிபணிந்து கிடப்பது எல்லோருக்குமே தெரியும். இப்போது கலை - பண்பாட்டுத் துறைகளிலும், திராவிடர் அடையாளத்தை ஆரியத்தோடு சமரசம் செய்யத் தொடங்கிவிட்டார்கள். 'திராவிடன்' என்பது ஆரிய எதிர்ப்பு உணர்ச்சிச் சொல் என்றார் பெரியார். 'ஆரிய மாயை' எனும் ஆய்வு நூலில் அண்ணாவும் அதையே வழி மொழிந்தார். ஆனால், பெரியார் - அண்ணாவின் அடையாளம் அரசியலில் தன்னிடம் மட்டுமே இருக்கிறது என்று மார்தட்டும் கலைஞர் கருணாநிதியின் நிலை என்ன ?

ஜெயலலிதா தன்னை பச்சைப் பார்ப்பனராகவே அடையாளம் காட்டிக் கொள்கிறவர். 'இந்து'த்துவா, கொள்கையில் ஊறிப் போய் நிற்பவர். அதில் எந்தக் கருத்து மாறுபாடுகளுக்கும் கிஞ்சித்தும் இடம் கிடையாது. அவரது ஆட்சிக் காலத்தில் பார்ப்பனியத்தின் பரப்புரையாளரான நாட்டியக் கலைஞர் பத்மா சுப்ரமணியத்துக்கு அரசுக்கு சொந்தமான 5 ஏக்கர் நிலத்தை முதல்வராக இருந்த ஜெயலலிதா வழங்கினார். எதற்காக ?

'பரதமுனி நாட்டியாலயம்' என்ற நிறுவனத்தை பத்மா சுப்பிரமணியம் தொடங்கி, நாட்டியப் பயிற்சி மற்றும் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக ! 'பரதம்' என்ற நாட்டியக் கலை உருவானது காஷ்மீரத்தில் ! 'பரதர்' என்ற பார்ப்பன முனிவரே அந்தக் கலையை உருவாக்கியவர் என்பதே பத்மா சுப்பிரமணியத்தின் கருத்து. இதை வலியுறுத்தியே அவர் ஆய்வு நடத்தி, முனைவர் பட்டத்தையும் பெற்றுள்ளார். ஆனால், பரதநாட்டியக் கலை, தமிழர்களுக்கு சொந்த மானது. நாட்டியக் கலைகளின் நுட்பங்களையும், நாட்டியக் கலை அரங்கேற்ற முறைகளையும் துல்லியமாக விளக்கிடும் நூல் சிலப்பதிகாரம். எனவே, தமிழரின் கலைக்கு ஆரிய முலாம் பூசக் கூடாது என்ற வாதங்கள் தமிழர் தரப்பில் முன் வைக்கப்பட்டன.

கலைஞர் கருணாநிதி சிலப்பதிகாரத்தில் ஆழ்ந்து திளைத்தவர். 'பூம்புகார்' திரைப்படத்தை உருவாக்கியவர். எனவே பத்மா சுப்ரமணியத்தின் பரத மாமுனி நாட்டிய ஆராய்ச்சிக்கு அரசு நிலம் வழங்கிய பார்ப்பன ஜெயலலிதா வின் உத்தரவை, கலைஞர் கருணாநிதி, பதவிக்கு வந்ததும் ரத்து செய்தார். தமிழின உணர்வாளர்கள் வரவேற்றனர். உடனே, பத்மா சுப்ரமணியம், அரசின் நடவடிக்கையை எதிர்த்து உயர்நீதி மன்றம் போனார். நீதிமன்றத்தில் வழக்கு இருக்கிறது.

அண்மையில் தஞ்சை பெரிய கோயிலின் ஆயிரம் ஆண்டு விழாவை கலைஞர் கருணாநிதி அரசு சார்பில் நடத்தினார். அங்கே பத்மா சுப்ரமணியம், ஆயிரம் பெண்களை இணைத்து, கோயிலுக்குள் நாட்டிய நிகழ்ச்சி ஒன்றை நடத்தினார். அதிலும், ஆதி சங்கரர் புகழ் பரப்பும் பாடல்களும் இடம் பெற்றன. முதலமைச்சர், சோழ மன்னர் என்ற உணர்வோடு பட்டாடைத் தரித்து, விழாவிலே பங்கேற்று நாட்டியத்தைக் கண்டு மகிழ்ந்தார். இந்த 'ஆரூர் சோழர்' பத்மா சுப்ரமணியத்தின் நாட்டியத் திறமையைப் புகழ்ந்தார். அடுத்த இரண்டு வாரங்களிலேயே திராவிடமும், ஆரியமும் சமரசத்துக்கு வந்துவிட்டது.

எந்தக் கலைஞர் கருணாநிதி, ஜெயலலிதா நிலம் ஒதுக்கித் தந்த ஆணையை ரத்து செய்தாரோ, அதே கலைஞர் கருணாநிதி, 'ஜெயலலிதாவின்' முடிவை நியாயப்படுத்தி விட்டார். மீண்டும் பத்மாசுப்ரமணியத்திடம் நிலத்தை வழங்க முன்வந்து, அதற்கான விழாவும் மாமல்லபுரம் அருகே உள்ள பட்டிபுலம் எனும் ஊரில் கடந்த அக்.17 ஆம் தேதி நடந்து முடிந்துவிட்டது. 'பரதமாமுனிவர் நாட்டியாலயம்' என்ற பெயரோடு சிலப்பதிகாரத்தை எழுதிய இளங்கோவின் பெயரையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்பதே பத்மா சுப்ரமணியத்துக்கு முதல்வர் கலைஞர் கருணாநிதி விதித்த ஒரே நிபந்தனை. பெயரில் என்ன இருக்கிறது என்ற அளவில் பத்மா சுப்ரமணியமும் ஒப்புக் கொள்ள, 5 ஏக்கர் நிலம் மீண்டும் பதமாசுப்ரமணியத்திடம் பத்திரமாக வந்து சேர்ந்து விட்டது.

விழாவிலே பேசிய முதல்வர் கலைஞர் கருணாநிதி, நடனக் கலை மொழிகளுக்கு எல்லாம் அப்பாற்பட்டது என்றும், யார் யாருக்கு அபிநயங்கள் அழகாகப் பிடிக்கத் தெரிகிறதோ, அதுதான் மொழி என்றும் கூறிவிட்டார். நடனத்தில் ஆரியம், திராவிடம் என்றெல்லாம் ஏதுமில்லை என்பதே கலைஞர் கருணாநிதி உரையின் மய்யக் கருத்து. இப்படி, பண்பாட்டில் ஆரியமும் திராவிடமும் ஒன்று தான் என்ற முடிவுக்கு வந்து விட்டவர், அரசியலில் மட்டும் ஜெயலலிதா எதிர்ப்புக்காக 'திராவிடர் - ஆரியர்' என்ற துருப்புச் சீட்டைப் பயன்படுத்தி வருகிறார்.

அக்டோர் 17 ஆம் தேதி மாமல்லபுரத்தில் பத்மா சுப்ரமணியத்தோடு சமரசம் பேசியவர் 22 ஆம் தேதி அறிவாலயத்தில் நடந்த கோவை மாவட்ட தி.மு.கழக நிர்வாகிகள் கூட்டத்தில் இவ்வாறு பேசியிருக்கிறார்:

"ஆண்டாண்டுதோறும் விஜயதசமி கொண்டாடுகிற அம்மையாருடைய ஆட்சியிலேயே அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்று பெயர் வைத்துக் கொள்ள என்ன அருகதை இருக்கிறது ? .... ஒரு ஆரிய அம்மையார் ஆட்சியில் அண்ணாவுக்கு என்ன வேலை இருக்கிறது ?" ('முரசொலி' அக்.23) என்று கேட்கிறார்.

ஆக, கலைஞர் கருணாநிதி பேசும் - திராவிடமும் ஆரிய எதிர்ப்பும் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு துருப்புச் சீட்டு என்பதைத் தவிர வேறு கொள்கைப் பார்வை ஏதும் அதில் இருப்பதாகத் தெரியவில்லை. இருந்திருந்தால், பரதக்கலை தமிழருக்கு மட்டுமே உரியது அல்ல; பரதர் முனிவர் உருவாக்கினார் என்பதை தாம் மறுக்கவில்லை என்றெல்லாம் பேசியிருக்க மாட்டார்.

பார்ப்பன ஜெயலலிதா ஆயுத பூசைக்கு வாழ்த்துச் சொல்கிறார் என்றால், 'திராவிடர்' கலைஞர் ஆட்சியில் காவல் நிலையங்களில் அரசு ஆணைகளுக்கு எதிராக 'தடபுடலாக' ஆயுத பூசை நடக்கத் தான் செய்கிறது. சுட்டிக்காட்டிய பெரியார் திராவிடர் கழகத் தோழர்கள் கைது செய்து சிறையில் அடைக்கப்படுகிறார்கள்.

இராஜ இராஜ சோழனுக்கு புகழாரம் சூட்டிய 'ஆரூர் சோழன்', அந்த மாமன்னர் காட்டிய வழியிலேயே செயல்பட விரும்புகிறார் போலும். பார்ப்பனனுக்கு நிலங்களை தானமாக வழங்கி, அதற்கு 'பிரம்மதேயம்' என்று பெயரிட்டான். இராஜ இராஜன் தனிப்பட்ட பார்ப்பனர் களுக்கு நிலம் வழங்கி, அதற்கு 'ஏகபோக பிரமதேயம்' என்று பெயரிட்டான். இவை கல்வெட்டுகள் கூறுகிற சேதி.

தமிழகத்தை ஆளும் 'ஆரூர் சோழனோ' 'ஏகபோக பிரதம தேயங்களை' பார்ப்பன பத்மாசுப்ரமணியங்களுக்கு தானம் செய்து, 'சோழன் ஆட்சிப் பெருமை'யை மீண்டும் நிலைநாட்டியிருக்கிறார். பார்ப்பனருக்கு நிலம் தந்ததை தி.மு.க. ஆட்சி ரத்து செய்தபோது, பாராட்டி புகழாரம் சூட்டிய 'வீரமணிகள்' மீண்டும் 'தானம்' வழங்கப்பட்டபோது வாயை இறுக மூடிக் கொண்டுவிட்டார்கள் - வழக்கம் போலவே ! வெட்கம் ! ●

**தலையங்கம்**

## முடங்கிக் கிடக்கும் தனியார்துறை ஒதுக்கீடு கோரிக்கை

*‘உலக மயமாக்கல்’ என்ற கொள்கை வந்த பிறகு அரசுத் துறைகள் மறைந்து, தனியார்துறை புற்றீசலாக வளர்ந்த நிலையில் தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோருக்கான வேலை வாய்ப்புகள் கடும் நெருக்கடிக்கு உள்ளாகிவிட்டன. இந்த ஆபத்தை உணர்ந்து தனியார் துறையில் இடஒதுக்கீடு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக பெரியார் திராவிடர் கழகம் தொடர்ச்சியான பரப்பரை இயக்கங்களை தமிழகம் முழுதும் நடத்தியது. “சம்பூகன் சமூக நீதிப் பயணம்” என்ற பெயரில் கழகம் நடத்திய அந்த பரப்புரை இயக்கங்கள் மக்களிடையே பெரும் விழிப்புணர்வை உருவாக்கியது.*

*அய்க்கிய முற்போக்குக் கூட்டணி, முதல்முறையாக ஆட்சிக்கு வந்தபோது, தனியார் துறை இடஒதுக்கீடு பற்றிய உறுதியை அதன் குறைந்தபட்ச செயல் திட்டங்களில் ஒன்றாக வழங்கியது. அதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. ஆனால், பார்ப்பன ஆதிக்கத்தில் மூழ்கிக் கிடக்கும் தனியார் நிறுவனங்களோ உறுதியாக மறுத்துவிட்டன. இதற்காக அமைக்கப்பட்ட அமைச்சரவைக் குழுவும் எந்த முனைப்பும் காட்டவில்லை.*

*அயக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி இரண்டாவது முறை பதவிக்கு வந்த பிறகு, தாழ்த்தப்பட்டோருக்கு 5 சதவீத ஒதுக்கீடு வழங்குமாறு தனியார் துறையிடம் வலியுறுத்தப்பட்டது. மீண்டும் தனியார்த் துறை பார்ப்பன – பனியா நிறுவனங்கள் கோரிக் கையை ஏற்க மறுத்து விட்டன. அரசின் பல்வேறு உதவி, சலுகை, மான்யங்களைப் பெற்று செயல்படும் இந்த நிறுவனங்கள், மக்களுக்கு சமூகநீதி வழங்க மறுக்கும் போது, அதைத் துணிவுடன் தட்டிக் கேட்க, ஆட்சி அதிகாரத்தில் இருப்போர் தயாராக இல்லை.*

*ஷெட்யூல்டு மக்களுக்கான தேசிய ஆணையத்தின் தலைவராக பி.ஜே.புனியா என்பவர் இப்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார். பதவிப் பொறுப்பை ஏற்றவுடன், இரண்டு கோரிக்கைகளை அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியிடம் அவர் வலியுறுத்தியுள்ளார். இதில் முதன்மையான கோரிக்கை தனியார் துறைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டை உறுதி செய்ய வேண்டும் என்பதாகும். தனியார் துறையிடம் இதை வலியுறுத்த முடியாது என்ற கருத்தை அவர் மறுத்துள்ளார்.*

*அய்தராபாத்தில் அவர் செய்தியாளர்களிடம் பேசுகையில், “தனியார் துறை அரசையும், அரசு நிதி நிறுவனங்களையும், தேசியமய வங்கிகளையும் சார்ந்து, அவர்கள் உதவிகளோடு தான் செயல்படுகிறது; எனவே ஒடுக்கப்பட்ட பிரிவினரை கை தூக்கி விடும் சமூகக் கடமையும் பொறுப்பும் அவைகளுக்கு உண்டு” என்று சுட்டிக்காட்டியுள்ளார்.*

*அமெரிக்கா மற்றும் அய்ரோப்பிய நாடுகள் பலவற்றிலும், மைனாரிட்டி மக்களுக்கான வேலை வாய்ப்பு சட்டப்படி வழங்கப்படும்போது, இங்கே மட்டும் அதை அமுல்படுத்த மறுப்பதில் என்ன நியாயமிருக்கிறது என்று பெரியார் திராவிடா கழகம் எழுப்பி வரும் கேள்வியை பட்டியல் சாதி பிரிவுக்கான ஆணையத்தின் தலைவரும் கேட்கிறார். சில ஆண்டுகளுக்கு முன்பு இதை ஏற்க மறுத்த தனியார் துறையினர் சர்வதேச பொருளாதார நெருக்கடியை ஒரு காரணமாகக் கூறினர். இப்போது நிலைமை சீராகி, தனியார் நிறுவனங்கள் வளர்ச்சிப் பாதையில் நடைபோடத் தொடங்கியுள்ளன. எனவே, ஆளும் அய்க்கிய முற்போக்குக் கூட்டணி இதில் கவனம் செலுத்த வேண்டும்; தனது கடமையிலிருந்து நழுவி விடக் கூடாது என்று வலியுறுத்துகிறோம்.*

*அத்துடன், மத்திய அமைச்சகத்தின் ஒவ்வொரு துறையிலும், ஷெட்யூல்டு பிரிவு மக்களுக்கான சிறப்புத் திட்டங்களைத் தயாரித்து, அதற்கு, அவர்களின் மக்கள் தொகைக்கு ஏற்ற வீதத்தில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் என்ற கருத்தையும் ஆணையத் தலைவர் பி.ஜே. புனியா வலியுறுத்தியுள்ளார். இவை இரண்டுமே சமூக நீதிக் கோரிக்கைகள் ஆகும்.*

*அதிகாரிகள் மட்டத்தில் இதற்குக் குரல் கொடுத்தாலும், மக்கள் மன்றத்திலிருந்து வலிமையான இயக்கங்கள் நடத்தப்பட வேண்டியது அவசியமாகும். தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் சந்தையைப் பயன்படுத்தி, இலாபம் குவிக்கும் தனியார் நிறுவனங்கள், அந்த மக்களுக்கான உரிமைகளை வழங்க மறுப்பதை ஏற்றுக் கொள்ளவே முடியாது.*

## மறைக்கப்பட்ட சிந்துசமவெளி நாகரிகம்

*திராவிடர்கள் நாகரிகத்துடன் வாழ்ந்த ‘சிந்து சமவெளி’ தடயங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டன. கடவுளே கோபம் கொண்டு அந்தப் பகுதியை அழிதது விட்டதாக புரளிகள் பார்ப்பனர்களால் கிளப்பப்பட்டன. சிந்து சமவெளி அழிக்கப்பட்டது எப்படி?*

“இந்தியாவில் ஒன்றும் இல்லை. இந்தியாவுக்கு என்று பழங்கால சரித்திரமோ, பாரம்பரியமோ வரலாறோ கிடையாது. கி.மு. 1000 இல் ஆரியர்கள் பிரவேசம் செய்த பிறகுதான் இந்தியாவில் நாகரிகம் என்ற ஒன்று மிளிரவே ஆரம்பித்தது. அதன் பின் தான் நகரங்கள் தோன்றின. அப்படி முதலில் தோன்றிய நகரம் அசோகரின் தலைநகரமாக விளங்கிய பாட்னா என்ற பாடலிபுத்திரம்” என்று உலக சரித்திர ஆராய்ச்சியாளர்கள் நம்பிக் கொண்டிருந்தார்கள்.

ஆனால், 1921 இல் ஓர் அதிசயம் நிகழ்ந்தது. இந்திய தொல்லியல் ஆய்வில் பணியாற்றி வந்த தாஸ் பானர்ஜி என்ற அதிகாரி, சிந்து சமவெளியில் கி.பி. 200 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு புத்தமத ஸ்தூபியை ஆராய்ந்து கொண்டிருந்தார். அருகே எதேச்சையாக தோண்டிய போது சில படிக்கட்டுகள் தெரிந்தன. அனுபவம் நிறைந்த பானர்ஜியின் நாடித் துடிப்புகள் அதிகமாயின. மேலும் ஆர்வத்துடன் தோண்டத் தோண்ட அவர் கண் முன்னே அற்புதமான ஒரு நகரம் தோன்றியது. உலகையே ஆச்சரியத்தில் நிமிர்ந்து உட்கார வைத்தது.

பாபிலோனியா, எகிப்துக்கு இணையாக இந்தியாவும் பண்டைய நாகரிகத்தில் கொடி கட்டிப் பறந்த நாடு என்கிற தகவல் பரவிய உடனே, உலகின் பல பகுதிகளிலிருந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் பரபரப்போடு இந்திய வடமேற்கு பகுதிக்கு வந்து குவிந்தார்கள்.

பானர்ஜி வருவதற்கு 100 ஆண்டுகளுக்கு முன்பே சிந்து சமவெளியில் சந்தேகத்தை எழுப்பக்கூடிய சில மேடுகளும், இடிபாடுகளும் இருப்பது பற்றி ஆங்கிலேய தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் குறிப்புகள் எழுதி வைத்தார்கள். 1826 இல் அங்கு வந்த சார்லஜ் மேஸன் என்ற இராணுவ அதிகாரி, ‘இந்தப் பகுதியில் பூமிக்கடியில் கோட்டைகள் இருப்பதாக தெரிகிறது’ என்று குறிப்பு எழுதினார்.

1831 இல் பிரிட்டிஷ் மன்னர் அனுப்பிய ஐந்து குதிரைகளை மகாராஜா ரஞ்சித் சிங்குக்கு பரிசாக கொடுப்பதற்காக அலெக்சாண்டர் பர்ன்ஸ் எனும் தூதர் பஞ்சாப் வந்தார். அப்படியே சிந்து சமவெளிக்கும் சுற்றுப் பயணம் செய்தார். அப்போது அங்கு புதைந்துபோய் இருந்த சுவர்களையும், படிக்கட்டுகளையும் பார்த்து, பர்னஸ் புருவங்களை உயர்த்தினார். பக்கத்து கிராமத்தில் இருந்த மக்களிடம் விசாரித்தார். “இங்கே பெரிய ராஜ்ஜியமே இருந்ததாம். அந்த ராஜா ஏதோ தப்பு பண்ணிட்டாராம். கடவுளுக்கு கோபம் வந்து, அந்த ஊரை அழிச்சிட்டதா எங்க கொள்ளு தாத்தாங்க காலத்தில் இருந்து சொல்வாங்க’ என்று கிராம மக்கள் கூறினார்கள்.

அதன்பின் அந்த இடத்தை அப்படியே விட்டு விட்டனர். கிராம மக்கள் அங்கிருந்த கற்களை எடுத்துக் கொண்டு சென்று வீடுகள் கட்டவும், சுவர்கள் எழுப்பவும் பயன்படுத்தினர். 1856 இல் பிரிட்டிஷ் நிர்வாகமும் அதே தவறை செய்தது. லாகூர் - முல்தான் பகுதிகளை இணைக்க ரெயில் பாதை அமைக்கப்பட்டபோது தண்டவாளத்துக்கு இடையில் போடுவதற்கு கற்கள் தேவைப்பட்டன. உடனே சிந்து சமவெளியில் வெளிப்பட்டிருந்த சுவர்களை உடைத்து கற்களை ரெயில் பாதையில் 100 மைல் தூரத்துக்குப் பயன்படுத்தினார்கள். இன்றைக்கும் கூட லாகூர் - முல்தான் இரயில் பாதைதான் உலகின் மிகப் பழமையான ரெயில் பாதையாகும்.


இப்படியாக தொடக்கக் கால சிந்து சமவெளி அதன் பெருமை உணராமல் சுயநலத்துக்காக பயன்படுத்தப்பட்டது. அதன் பின்னரே அதன் மகத்துவம் தெரிந்தது.

**– நன்றி: ‘இன்று ஒரு தகவல்’, ‘தினத்தந்தி’, அக்.21**

# சென்னையில் சுவரொட்டிகள்







# சைவர்களுக்கு கிடுக்கிப்பிடி

*(1928 ஆம் ஆண்டிலிருந்து 1930 ஆம் ஆண்டு வரை பெரியார் நடத்திய 'ரிவோல்ட்' ஆங்கில வார ஏட்டிலிருந்து சில வரலாற்றுத் தகவல்கள்)*

**1929** ஆம் ஆண்டு மே **26** ஆம் தேதி பட்டுக்கோட்டையில் சைவர்கள் மாநாடு ஒன்று நடந்துள்ளது. இது சுயமரியாதை சைவர்கள் மாநாடு. திருநெல்வேலியில் கூடி சுயமரியாதை இயக்கத்துக்கு எதிராக களமிறங்க திட்டங்களைத் தீட்டிய 'பார்ப்பனிய' சைவர்களுக்கு எதிராக திரண்ட மாநாடு. இந்த மாநாடு பற்றி 'ரிவோல்ட்' **(5.6.1929)** விரிவான செய்திகளைப் பதிவு செய்தது. மாநாட்டின் தலைவர் 'குமரன்' ஆசிரியர் முருகப்பா. மாநாட்டு வரவேற்புக்குழுத் தலைவர் தண்டபாணி பிள்ளை. நகைச்சுவை ததும்பிய அவரது உரையில், சைவத்தின் நோக்கம் வரலாறுகளை எடுத்துக் காட்டியதோடு, மனித நேயத்துக்கு எதிராக, 'புராணீகர்களாக' மாறிப் போய் நிற்கும் சைவர்களை விமர்சித்தார். மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் மிகவும் குறிப்பிடத்தக்கதாகும்.

சாதி, மத அடிப்படையில் பாகுபாடுகளை எதிர்ப்பவர்கள் சுயமரியாதை சைவக் கழகத்தில் உறுப்பினராக வேண்டும். நெல்லை, கடலூர், சைவ மாநாடுகளில் குறுகிய புத்திக் காரர்களால் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள், உண்மையான சைவத்தைக் குறிப்பதல்ல. உண்மையான சைவர்கள் விபூதியையும், உத்திராட்சக் கொட்டையையும் அணிந்து படம் காட்டத் தேவையில்லை. கோயிலில் நுழையும் உரிமை ஒவ்வொருவருக்கும் உண்டு என்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, ஈரோட்டில் அனைத்து சாதி யினருக்கும் கோயிலில் நுழையும் உரிமை உண்டு என முடிவு செய்த ஈரோடு தேவஸ்தானக் குழுவை பாராட்டியது. கோயில் கருவறைக்குள் நுழைந்த "தீண்டப்படாத" சமூகத்தைச் சார்ந்த தோழர்கள் ஈசுவரன், பசுபதி, கருப்பன் ஆகியோர் துணிவையும் பாராட்டி, தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. அடுத்த சுயமரியாதை சைவர்கள் மாநாட்டை திருச்சிராப் பள்ளியில் நடத்தவும் முடிவு செய்யப்பட்டது. அதற்காக சுயமரியாதை கொள்கைகளை ஏற்றுக் கொண்ட சைவர்களின் வரவேற்புக் குழு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டது.

'பி.சி.பி.' எனும் புனைப் பெயரில் (வழக்கறிஞர் பி.சிதம்பரம்பிள்ளை எழுதியதாக இருக்கலாம்) யார் சைவர்கள் ? எது சைவம் ? என்ற தலைப்பில் விரிவான ஆய்வுக் கட்டுரை ஒன்று 'ரிவோல்ட்டில்' பதிவாகியிருக் கிறது. சைவம் என்பதற்கும், சைவர் என்பதற்கும் வரையறை வகுப்பதே சிக்கலாகிவிட்டது. சில நேரங்களில் இது சாதி அல்லது உட்சாதிக் குழுவை சுட்டுவதாக உள்ளது. சில நேரங்களில் மதத்தை சுட்டுவதாக உள்ளது. சில நேரங்களில் தத்துவத்தை சுட்டுவதாக உள்ளது. சில வேளைகளில் மூன்றையுமே குறிப்பதாக உள்ளது. இதுவே ஒருவர் வெள்ளாளரா அல்லது வெள்ளாளர் அல்லாதவரா என்பதை சுட்டவும், சைவ உணவுப் பழக்கம் உள்ளவரா அல்லது அசைவப் பழக்கம் உள்ளவரா என்பதை சுட்டுவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

ஒரு கட்டத்தில் பார்ப்பனரை அடையாளம் காட்டுவதற்கு கூட சைவர் என்ற சொல் பயன்பட்டிருக்கிறது என்ற முன்னுரையுடன் துவங்கும் அந்த ஆய்வுக் கட்டுரை, ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்பு சைவம் தொடங்கிய காலத்தில் அதற்கான தத்துவங்கள் உருவாக்கப்பட வேண்டிய காலச் சூழல் இருந்தது. அப்படி சிந்தித்தவர் களின் எண்ணிக்கை மிகக் குறைவு. சைவம் பெரும் பான்மையினரின் மதமாகும் போது, அவர்களுக்கு தத்து வங்கள் தெரியாது. மற்றவர்கள் எதை செய்கிறார்களோ அதை கண்மூடித்தனமாகப் பின்பற்றத்தான் தெரியும். சுயமரியாதை இயக்கம் தோன்றுவதற்கு முன்பே சைவம், சைவ சித்தாந்தத்திலிருந்து விலகி, கண்மூடித்தனமான சடங்குகளின் மதமாகிவிட்டது. சைவப் பார்ப்பனர்களும் வெள்ளாளர்களும் ஒன்று சேர்ந்து சமணத்தை ஒழிப்பதில் தீவிரம் காட்டினர்.

சமணத்தை ஒழிப்பதற்கு வெள்ளாளர்களுடன் கூட்டுச் சேர்ந்த அதே சைவ பார்ப்பனர்கள், பிறகு, சைவத்தை கைகழுவி விட்டு, சங்கராச்சாரியை நோக்கி ஓடி விட்டார்கள். சங்கராச்சாரி தத்துவம் - பார்ப்பனர்களுக்கு மிகவும் உவப்பாக இருந்தது. புத்தர் கோட்பாடுகளை மூர்க்கமாக ஒழிப்பதுதான், சங்கராச்சாரி தத்துவம். சங்கராச்சாரி பின்னால் போனால் சைவ மதத்தைப்போல் கடுமையான விதிகளைப் பின்பற்றத் தேவை இல்லை. பார்ப்பனர்கள் தங்கள் வாய்ப்பு வசதிக்கேற்ப வாழ்ந்து கொள்ள முடியும். கடுமையாக பின்பற்ற வேண்டிய சைவக் கோட்பாடுகளை வெள்ளாளர்களிடம் விட்டுவிட்டு, வசதியான பொருளியல், அரசியல் வாழ்க்கையை பார்ப்பனர்கள் கைப்பற்றிக் கொண்டார்கள். புத்த, சமண கருத்துக்களைப் பரப்ப, நிறுவனங்கள் அமைக்கப்பட்டதைப் போல், சைவர்களும் சைவ மடங்களை உருவாக்கி, 'ஆதினங்கள்' என்ற சைவச் சாமியார்களை நியமித்தனர்.

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 28.10.2010**

## 'ரிவோல்ட்' பக்கங்களிலிருந்து....[4]

அந்த சைவ மடங்கள் பார்ப்பனர்களுக்கு அடிபணிந்து, அவர்களின் சட்ட சமூகப் பிடிக்குள் சிக்குண்டன. ஆறுமுக நாவலர் போன்ற சைவர்கள் இதன் காரணமாகவே சைவ மடங்களைக் கடுமையாக சாடினார்கள். சைவ சித்தாந்தங்கள் மறைந்து போய், சைவம், பார்ப்பன மடமாகி சீரழிந்து போனது.

சமணத்தையும், புத்தத்தையும் எதிர்க்க பார்ப்பன-வேளாளர் கூட்டணி கை கோர்த்து நின்ற காலத்தில் அந்தக் கூட்டணியால் தமிழ் இலக்கியமும் பாதிப்புக்குள்ளானது. பார்ப்பனர்கள் தமிழைப் பின்னுக்குத் தள்ளி, சமஸ் கிருதத்தை முதன்மைப்படுத்தினார்கள். சமஸ்கிருதத் துக்கு தமிழை அடிமைப்படுத்த முயன்றார்கள். கால்டுவெல் என்ற பிரிட்டிஷ் மொழி ஆய்வாளர் திராவிட மொழி குடும்பத்தை ஆராய்ந்து, தமிழை சமஸ்கிருதத்திலிருந்து பிரித்து, தமிழின் சிறப்பை நிறுவிய காலம் வரை தமிழை பார்ப்பனர்கள் சமஸ்கிருத்தின் அடிமையாகவே மாற்றி இருந்தார்கள். பார்ப்பனியத்துக்கு அடிமைப்பட்டு பார்ப்பனியப் பெருமை பேசி வந்தது சைவம். திராவிடப் பண்பாட்டை இழிவுபடுத்தியது. பார்ப்பன வெள்ளாள கூட்டணி, சமண - புத்தத்தை அழித்த கொடுமைகளை தமிழ் புராணக் கதைகளாக்கினர். அந்தப் புராணங்களில் கற்பனைகளும் நம்ப முடியாத புனைவுகளும் அடங்கி யிருந்தன என்பது உண்மை தான். புராணங்கள் வரலாறுகள் அல்ல என்பதும் உண்மைதான். ஆனால், சைவ பார்ப்பன ரத்தவெறியின் சுவடுகளை அதில் பார்க்க முடியும். அதன் காரணமாகவே இந்தக் கேவலமான புராணக் கதைகளைப் புனிதமாகப் பரப்பினார்கள். சமஸ்கிருதத்திலிருந்து தோன்றியதே தமிழ் என்றார்கள். சமஸ்கிருதத்தில்தான் தமிழ் சைவத்தின் கோட்பாடுகள் அடங்கியுள்ளது என்றும் பரப்புரை செய்தார்கள். சைவ சித்தாந்தத்தை பார்ப்பனியம் விழுங்கி செரிமானம் செய்தது. சைவக் கோயில்கள் ஸ்மார்த்தப் பார்ப்பனர்கள் கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

ஸ்மார்த்த பார்ப்பனர்களின் குருவான சங்கராச்சாரி, நாடு முழுதும் சுற்றி ஸ்மார்த்தப் பார்ப்பனியத்தை அப்பாவி மக்களிடம் பரப்பினார். பார்ப்பனர்கள், நீதிபதிகளாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களாகவும் இருந்து கொண்டு சங்கராச்சாரிக்கு துணையாக நின்றார்கள். அடை யாளத்தை இழந்த வெள்ளாளர்கள் ஸ்மார்த்த பார்ப்பனர் கள் பக்கம் முழுமையாக சாய்ந்து விட்டார்கள். வசதி படைத்த சைவ பார்ப்பனர்கள் பார்ப்பனர்களுக்கு "பிராமண போஜனம்" (சாப்பாடு போடுவது) நடத்தி னார்கள்.

திருவாங்கூர் சமஸ்தானத்தில் தேர்த் திருவிழாவின் போது வெளியே தேர்வடம் பிடிக்க ஒரு கூட்டம் நிற்கும். அதே நேரத்தில் கோயிலுக்குள்ளே 'தடபுடலாக' பார்ப்பானுக்கு மட்டும் விருந்துகள் நடக்கும். தேர்வடம் பிடிக்க வராத 'சூத்திரர்'களுக்கு அரசு அபராதம் போடும். "கோயிலுக்கு உள்ளே 'பிராமணர்கள்' எவராவது சாப்பிட மறுத்தால், அதற்கு கோயில் அதிகாரிகள் குற்றவாளியாக்கப்பட்டு விசாரிக்கப்படுவார்கள்" இப்படி சைவத்தை பார்ப்பனியம் விழுங்கிய வரலாற்றை விவரிக்கிறது, இந்த ஆய்வுக் கட்டுரை.

வடநாட்டில் பார்ப்பனியம் வன்முறையைக் கையில் எடுத்ததன் தொடர் நிகழ்வாகவே தென்னகத்திலும் பார்ப்பனியம் மத மோதல்களை உருவாக்கியது. அதற்கு முன்பு தென்னத்தில் பல்வேறு மதச் சிந்தனைகளைப் போற்றி, அவரவர் கருத்துகளைப் பரப்பவும், ஒரே இடத்தில் கூடி விவாதிக்கவும் கூடிய சுமூகமான சமூகச் சூழலே நிலவியது. பல்வேறு மதச் சிந்தனையாளர்கள் ஒரே அரங்கில் கூடி விவாதித்ததை, அய்ம்பெரும் காப்பியங் களில் ஒன்றான மணிமேகலை கூறுகிறது. திருநாவுக்கரசர் சமண மதத்தைத் தழுவிய காலத்தில், அவரது சகோதரியே சைவ மதத்தைத் தழுவி இருந்தார். வடநாட்டில் பார்ப்பனர்கள் வன்றை அழித்தொழிப்பு வழியாக தங்களை மீட்ருருவாக்கம் செய்த காலத்தில்தான் தென்னகத்தின் சுமூகமான நிலை சீர்குலையத் தொடங்கியது.

வடநாட்டிலிருந்துதான் தென்னகத்துக்கு சாதியமைப்பு இறக்குமதியானது. வடநாட்டு பார்ப்பனர்கள் சமூகத்தில், சடங்குகளைப் புகுத்தி, அதை வாழ்க்கை முறையாக்கினர். வடநாட்டில் பின்பற்றிய வன்முறைகள் அப்படியே தென்னகத்துக்கும் பரவத் தொடங்கின. தென்னாட்டு சைவம் வடநாட்டு பார்ப்பன வன்முறைகளைக் கையில் எடுத்தது. அதற்காக சமஸ்கிருதமும் தமிழும் கலந்த இலக்கியங்கள் தேவைப்பட்டன. தென்னகத்தில் தமிழ் அந்தணர்கள், அல்லது ஆதி சைவர்கள் என்று கூறப் பட்டவர்கள், பார்ப்பனர்களாக மாறத் தொடங்கினர். வட நாட்டு ஆரிய பார்ப்பனர்களைப்போல தங்களைக் கருதிக் கொண்டு செயல்படத் தொடங்கினர். சிதம்பரம் தீட்சப் பார்ப்பனர்கள் மற்றும், திருச்செந்தூர் பார்ப்பனர்களின் குடுமி, பூணூலை நீக்கி விட்டுப் பார்த்தால், அவர்கள் உருவத்தில் நம்மைப்போல் திராவிடர்களாகவே இருப்பதைப் பார்க்க முடியும். இப்படி தமிழ் அந்தணர்கள் பார்ப்பனர்களானவுடன், வெள்ளாளர்களை சாதிய அமைப்புக்குள் 'சூத்திரர்'களாக்கி, தங்களுக்கு கீழானவர் களாக்கினர். தங்களை 'சற்சூத்திரர்'கள் என்றும், (சிறந்த சூத்திரர்கள்) வெள்ளாளர்கள் பெருமையுடன் கூறிக் கொண்டனர். இவர்களே வைசியர், சத்திரியர்களாக இருக்கவும், பார்ப்பனர்கள் அனுமதித்தனர். அக் கால கட்டத்தில் தான் சாதியை விட்டு நீக்கப்பட்டவர்கள் (out caste) என்ற பிரிவும் தென்னகத்தில் உருவானது என்று விரிவான வரலாற்றுத் தகவல்களை முன் வைக்கிறது - அக்கட்டுரை.

**– 'ரிவோல்ட்' 18, 25, ஆகஸ்ட் 1, 15, 22, செப்டம்பர், 1929 இதழ்கள்.**


**– 'இரா'**

**தொடரும்**

## பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் முடிவெய்தினார்

### கழக சார்பில் பொதுச்செயலாளர் இராமகிருட்டிணன் – தோழர்கள் இறுதி மரியாதை

ஆழமான பெரியாரியல் சிந்தனையாளரும் பெரியாரியல் தொண்டுக்கு அடக்கமாக தன்னை அர்ப்பணித்துக் கொண்டு உழைத்தவரும், அரிய படைப்புகளை வழங்கியவருமான, பெரியார் பேருரையாளர் பேராசிரியர் கு.வெ.கி. ஆசான் முடிவெய்தினார் என்ற துயரச் செய்தியை அறிவிக்க வருந்துகிறோம்.



கடந்த **22.10.2010** அன்று மாலை நெஞ்சு வலி காரணமாக அவர், பெரியார் திடலிலிருந்து மருத்துவமனைக்கு கொண்டு செல்லும்போது முடிவெய்தினார். அவருக்கு வயது **75. 1935** ஆம் ஆண்டு டிசம்பர் **23** ஆம் தேதி கோவை மாவட்டம் உடுமலைப்பேட்டையில் பிறந்தவர். அன்று இரவே அவரது உடல் கோவையிலுள்ள அவரது இல்லத்துக்கு கொண்டு செல்லப்பட்டது. வடகோவை யிலுள்ள அவரது கல்வியகத்தில் அவரது உடல் வைக்கப்பட்டது. கழக சார்பில் பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், செயற்குழு உறுப்பினர் ஆறுச்சாமி உள்ளிட்ட ஏராளமான கழகத் தோழர்கள் இறுதி வணக்கம் செலுத்தினர். தி.மு.க., அ.தி.மு.க., பொதுவுடைமைக் கட்சிகளைச் சார்ந்த முன்னணித் தலைவர்கள், தங்கள் இறுதி மரியாதையை செலுத்தினர்.

வடகோவை கல்வியகத்தில் **23** ஆம் தேதி பிற்பகல் **2** மணியளவில் நடந்த இரங்கல் கூட்டத்துக்கு திராவிடர் கழகத் துணைப் பொதுச்செயலாளர் பிறைநுதல்செல்வி தலைமை தாங்கினார். கழக சார்பில் பொதுச் செயலாளர் இராமகிருட்டிணன் மற்றும் அனைத்துக் கட்சியைச் சார்ந்தவர்கள் இரங்கல் உரையாற்றினர். எவ்வித மூடச் சடங்குகளும் இன்றி மாலை **4** மணியளவில் கோவை சரவணப்பட்டி மின் சுடுகாட்டில் உடல் எரியூட்டப்பட்டது. கு.வெ.கி. ஆசானின் மறைவு பெரியாரியலுக்கு பேரிழப்பாகும். தன் முனைப்பு இல்லாத சிந்தனையின் நிறை குடமாக அவர் திகழ்ந்தார்.

கருத்தாழமிக்க அவரது படைப்புகளான - மொழி உரிமை, வருணசாதி உருவாக்கம், தமிழ் வரலாற்றில் தந்தை பெரியார், பாரதியார் - பாவேந்தர் - பெரியார், குமரன் ஆசான், சாகுமகராஜ், ஈழத் தமிழர் உரிமைப்போர் வரலாறு, மனித உரிமைப் போரில் பெரியார் பேணிய அடையாளம் ஆகிய நூல்களின் வழியாக, அவர் என்றும் வாழ்வார். உலகப் புகழ் பெற்ற கடவுள் மறுப்பு நூலான ரிச்சர்ட் டாக்கின்சின் 'The God Delusion' நூலை 'கடவுள்; ஒரு பொய் நம்பிக்கை' எனும் தலைப்பில் தமிழ் உலகிற்கு அறிமுகம் செய்த பெருமையும் அவருக்கு உண்டு.

அவரது துணைவியார் சாரதா மணி, மகள் உமா, மகன்கள் செந்தில், குமார் ஆகியோருக்கு பெரியார் திராவிடர் கழக சார்பில் ஆழ்ந்த துயரத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். **– ஆசிரியர்**

# பொள்ளாச்சியில் கழகம் நடத்திய ஆர்ப்பாட்டம்



அரசாணைகள் மற்றும் நீதிமன்ற தீர்ப்பு களுக்கும் எதிராக காவல் நிலையங்கள், கல்வி நிலை யங்கள், பொதுத்துறை நிறுவனங்களிலும் கடவுளர் படங்கள் நிரம்பி வழிகின்றன. வெள்ளிக் கிழமை பூசைகள் வாராவாரம் நடக்கின்றன. ஆயுத பூசை, விசய தசமி விழாக்கள் வெகு சிறப்பாக நடத்தப்படுகின்றன.

இந்த சட்ட விரோத நடவடிக்கைகளை தடை செய்யக் கோரி 13.10.2010 மாலை 5 மணி யளவில் பொள்ளாச்சி திருவள்ளுவர் திடலில் நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி தலைமை யில் கண்டன ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. இதில் திருப்பூர் மாவட்ட தலைவர் சு. துரை சாமி, மாநகர செயலாளர் முகில்ராசு, கோவை மாவட்ட செயலாளர் காசு. நாகராசன், ஆனைமலை நகர தலைவர் அப்பாதுரை, நகர செயலாளர் வே. அரிதாசு, ஒன்றிய தலைவர்கள் பெரியார் மணி, சோ. மணிமொழி, த. கண்ணன், மாணவரணி அமைப் பாளர்கள் கணேசுகுமார், நல்ல தம்பி, கிளைக் கழக தலைவர் கா.க.புதூர் மாரிமுத்து, செய லாளர் த. மணி, பொள்ளாச்சி நகர பொறுப்பாளர் கலை இராசேந்திரன், பகுத்தறிவாளர் பேரவை அமைப்பாளர் சி. விசய ராகவன் உள்ளிட்ட 50-க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து 15.10.2010 அன்று பொள்ளாச்சி வருவாய் கோட்டாட்சியர், காவல்துறை துணை கண்காணிப்பாளர்கள், நகராட்சி அலுவலர், கல்வித் துறை, போக்குவரத்துத் துறை அலுவலர்களுக்கும் தனித்தனியே கழகத்தின் சார்பில் மனு அளிக்கப் பட்டது.

சட்டத்தை மீறுகிற அரசு துறைகள், சட்டப்படி நடக்க வலியுறுத்தி கழகம் முன்னெடுத்த இம்முயற்சி பொள்ளாச்சி பகுதி அரசு துறைகளில் பதட்டமான சூழலை உருவாக்கியுள்ளது.

## 30 இடங்களில் பெரியார் படத்திறப்பு

தந்தை பெரியாரின் 132 ஆவது பிறந்த நாள் விழா, பொள்ளாச்சி - ஆனைமலை - கிணத்துக்கடவு நகர ஒன்றிய பகுதிகளில் எழுச்சியோடு கொண்டாடப்பட்டது. செப்டம்பர் 17 காலை 10 மணிக்கு பொள்ளாச்சி சங்கம்பாளையம் காலனி பகுதியில் வடக்கு ஒன்றிய செயலாளர் இரா. சீனிவாசன், தந்தை பெரியாரின் படத்தினைத் திறந்து கழகக் கொடியேற்றி நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். தொடர்ந்து தாட்கோ காலனி, காந்தி சிலை, கோட்டாம் பட்டி, தேர்நிலை ஆகிய பகுதிகளில் நகர செயலாளர் வே. வெள்ளிங்கிரி, நகர பொருளாளர் கலை இராசேந்திரன் ஆகியோர் தலைமையிலும், முத்து லே-அவுட் பகுதியில் தவசி தலைமையிலும், காமராசு நகர் பகுதியில் செந்தில் குமார் தலைமையிலும், சூளேசுவரன் பட்டியில் மகேந்திரன் தலைமையிலும், தங்கம் திரையரங்கம், சீனிவாசபுரம், சமீன் ஊத்துக்குளி ஆகிய இடங்களில் தெற்கு ஒன்றிய செயலாளர் த. கண்ணன் தலைமையிலும், எம்.ஜி.ஆர்.- காளிங்கராயர் நகர் பகுதியில் கண்ணன் தலைமையிலும், ந.க.புதூர், சுங்கம், காகித ஆலை, வளந்தாயமரம் ஆகிய பகுதிகளில் ஒன்றியத் தலைவர் சோ. மணிமொழி, ஒன்றிய செயலாளர் மு. சம்பத் ஆகியோர் தலைமையிலும், கா.க.புதூரில் கிளைக் கழகத் தலைவர் பழ. மாரிமுத்து, கிளை செயலாளர் த. மணி தலைமையிலும், படத்திறப்பு கொடியேற்று விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. மதியம் 2 மணியளவில் கா.க.புதூர் கிளைக் கழகம் சார்பில் தோழர்கள் அனைவருக்கும் மாட்டுக்கறி விருந்து வழங்கப்பட்டது.

பின் மாலை 4 மணிக்கு ஆத்துப் பொள்ளாச்சியில் பேச்சிமுத்து தலைமையில் படத்திறப் புடன் தொடங்கிய நிகழ்ச்சி தொடர்ந்து சேத்துமடையில் உத்தரராஜ் தலைமையிலும், வே.கா.புதூர் கணேசு தலைமையிலும், சுல்லிமேட்டுப் பகுதி பெரியார் நகரில் மணி தலைமை யிலும், இந்திரா நகரில் மகாலிங்கம் தலைமையிலும், ஆனைமலையில் நகர தலைவர் அப்பாதுரை தலைமையிலும் படத்திறப்பு கொடியேற்று விழா நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. தொடர்ந்து மாலை 7 மணியளவில் ஆனைமலை மினி கல்யாண மண்டபத்தில் எழுச்சிப் பாடகர் சமர்ப்பா குமரனின் இன உணர்வு இசை நிகழ்ச்சி நகர செயலாளர் வே. அரிதாசு தலைமையில் நடைபெற்றது.

காலையில் தொடங்கி இரவு வரை தொடர்ந்து நடைபெற்ற பெரியார் பிறந்த நாள் விழா நிகழ்ச்சிகளில் மாவட்ட தலைவர் கலங்கல் வேலுசாமி, மாவட்ட துணைத் தலைவர் சூலூர் பன்னீர்செல்வம், மாவட்ட செயலாளர் காசு. நாகராசன், பகுத்தறிவாளர் பேரவை அமைப் பாளர்கள் இரா. மோகன், சி. விசயராகவன், தலைமைக் கழகப் பரப்புரையாளர் சூலூர் வீரமணி, கிணத்துக் கடவு ஒன்றியத் தலைவர் பெரியார் மணி, ஒன்றிய செயலாளர் நிர்மல் உள்ளிட்ட கழகத் தோழர்கள், நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். 30-க்கும் மேற்பட்ட இரு சக்கர வாகனங்களில் தோழர்கள் கொடி பிடித்து அணி வகுத்து வந்தது, அப்பகுதி மக்களிடையே பெரும் எழுச்சியை ஏற்படுத்தியது.

19.09.2010 அன்று கிணத்துக்கடவு நகரில் ஒன்றியத் தலைவர் பெரியார் மணி தலைமையில் படத்திறப்பு விழா நடந்தது. ஒன்றிய செயலாளர் நிர்மல் முன்னிலை யில் தே.மு.தி.க. மாவட்ட கவுன்சிலர் எல்.ஜே.ஜே. ஜெகன் பெரியார் படத்தினை திறந்து வைத்தார். இந்நிகழ்விலும் அனைத்துக் கட்சியினரும் கலந்து கொண்டனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம் ரூ.150/-
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
தொடர்புக்கு புதிய எண்:
✆ 99416 13535

# உள்ஒதுக்கீட்டை எதிர்ப்பதா? கொளத்தூர் மணி கேள்வி

19.10.2010 செவ்வாய் மாலை 6 மணிக்கு, மதுரை மாவட்டம் அண்ணா நகர் நவீன் பேக்கரி அருகில், பெரியார் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டம் நடைபெற்றது. மதுரை மாநகர் மாவட்டத் தலைவர் வழக்குரைஞர் அ. பெரியசாமி தலைமையேற்றார். மாநகர் மாவட்டச் செயலாளர் விடுதலை சேகர் வரவேற்புரையாற்றினார். கூட்டத்தின் முதல் நிகழ்வாக தூத்துக்குடி பால். அறிவழகன், 'மந்திரமா, தந்திரமா ?' நிகழ்ச்சியை நடத்தி, சாமியார்களின் மோசடிகளை விளக்கினார். இந்தப் பகுதியில் கழகத்தின் முதற் கூட்டமும், நீண்ட இடைவெளிக்கு பிறகு நடைபெறும் பெரியார் இயக்கக் கூட்டமும் இதுதான் எனக் குறிப்பிட்ட தோழர் தமிழ்பித்தன், கழகம் நடத்திய போராட்டங்களைப் பற்றி விளக்கமாக பேசினார்.

தொடர்ந்து தூத்துக்குடி பால். பிரபாகரன், பெரியார் கொள்கை என்பது கடவுள் மறுப்பு மட்டும் அல்ல என்பதையும், ஏன் கடவுள் மறுப்பை பேசுகிறோம் என்பதை பற்றியும் விரிவாக உரையாற்றினார். நிறைவாக கழகத் தலைவர் கொளத்தூர் மணி சமுதாய பிரச்சினை களையும், எந்தெந்த காலகட்டத்தில் எப்படிப்பட்ட நிலையை பெரியார் எடுத்தார் என்பதையும், அப்படிப்பட்ட பெரியாரின் கொள்கைகளை மக்களிடம் கொண்டு சேர்க்க கழகம் செய்து வரும் பணிகள் பற்றியும் நீண்ட உரையாற்றினார். லேசான மழை பெய்த பொழுதும் இறுதி வரை பொது மக்கள் கவனமாக செய்திகளை கேட்டறிந்தனர்.

### கருத்தரங்கம்

20.10.2010 புதன் அன்று மாலை 5 மணிக்கு மதுரை மகபூப்பாளையம், மீனாட்சி திருமண மண்டபத்தில், தமிழ்ப் புலிகள் அமைப்பின் சார்பாக, அம்பேத்கர் பார்வையில் அருந்ததியர் உள் இடஒதுக்கீடு என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. புதிய புலிகள் அமைப்பின் பொதுச் செயலாளர் நாகை திருவள்ளுவன் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தியாகி இம்மானுவேல், பேரவை பொதுச் செயலாளர் பூ.சந்திர போசு, சாதி ஒழிப்பு விடுதலை முன்னணி அமைப்பாளர் வழக்கறிஞர் ரஜினிகாந்த், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மத்திய குழு உறப்பினர் என் வரதராஜன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர்.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில் :

"உள் இடஒதுக்கீடு என்று ஒன்று வந்தவுடன், ஏற்கனவே தாங்கள் அனுபவித்து வந்த இடங்கள் குறைந்துவிடுமோ என்ற அச்சத்தோடு, அதனால் தாங்கள் பாதிக்கப்பட்டு விடுவோம் என்று சொல்லி, தற்போது மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுத் துள்ளார்கள். இது மிக நீண்டகாலமாக இடஒதுக்கீடு என்று துவங்கிய காலத்திலிருந்து ஆதிக்கச்சாதிகள் செய்து வருகிற வேலைதான். 1885 ஆம் ஆண்டு காங்கிரஸ் தொடங்கப் பட்டதன் நோக்கம் இந்திய அரசு பணிகளை இந்திய மயமாக்கு என்ற கோரிக்கையோடு தான் ஆங்கிலேயர்கள் அதை வழங்கினார்கள். ஆனால், இந்தியர்களுக்கு என்று வாங்கி அதை பார்ப்பனர்கள் மட்டுமே அனுபவித்தனர். இதை சில ஆண்டுகளுக்கு பின்னாள் தெரிந்து கொண்டு இஸ்லாமியர்களுக்கு தனி ஒதுக்கீடு வேண்டும் எனக் கேட்டனர். அப்போதே உள் ஒதுக்கீடு தொடங்கி விட்டது.

அதன் பின்னர் தான் பார்ப்பனரல்லாதாருக்கு இடஒதுக்கீடு என்ற முழக்கத்தை குறிப்பாக தென்னாட்டில் நீதிக்கட்சித் தலைவர்கள் வைத்தார்கள். அப்போது இந்துக்களை பிரிக்காதே. இந்துக்களுக்குள் பிளவு ஏற்பட்டு விடும் என்று சொல்லப்பட்ட போது, சென்னை மாகாணத்தில் மக்களை எட்டுப் பிரிவாக பிரிக்கிறார்கள். இஸ்லாமியன், கிருத்துவன், ஐரோப்பியன் ஆகிய எல்லோரும் அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி இருக்கும்போது இந்துக்களையும், பார்ப்பனர், பார்ப்பரனல்லாதார், தீண்டப்படாதார் என பிரித்து இட ஒதுக்கீடு வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டு நீதிக்கட்சி கொண்டு வந்ததுதான் "வகுப்புவாரி உரிமை" . அது இப்போது இருப்பதைபோல் அல்லாமல் நூறு சதவீதமும் பிரித்து வழங்கப்பட்டது. இப்படி ஒதுக்கீடு வருகிறபோது முதலில் பார்ப்பனர்கள் எதிர்த்தார்கள்.

பிற்படுத்தப்பட்டவர்களுக்கு இடஒதுக்கீடு கேட்கிற பொழுது பார்ப்பனரல்லாதார் எதிர்த்தார்கள். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என தனி ஒதுக்கீடு கேட்கிறபொழுது பிற்படுத்தப்பட்டவர்கள் எதிர்த்தார்கள். இப்பொழுது அருந்ததியருக்கு தனி ஒதுக்கீடு என்கிற போது அதை தாழ்த்தப்பட்டவர்கள் எதிர்க்கிறார்கள். இப்படி அனுபவித்து கொண்டிருக்கும் ஆதிக்கவாதியாக இருப்பவர்கள் தங்களை மாற்றிக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டார்.

**செய்தி: கோகுல கண்ணன்**

## தீபாவளி கண்டன துண்டறிக்கைகள் தயார்

பெரியார் திராவிடர் கழக சார்பில் தீபாவளி மடமையை மக்களிடம் விளக்கும் துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டுள்ளன. கழகத் தோழர்கள் கீழ்க்கண்ட தோழர் களிடம் தொடர்பு கொண்டு துண்டறிக்கைகளைப் பெற்று மக்களிடம் பரப்புமாறு கேட்டுக் கொள்கிறோம்.

| | | பேசி: | | | பேசி: |
|---|---|---|---|---|---|
| சுகுமாறன் | - | 9962934373 | இராவணன் | - | 9786889325 |
| புதியவன் | - | 9842806098 | கோகுலகண்ணன் | - | 9787707197 |

1000 துண்டறிக்கைகளுக்கான விலை ரூ.400/-

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted on: 28th October 2010

பெறுநர்

OWNER & PUBLISHER : ANOOR JAGADEESAN, PUBLISHED AT 15, MYLAPPAR STREET, AYANAVARAM, CHENNAI - 600 023. PRINTED BY : S. THEESMAS AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014. EDITOR : VIDUTHALAI RAJENDRAN.